அக்டோபர் – டிசம்பர் (2025)

جماعت اسلامی ہند

# கடந்து வந்த பாதை

மின்னிதழ்

WWW.JIHTN.ORG




## ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்

தமிழ்நாடு - புதுச்சேரி

# ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மெட்ரோ சென்னை சார்பில் லேனா தமிழ்வானன் அவர்களை மரியாதை நிமித்தமாக சந்திப்பு

ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் மெட்ரோ சென்னை சார்பாக 01.10.2025 அன்று பத்திரிகையாளர், எழுத்தாளர், பதிப்பாளர் மற்றும் சிந்தனையாளர் மரியாதைக்குறிய லேனா தமிழ்வானன் அவர்களை சந்தித்தோம். இந்தச் சந்திப்பின் போது இஸ்லாம், ஆன்மிகம், ஆளுமை, இஸ்லாமிய கண்ணோட்டம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து விரிவான கலந்துரையாடல் நடைபெற்றது. இச்சந்திப்பில் மெட்ரோ நாஜிம், மெட்ரோ செயலாளர் மற்றும் மக்கள் தொடர்பு செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன் போது, டாக்டர் KVS ஹபீப் முஹம்மது எழுதிய இஸ்லாம் மனித குலத்திற்கு வழங்கியது என்ன?, கடவுள் உண்டு கடவுள் ஒன்று மற்றும் அத்தாவுல்லாஹ் அவர்கள் தொகுத்த திருக்குர்ஆன் கூறும் எடுத்துக்காட்டுகள், மேலும் நான்கு கலீபாக்களின் வரலாறு ஆகிய நூல்கள் லேனா தமிழ்வானன் அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன. அவற்றை அவர் மிக்க கண்ணியத்துடன் பெற்றுக் கொண்டார்.



# காந்தி ஜெயந்தி அன்று மத நல்லிணக்க மற்றும் மக்கள் ஒற்றுமை உறுதிமொழி ஏற்பு.

மக்கள் ஒற்றுமை மேடை சார்பாக மகாத்மா காந்தி பிறந்த நாளை முன்னிட்டு, மத நல்லிணக்கமும் மக்கள் ஒற்றுமையும் வலியுறுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் காந்தி சிலை அருகே மத நல்லிணக்க–மக்கள் ஒற்றுமை உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. அதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டும் அக்டோபர் 2ஆம் தேதி காலை 10 மணி அளவில் ஒசூர் காந்தி சிலை அருகே இந்நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மத நல்லிணக்கத்தை விரும்பும் பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். ஒசூர் ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் சார்பாக சகோதரர் ஜாகிர் உசேன், மக்கள் ஒற்றுமை மேடை சார்பாக சகோதரர் லெனின், விவசாயிகள் சங்கம் சார்பாக தோழர் சேது மாதவன், காங்கிரஸ் பேரியக்கம் சார்பாக சகோதரர் அலிமுத்தின், தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக தோழர் பாலகிருஷ்ணன் உள்ளிட்ட பல்வேறு ஒத்த கருத்துடைய அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். நிகழ்ச்சியின் இறுதியில், அனைவரும் காந்தி சிலை முன்பாக மத நல்லிணக்கமும் மக்கள் ஒற்றுமையும் குறித்த உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர்.



## மாநிலங்களவை உறுப்பினர் சந்திப்பு.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் துவரங்குறிச்சி கிளை மகளிர் அணி சார்பாக, திமுக மாநிலங்களவை உறுப்பினர் சகோதரி ரொக்கையா மாலிக் என்ற சல்மா எம்.பி. அவர்களை சந்தித்தோம். அவர் மாநிலங்களவை உறுப்பினராக ஆனதற்காக வாழ்த்து தெரிவித்தோம். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் குறித்து மற்றும் அதன் அடிப்படையில் துவரங்குறிச்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து அவருக்கு விளக்கமாகத் தெரிவித்தோம். இதற்கு பதிலாக, ஜமாஅத்தை குறித்து தமக்கு நல்ல எண்ணம் இருப்பதாக அவர் எங்களிடம் தெரிவித்தார். இச்சந்திப்பின் போது, 'உதயதாரகை' இதழ் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினர்களும் ஊழியர்களும் கலந்து கொண்டு அவரைச் சந்தித்தனர்.

## சமூக நல்லிணக்க மீலாது விழா...




தென்னக ரயில்வே மீலாது கமிட்டியின் சார்பாக சமூக நல்லிணக்க மீலாது விழா நடைபெற்றது. தமிழ்நாடு மைனாரிட்டி கமிஷன் தலைவர் ஃபாதர் ஜோ.அருண் ,ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு மாநில செயலாளர் SN. சிக்கந்தர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். பள்ளி இறுதி தேர்வில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கி சிறப்பித்தனர். மீலாது கமிட்டி தலைவர் அகமது இஸ்மாயில் வரவேற்றார். செயலாளர் மொய்தீன் ஷெரிஃப் நன்றி கூறினார்.




## நல்லாசிரியர் விருது (2025) பெற்ற ஆசிரியை அவர்களை ஜமாஅத் மகளிர் அணியினர் சந்திப்பு

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் துவரங்குறிச்சி கிளை மகளிர் அணி சார்பாக, திமுக மாநிலங்களவை உறுப்பினர் சகோதரி ரொக்கையா மாலிக் என்ற சல்மா எம்.பி. அவர்களை சந்தித்தோம். அவர் மாநிலங்களவை உறுப்பினராக ஆனதற்காக வாழ்த்து தெரிவித்தோம். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் குறித்து மற்றும் அதன் அடிப்படையில்



துவரங்குறிச்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து அவருக்கு விளக்கமாகத் தெரிவித்தோம். இதற்கு பதிலாக, ஜமாஅத்தை குறித்து தமக்கு நல்ல எண்ணம் இருப்பதாக அவர் எங்களிடம் தெரிவித்தார். இச்சந்திப்பின் போது, 'உதயதாரகை' இதழ் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினர்களும் ஊழியர்களும் கலந்து கொண்டு அவரைச் சந்தித்தனர்.

## சமூக மாற்றத்தில் இளைஞர்களின் பங்கு...

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கிருஷ்ணகிரி கிளை சார்பாக, "சமூக மாற்றத்தில் இளைஞர்களின் பங்கு" என்ற தலைப்பில் 10.10.2025 வெள்ளிக்கிழமை மக்ரிப் தொழுகை முதல் இஷா தொழுகை வரை மஸ்ஜிதே இலாஹி மௌஹலின் இல் சிறப்பான நிகழ்ச்சி நடைபெற்றது. மஸ்ஜிதே இலாஹி மௌஹலின் தலைவர் ஜனாப் சர்தார் சாஹெப் அவர்கள் தலைமையில்வழங்கினார். அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சிறப்பு மருத்துவர் டாக்டர் முஹையுதீன் MBBS, MS, MCH (Uro) அவர்கள், இன்றைய இளைஞர் சமுதாயத்தில் நிலவும் சீர்கேடுகளை பட்டியலிட்டு, அவற்றை களைவதற்காக இளம் சஹாபாக்களின் வாழ்விலிருந்து நாம் பெற வேண்டிய முன்னுதாரணங்களையும் படிப்பினைகளையும் நம் மனத்திரையில் கொண்டு வந்து காட்சிப்படுத்தும் வகையில் விளக்கமாக எடுத்துரைத்தார்.



## ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் ஓசூர் - ராபிதத்துல் உலமா கலந்துரையாடல் அமர்வு.

(20.10.2025) காலை 11 மணி முதல் மதியம் 1 மணி வரை ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் ஓசூர் சார்பில் ஓசூர் பகுதி உலமாக்களுக்கான கலந்துரையாடல் அமர்வு நடைபெற்றது. இதில் பங்கு பெறுவதற்காக ராபிதத்துல் உலமா (உருது பிரிவின்) பொறுப்பாளர் ஹாபிஸ் முஹம்மது சமியுல்லா உமரி, (திருப்பத்தூர்) மௌலவி இர்ஷாத் உமரி (வாணியம்பாடி) அவர்களும் வருகை தந்தார்கள்.

ஓசூர் உலமாக்களில் மதினா மஸ்ஜித் இமாம் மௌலவி முஹம்மது ஷாஹித், மினா மஸ்ஜித் இமாம் மௌலவி முஹம்மது சிராஜ், துணை இமாம், நிம்ரா பள்ளி இமாம் மௌலவி ரியாசுத்தீன், சித்தீக்கா மஸ்ஜித் இமாம் மௌலவி முஹம்மது ஆரிப், பிஸ்மில்லா நகரில் மதரஸா நடத்தி வரும் மௌலவி முஹம்மது சாதிக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மௌலவி சிராஜ் அவர்கள் கிராஅத் ஓதி நிகழ்ச்சியை துவங்கி துவக்கி வைத்தார். ஓசூர் ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் நாஸிம் முஹம்மது ஆரிப் அவர்கள் சிறப்பு விருந்தினர்களை அறிமுகப்படுத்தி வந்து இருந்த உலமாக்களை வரவேற்றார்.

அடுத்து பேசிய ஹாபிஸ் மௌலவி முஹம்மது சமியுல்லா உமரி அவர்கள் ராபிதத்துல் உலமா நோக்கம் குறித்து எடுத்துரைத்தார். மேலும் ராபிதத்துல் உலமா வருமா ஆற்றி வரும் பணிகள் சிலவற்றை உதாரணங்களாக வரிசைப் படுத்தினார். மேலும் ஓசூரில் உள்ள உலமாக்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.



அடுத்ததாக பேசிய மௌலவி இர்ஷாத் உமரி அவர்கள் உலமாக்கள் உடைய பணி ஜும்மா பயானை தாண்டி ஜும்மா தொழுகைக்கு பின்பும் பொது மக்கள் உடன் சில நிமிடங்கள் கலந்துரையாடல் செய்வது எப்படி பயனளிக்கும் என்பதை தனது அனுபவத்தின் மூலம் பகிர்ந்து கொண்டார். பொது மக்கள் குறிப்பாக இளைஞர்களை தங்களுடைய தொடர்பில் வைத்திருப்பதன் மூலம் அவர்களை நல்வழிப்படுத்த முடியும் என்று பதிவு செய்தார். பிறகு வந்திருந்த அனைத்து உலமாக்களும் தங்களுடைய பகுதியில் உள்ள மக்கள் பிரச்சனைகளையும் அவற்றை போக்க தாங்கள் மேற்கொண்டு வரும் முயற்சிகளையும் எடுத்துரைத்தனர். இறுதியில் அனைவரும் குறிப்பிட்ட கால இடைவெளியில் சந்திக்க முயற்சி செய்வது என்று முடிவு செய்யப்பட்டது. நாஸிம் முஹம்மது ஆரிப் வந்திருந்த அனைவருக்கும் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து உலமாக்களுக்கும் மதிய உணவு வழஙகி கௌரவிக்கப்பட்டது.

## தமிழ்நாடு தலைமை காஜியை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநில நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்துகள் தெரிவித்தனர்.

தமிழ்நாடு தலைமை காஜி மௌலானா முஃப்தி N.P. உஸ்மான் முஹைதீன் பாகவி, காஸிமி அவர்களை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலத் தலைவர் மௌலவி M.A. முஹம்மத் ஹனீஃபா மன்பயீ, மாநில துணைத் தலைவர் T. யூசுஃப் பாஷா மற்றும் மாநில அமைப்புச் செயலாளர் K. ஜலாலுத்தீன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துகள் தெரிவித்தனர். இச்சந்திப்பின் போது மௌலவி சாகுல் ஹமீத் பாகவி உடனிருந்தார்.



## “வெற்றியின் பக்கம் வாருங்கள்” சிறப்பு நிகழ்ச்சி ஓசூரில் நடைபெற்றது.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் ஓசூர் கிளை சார்பாக “வெற்றியின் பக்கம் வாருங்கள் (ஹைய்ய அலல் ஃபலாஹ்)” என்ற சிறப்பு நிகழ்ச்சி நேற்று (26.10.2025) ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. குர்ஆன் கிராஅத்தை மௌலவி முஹம்மது சிராஜ் (மினா பள்ளி இமாம்) அவர்கள் ஓதி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். ஓசூர் வட்டப் பொறுப்பாளர் முஹம்மது ஆரிப், நிகழ்ச்சிக்கு வந்திருந்தோரை வரவேற்று, “வெற்றியின் பக்கம் வாருங்கள்” என்ற தலைப்பின் நோக்கத்தை விளக்கினார். தொடர்ந்து சிறப்பு பேச்சாளராக கலந்துகொண்ட ஜனாப் அப்துல் ஹமீது (மண்டல அமைப்பாளர்,

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்) அவர்கள், குர்ஆன் வெற்றிக்கான வழிகாட்டி என்பதை விளக்கி, முஸ்லிம்களின் வாழ்வில் குர்ஆன் எவ்வாறு இரண்டறக் கலந்திருக்க வேண்டும் என்பதையும், குர்ஆனுடன் நமது தொடர்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார். வாணியம்பாடியிலிருந்து வந்திருந்த மற்றொரு சிறப்பு பேச்சாளர் ஜனாப் அத்தீக் குர் ரஹ்மான் (ஜன சேவா வங்கி துணை மேனேஜிங் டைரக்டர்) அவர்கள், நிகழ்ச்சியின் மையக் கருத்தான "வெற்றியின் பக்கம் வாருங்கள்" என்ற தலைப்பில் உரையாற்றி, இந்தத் தலைப்பு உணர்த்தும் அர்த்தம், வெற்றியை நோக்கிய நமது பயணம் எவ்வாறு அமைய வேண்டும், மறுமையில் மட்டுமல்லாமல் இம்மையிலும் வெற்றி பெறுவது எப்படி என்பதைத் தெளிவாக எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் ஆண்களும் பெண்களுமாக சுமார் 50 பேர் கலந்து கொண்டனர்.



## இல்லத் திருமண விழாவில் புத்தக அரங்கம்...

திருப்பூரில் இஸ்லாமிய சமூகத்தின் அந்தஸ்துமிக்க ஆளுமை ஒருவரின் இல்ல திருமண விழாவில், புத்தகங்களைப் படிக்க ஆர்வம் ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நூல்களை உள்ளடக்கிய புத்தக ஸ்டால் அமைக்கப்பட்டிருந்தது. இதில், திருப்பூரில் செயல்பட்டு வரும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அமைப்பிற்கும் புத்தக ஸ்டால் அமைக்க அழைப்பு விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, திருமண விழாவில் IFT புத்தகம் காட்சிப்படுத்தப்பட்டது. திருமணத்திற்கு வந்த ஏராளமான மக்கள் புத்தகங்களை வாங்கிச் சென்றதுடன், இஸ்லாம் பற்றிய அழைப்பையும் ஆர்வத்துடன் கேட்டறிந்து, அதன் நிலைப்பாடுகளை அறிந்து கொண்டனர். இந்நிகழ்வில் ஆலிம்கள், உலமாக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். மேலும், பொதுமக்களுக்கு திருக்குர்ஆன் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.



## SIR 2026 - நமது வாக்கு நமது உரிமை பிரச்சார இயக்கத்தின் சிறப்புக் கூட்டம்.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு மாநிலத் தலைவர் மௌலவி. முஹம்மது ஹனீஃபா மன்பஈ அவர்களது தலைமையில், ஜமாஅத் அகில இந்திய செயலாளர் ஜனாப். வாசிம் நதீம் அவர்கள் கலந்து கொண்டு






சிறப்புரையாற்றிய SIR 2026 - நமது வாக்கு, நமது உரிமை பிரச்சார இயக்கத்தின் சிறப்பு நிகழ்வு கோவையில் - 13 நவம்பர் 2025 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் SIR 2026 ன் போது தமிழகத்தில் நாம் களமாட வேண்டிய அவசியம், திட்டங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. இந்நிகழ்வில் ஜமாஅத் தமிழக துணைத் தலைவர் ஜனாப். I. ஜலாலுதீன் சாஹிப் அவர்களும், ஜமாஅத் முன்னாள் மாநிலத் தலைவர் ஜனாப். ஷப்பீர் அஹமது சாஹிப் அவர்களும், ஜமாஅத் கோவை பெருநகரத் தலைவர் ஜனாப். P.S. உமர் ஃபாரூக் சாஹிப் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்வில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஊழியர்கள் வருகை தந்தனர்.

## சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினருடன் ஜமாஅத் நிர்வாகிகள் சந்திப்பு.



நவம்பர் 13, 2025 அன்று ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) சேலம் வட்டம் சார்பில், மண்டல அமைப்பாளர் ஜனாப் S.A.K. ஜெய்லானி அவர்கள் தலைமையில், பாட்டாளி மக்கள் கட்சியின் மாநில நிர்வாகியும் சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினருமான திரு. அருள் இராமதாஸ் அவர்களை சந்தித்து வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது. இச்சந்திப்பின் போது, அகில இந்திய அளவில் ஜமாஅத்தின் பணிகள் குறித்து விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டதுடன், சேலம் மாநகரில் தங்குதடையின்றி போதைப்பொருட்கள் கிடைப்பதாலும் அதனால் இளைய சமுதாயம் கடுமையாக பாதிக்கப்படுவதையும் சுட்டிக்காட்டி, போதைப் பழக்கத்திற்கு எதிராக சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பு நடத்தி வரும் போதை ஒழிப்பு பிரச்சாரங்கள் குறித்தும் எடுத்துக் கூறப்பட்டது. மேலும், இதுபோன்ற சமூகப் பிரச்சினைகளில் இணைந்து செயல்படுமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டதற்கு, அவர் முழு



ஒத்துழைப்பு வழங்குவதாக வாக்குறுதி அளித்தார். இச்சந்திப்பில் ஜமாஅத் சேலம் வட்ட பொறுப்பாளர்கள் ஜனாப் F. அஸ்லம், ஜனாப் முஸ்தபா, ஜனாப் ஹபீப் ரஹ்மான், சகோதரர்கள் ஆசிக் தாவூத், ஆதர் மற்றும் சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பின் மாநில

செயலாளர் சகோதரர் ஜாஃபர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## கும்பகோணத்தில் ஒருநாள் தர்பியா பயிற்சி–பண்பாட்டு நிகழ்வு




கும்பகோணம் கிளை சார்பாக 15.11.2025 அன்று ஒருநாள் தர்பியா (பயிற்சி/ பண்பாட்டு) நிகழ்வு நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட ஜனாப் சாதிக் பாஷா அவர்கள் ‘முன்மாதிரி இயக்க ஊழியர்’ என்ற தலைப்பிலும், ஜனாப் டாக்டர் பெரோஸ் கான் அவர்கள் ‘தனிமனித சீர்திருத்தமும் குடும்ப உறவுகளும்’ என்ற தலைப்பிலும் சிறப்புரைகள் ஆற்றினர். மதிய உணவு இடைவேளைக்குப் பின்னர் புத்தகத் திறனாய்வு நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வின் தொகுப்புரையை டாக்டர் பெரோஸ் கான் அவர்கள் வழங்க, நிறைவாக ஜனாப் சாதிக் பாஷா அவர்கள் நிறைவுரை வழங்கினார். இத்தர்பியா நிகழ்வில் கிளையின் உறுப்பினர்கள், ஊழியர்கள் மற்றும் அபிமானிகள் என மொத்தம் 98 பேர் கலந்து கொண்டனர். இதில் 50 பெண்கள், 40 ஆண்கள் மற்றும் 8 GIO மாணவிகள் அடங்குவர். அல்ஹம்துலில்லாஹ், இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

## சாதனை மாணவர் முஹம்மது அனஸை ஜமாஅத் நிர்வாகிகள் சந்திப்பு.



டிசம்பர் 1(2025) திங்கட்கிழமை, தமிழ் நாடு அரசின் உயர் கல்வித்துறைக்கான நான் முதல்வன் திட்டத்தின் மூலம் வெளிநாடுகளில் பயிற்சி பெற்று உயரிய நிறுவனங்களில் மாணவர்கள் பணியமர்த்தப்படுகின்றனர். இதற்க்காக பல்வேறு கட்டங்களில் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. இதன்படி இந்த கல்வியாண்டில் 7 ஆயிரம் மாணவர்கள் பங்கு பெற்று தேர்வு எழுதினர். அவர்களில் 21 மாணவர்கள் தேர்வாகினர். அவர்களில் திருப்பூர் மாவட்டம் மங்கலம் ஊராட்சியில் வசிக்கும் அப்துல் ரசீது, தாஹிரா பானு தம்பதியினரின் மகன் சிக்கன்னா அரசு கல்லூரியில் கல்வி பயிலும் முகம்மது அனஸ் தேர்வாகியுள்ளார்.

அவரை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கோவை மண்டலத்தின் சார்பில் மண்டல அமைப்பாளர் ஜனாப்: S.A.K.ஜெய்லானி அவர்கள் தலைமையில் தெற்கு மண்டல அமைப்பாளர் ஜனாப்: K.நஜீர் ஹுஸைன் , மங்கலம் கிளை தலைவர் ஜனாப்: அப்துல் வதூத், மங்கலம் ஊழியர் வட்ட பொறுப்பாளர் ஜனாப்: கலீமுல்லாஹ் , ஊழியர்கள் முஜிபுர் ரஹ்மான், முகமது ரபி உள்ளிட்டவர்கள் முஹம்மது அனஸை சந்தித்து பரிசுகள் வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தனர்.



# "இலச்சினை (LOGO) வெளியீடு"

அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை இயக்கம் துவக்கம் குறித்த இலச்சினையினை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) மாநிலத் தலைவர் மௌலவி A.முஹம்மது ஹனிபா மன்பயீ அவர்கள் இன்று வெளியிட்டார்கள்.

இந்நிகழ்வில் மாநில துணைத் தலைவர் ஐ.ஜலாலுதீன், மாநில அமைப்புச் செயலாளர் கே.ஜலாலுதீன், பரப்புரை இயக்கம் கன்வீனர் மற்றும் கமிட்டி உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

# "பத்திரிக்கையாளர் சந்திப்பு நிகழ்ச்சி"

அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை குறித்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு & புதுச்சேரி சார்பில் சென்னை பத்திரிக்கையாளர் மன்றத்தில் பத்திரிக்கையாளர் சந்திப்பு 18.11.2025, செவ்வாய்க்கிழமை காலை 12 மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலத் தலைவர் மௌலவி A. முஹம்மது ஹனிபா மன்பயீ அவர்கள் கலந்து கொண்டு பரப்புரையின் நோக்கம் குறித்து பத்திரிக்கையாளர்கள் முன்பு விரிவாக எடுத்துரைத்தார். மேலும், “ஏன் இந்த பரப்புரையை நடத்துகிறீர்கள்?”, “இது அரசியல் சார்ந்த நிகழ்ச்சியா?”, “இது முஸ்லிம்களுக்கு மட்டுமா அல்லது முஸ்லிம் அல்லாத அனைவருக்கும் தானா?”, “பரப்புரையில் என்ன செய்ய இருக்கிறீர்கள்?”, “எல்லா ஜமாஅத்தும் சேர்ந்து செய்கிறீர்களா?”, “இது அகில இந்திய பரப்புரையா அல்லது தமிழகத்திற்கானதா?”, “தமிழ்நாடு நல்ல உறவுகளை பேணித் தானே இருக்கிறது; இங்கு ஏன் இதை செய்கிறீர்கள்?” உள்ளிட்ட பல்வேறு கேள்விகளை பத்திரிக்கையாளர்கள் முன்வைத்தனர். அனைத்து கேள்விகளுக்கும் மாநிலத் தலைவர் அவர்கள் விரிவான பதில்களை வழங்கினார். இந்நிகழ்வில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலத் துணைத் தலைவர் முஹம்மது யூசுப் பாஷா, மாநில அமைப்புச் செயலாளர் கே. ஜலாலுதீன், மாநில மகளிர் அணி செயலாளர் சகோதரி பாத்திமா ஜலால், சென்னை மெட்ரோ தலைவர் நஜீர் அத்தாவுல்லாஹ், சென்னை மாவட்ட மகளிர் அணி பொறுப்பாளர் சகோதரி ராஹிலா, அண்டை வீட்டார் பரப்புரை அமைப்பாளர் S. சாகுல் ஹமீது, ஜமாஅத்தின் உறுப்பினர்கள், ஊழியர்கள் மற்றும் பத்திரிக்கையாளர்கள் கலந்து கொண்டனர்.





## மதுரை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பில் 'அண்டை வீட்டாரின் உரிமைகள்' குறித்த அறிமுகக் கூட்டம் நடைபெற்றது.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மதுரை கிளையின் சார்பில், அண்டை வீட்டாரின் உரிமைகள் தொடர்பான பரப்புரைக்காக உறுப்பினர்கள், ஊழியர்கள் மற்றும் அபிமானிகளுக்கான அறிமுகக் கூட்டம் 15.11.2025 சனிக்கிழமை காலை 10.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை மதுரை இஸ்லாமிக் வளாகத்தில் நடைபெற்றது. திருக்குர்ஆன் விரிவுரையை சகோதரி நூர்மஜியா அவர்கள் வழங்கினர். தொடர்ந்து செல்லூர் வட்ட பொறுப்பாளர் சகோதரர் அவல்பீர் அவர்கள் வரவேற்புரையாற்றினர்.

மதுரை பரப்புரை கன்வீனர் மற்றும் முனிச்சாலை வட்ட பொறுப்பாளர் சகோதரர் முஹம்மது ரஃபி அவர்கள் அறிமுக உரையாற்றினர். அடுத்ததாக, மதுரை கிளை பொறுப்பாளர் மௌலவி முஹைதீன் குட்டி உமரி அவர்கள் தலைமை உரையாற்றினார். பின்னர், அண்டை வீட்டாரின் உரிமைகள் குறித்த சிறப்புரையை திருச்சி அஸ்ஸலாம் கல்லூரியின் பேராசிரியர் மௌலவி நூஹ் மஹ்ழரி அவர்கள் ஆற்றினர். இந்நிகழ்வில், இஸ்லாம் வலியுறுத்தும் அண்டை வீட்டாரின் மகத்துவம் தொடர்பாக பல்வேறு ஷரீஅத் சட்டங்களையும் வரலாற்று நிகழ்வுகளையும் எடுத்துக்கூறி விளக்கினார். இறுதியாக, மதுரை மகளிரணி பொறுப்பாளர் சகோதரி நஜ்மா அவர்கள் நன்றியுரை வழங்கியதுடன் நிகழ்ச்சி இனிதாக நிறைவு பெற்றது.

## காலடிப்பேட்டை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பில் 'அண்டை வீட்டாரின் உரிமைகள்' அறிமுகக் கூட்டம் நடைபெற்றது.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் காலடிப்பேட்டை கிளையின் சார்பாக, அண்டை வீட்டாரின் உரிமைகள் தொடர்பான பரப்புரைக்காக உறுப்பினர்கள், ஊழியர்கள் மற்றும் அபிமானிகளுக்கான அறிமுகக் கூட்டம் 16.11.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணி

முதல் நடைபெற்றது. முதலில், பரப்புரையின் அறிமுகம் குறித்து இதன் கன்வீனர் K. நிஜாமுதீன் அவர்கள் திருக்குர்ஆன் வசனங்களோடு தொடங்கி விரிவுரையாற்றினார். பின்னர் அப்பகுதியின் ஆலிம் சகோதரர் அலீம் அல் புகாரி அவர்கள் சிறப்புரையாற்றினார். இறுதியாக, கிளைத் தலைவர் ஜனாப் அப்துல் காதர் அவர்கள் பரப்புரை பற்றிய



விளக்கத்துடன் செயல் திட்டத்தையும் சுருக்கமாக வழங்கி நன்றியுரை ஆற்றினார். நிகழ்ச்சியில் அப்பகுதியைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் என சுமார் 50-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## மதுரையில் அண்டை வீட்டார் பரப்புரை தொடர்பாக JIH அணியின் சமூக செயற்பாட்டாளர் அ. முத்துகிருஷ்ணனுடன் சந்திப்பு...

அண்டை வீட்டார் பரப்புரை தொடர்பாக JIH மதுரை மகாமி தலைமையில் நடைபெற்ற குழுவின் ஆலோசனையின் படி முக்கியஸ்தர்கள் மற்றும் இமாம்கள் சந்திப்புகளை நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் இன்று பிரபல எழுத்தாளர், பேச்சாளர் மற்றும் சமூக ஆர்வலர் **அ. முத்துகிருஷ்ணன்** அவர்களுடன் சந்திப்பு நடைபெற்றது. இந்த சந்திப்பு



இனிமையானதோடு, பரப்புரையைப் பற்றிய ஆழமான கருத்துகளை பகிரக்கூடியதாக அமைந்தது. மேலும், சிறப்பு கருத்துக்கள் அடங்கிய ஒரு அருமையான காணொளியையும் அவர் ஆர்வத்துடன் வழங்கினார். இச்சந்திப்பில் மதுரை பரப்புரை JIH கன்வீனர் S. முஹம்மது ரஃபி மற்றும் மதுரை JIH உறுப்பினர் பொறுப்பாளர் A. அவல் பீர் ஆகியோர் கலந்து கொண்டோம்.

## மணப்பாறையில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பில் ஆலிம்களுக்கான அண்டை வீட்டார் உரிமைகள் கலந்துரையாடல்.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மணப்பாறை கிளையின் சார்பாக அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையின் ஒரு பகுதியாக ஆலிம் பெருமக்களுக்கான கலந்துரையாடல் 18.11.2025 அன்று காலை 8 மணியளவில் நடைபெற்றது. JIH மண்டல பொறுப்பாளர் சையத் முகமது அவர்கள் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். மணப்பாறை பகுதியைச் சேர்ந்த இமாம்களுக்கு



அழைப்பு விடுக்கப்பட்டு, அவர்களிடம் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்து பரப்புரையின் ஜும்மா உரை கையேடு வழங்கப்பட்டது. மக்கள் மத்தியில் அண்டை வீட்டார் உரிமைகளின் அவசியத்தை முன்னிறுத்தும் வகையில் வரும் ஜும்மா மேடைகளில் இதுகுறித்து உரை நிகழ்த்துமாறும், தற்கால சூழ்நிலைகளில் அதன் தேவையை வலியுறுத்துமாறும் ஆலோசிக்கப்பட்டது. கலந்துரையாடலை மணப்பாறை கன்வீனர் ஜாபர் உசேன் மன்பயீ

ஒருங்கிணைத்தார். ஆலிம்கள் அனைவரும் இந்த கருத்தை வரும் வெள்ளிக்கிழமை ஜும்மா மேடைகளில் மக்களிடம் வலியுறுத்த ஒப்புக்கொண்டனர். நிறைவாக மணப்பாறை கிளை தலைவர் ஜபருல்லா அவர்கள் செயல் திட்டத்தை விளக்கி நன்றியுரை ஆற்றினார்.

## திருச்சி பூக்கொல்லை தக்வா பள்ளிவாசலில் ஆலிம்களுக்கான அண்டை வீட்டார் உரிமைகள் சிறப்பு நிகழ்ச்சி.



அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக ஆலிம்களுக்கான சிறப்பு நிகழ்ச்சி இன்று 20.11.2025 காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை திருச்சி–தஞ்சை சாலை பூக்கொல்லை தக்வா பள்ளிவாசலில் நடைபெற்றது. திருச்சி மாவட்ட மாநகர வட்டார ஆலிம் பெருமக்கள் பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியில் மௌலவி அப்துல் ஹஸீப் பாகவி அவர்கள் இந்த பரப்புரையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். அண்டை வீட்டார் முதன்மை நெருக்கத்திற்குரியவர்கள்; பிற உறவினர்கள் வந்து சேர்வதற்கு முன்பே அண்டை வீட்டாரே உதவி கரம் நீட்டுபவர்கள், நமக்கு பாதுகாப்பாக இருப்பவர்கள், சுக–துக்கங்களில் முதலில் பங்கேற்கிறவர்கள் என்பதை அவர் வலியுறுத்தினார். கண்ணியத்துக்குரிய ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அண்டை வீட்டாருக்குச் சொத்தில் பங்கு தர வேண்டும் என நான் அச்சப்படுமளவிற்கு தொடர்ந்து வசிய்யத் செய்து கொண்டிருந்தார்கள் என பெருமானார் (ஸல்) குறிப்பிட்டதாகவும் அவர் தெரிவித்தார். இந்திய சூழலில் அண்டை வீட்டாருடனான நெருக்கம் முஸ்லிம்களுக்கு மிகவும் அவசியமானது; குஜராத் 2002 கலவரங்களில் ஏற்பட்ட பெரும் பாதிப்பிற்குக் காரணமாக அண்டை வீட்டினரின் பங்கு இருந்தது என்றும் அவர் நினைவூட்டினார். பாதுகாப்பிற்காகவும் இஸ்லாமிய செய்தியை எடுத்துச் செல்வதற்காகவும் அண்டை வீட்டாருடன் பழகுதல் கட்டாயம் என்பதைச் சுட்டிக்காட்டினார். இதனால் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் இந்த பரப்புரையை நாடு முழுவதும் மேற்கொண்டு வருவதையும், எந்த பரப்புரையாக இருந்தாலும் ஆலிம்களின் ஒத்துழைப்போடு செய்வது ஜமாஅத்தின் வழக்கம் என்பதையும், அந்த அடிப்படையில் ஆலிம்களைச் சந்தித்து இதை கவனப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைவதாகவும் அவர் உரையில் குறிப்பிட்டார். நிகழ்ச்சியில் 40 ஆலிம்கள் கலந்து கொண்டனர். குறிப்பாக, மாநிலம் தயாரித்து வழங்கிய ஜும்மா தயாரிப்புகள் அனைத்து உலமா பெருமக்களுக்கும் பகிரப்பட்டன.

## கிருஷ்ணகிரியில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பில் அண்டை வீட்டார் பரப்புரைக்கான முக்கிய நபர்கள் சந்திப்பு.



முன்மாதிரி அண்டை வீட்டார், முன்மாதிரி சமூகம் என்ற நாடு தழுவிய பரப்புரையின் ஒரு பகுதியாக ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கிருஷ்ணகிரி கிளையின் சார்பில் இன்று (20.11.2025) நகரின் முக்கிய நபர்களான திமுக கிழக்கு மாவட்ட கழக செயலாளரும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான **திரு மதியழகன்** MLA அவர்கள் மற்றும் கிருஷ்ணகிரி அதிமுக நகர கழக செயலாளர் **திரு P.N.A. கேசவன்** ஆகியோரை சந்தித்து சமரசம் பத்திரிகை, அண்டை வீட்டார் புத்தகம் மற்றும் மடக்கோலை

வழங்கப்பட்டது. பரப்புரையின் நோக்கம் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஜமாஅத் உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## மன்னார்குடியில் ஆலிம்களுடன் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அண்டை வீட்டார் பரப்புரை தொடர்பான சந்திப்பு.





ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மன்னார்குடி கிளையின் சார்பாக அண்டை வீட்டார் பரப்புரை வாயிலாக 19.11.2025 மற்றும் 20.11.2025 ஆகிய இரண்டு நாட்களிலும் மன்னார்குடி பெரிய பள்ளிவாசல், கீழப்பள்ளிவாசல், அஷேஷம் பள்ளிவாசல், மன்னார்குடி அருகிலுள்ள தென்பறை பள்ளிவாசல், திருமக்கோட்டை பள்ளிவாசல் மற்றும் கூத்தாநல்லூர் பெரிய கடைத்தெரு பள்ளிவாசல் ஆகியவற்றின் ஆலிம் பெருமக்களை சந்தித்து ஜும்மா உரை நிகழ்த்துமாறு வேண்டுகோள் வைக்கப்பட்டது. இதனுடன் ஜமாஅத் அனுப்பி வழங்கிய இணைப்பு கடிதமும் வழங்கப்பட்டது. பரப்புரையின் நோக்கம் பற்றியும் ஆலிம்களிடம் எடுத்துரைக்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஜமாஅத் உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## அண்டை வீட்டார் நலப் பரப்புரை தொடர்பாக பள்ளிக் கூடங்களில் குழு சந்திப்புகள்.





அண்டை வீட்டார் நலம் பேணல் பரப்புரை தொடர்பாக குழு ரீதியான சந்திப்பு நடைபெற்றது. கட்டுரை மற்றும் ஓவியம் வரைதல் குறித்து மாணவச் செல்வங்களுக்கு தகவல் வழங்குவதற்கான முயற்சியாக பல பள்ளிக் கூடங்களில் சந்திப்புகள் நடத்தப்பட்டன. பி.கே.என். பெண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியை சகோதரி குருவம்மாள், அல் அமீன் முஸ்லிம் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரிகள் சகோதரி ரியாஜ் நிசா, சகோதரி ஜெரினா, நகராட்சி பள்ளி தலைமை ஆசிரியை மற்றும் பி.கே.என். மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி துணை தலைமை ஆசிரியை சகோதரி லதா ஆகியோரை சந்தித்து பரப்புரையின் நோக்கங்கள் பற்றிய விளக்கங்கள் வழங்கப்பட்டன.

## திருப்பூர் காளியப்பா நகரில் அண்டை வீட்டார் உரிமைகள் சிறப்பு பரப்புரை நிகழ்ச்சி.

திருப்பூர் காளியப்பா நகர் பகுதியில் இன்று காலை 11.30 மணி முதல் 2.00 மணி வரை அண்டை வீட்டார் உரிமைகள் சிறப்பு பரப்புரை நிகழ்ச்சி நடைபெற்றது. முஹல்லா வாசிகள் அனைவரும் கலந்து கொண்டு, முதலில் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டதோடு தங்களின்

குடும்ப நிலவரத்தையும் பகிர்ந்து கொண்டார்கள். அதன் பின்னர் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிர் அணியின் பணிகள் மற்றும் அண்டை வீட்டார் பரப்புரையின் நோக்கம் குறித்து அவர்கள் விரிவாக எடுத்துரைத்தனர். ஜமாஅத் பெண்கள் தங்களுக்கு வழங்கும் உதவி மற்றும் எந்த குடும்ப நிகழ்வாக இருந்தாலும் அவர்கள் முழுமையாக பங்கேற்கும் தன்மை குறித்து கலந்து கொண்ட பெண்கள் மகிழ்ச்சியுடன் பாராட்டினர். பின்னர் அனைவரும் தாமாகவே உணவு தயாரித்துக் கொண்டு வந்து ஒன்றாக அமர்ந்து பலவகையான உணவுகளைச் சுவைத்து, நிகழ்ச்சியை மகிழ்ச்சிகரமாக நிறைவு செய்தனர். அல்ஹம்துலில்லாஹ், இந்நிகழ்ச்சியில் 60 பெண்கள் கலந்து கொண்டனர். இதனை காளியப்பா நகர் பொறுப்பாளர் ஜபின்பானு (உறுப்பினர்) மற்றும் பெனாசிர் நிஷா (ஊழியர்) ஒருங்கிணைத்தனர்.



## திருச்சியில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை குறித்து பத்திரிக்கையாளர் சந்திப்பு.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் அண்டை வீட்டாரின் உரிமைகள் பரப்புரையை முன்னிட்டு இன்று 20.11.2025 திருச்சியில் பத்திரிக்கையாளர் சந்திப்பு நடைபெற்றது. இந்நிகழ்வில்



ருக்கூன்களும் திருச்சி மண்டல அமைப்பாளர் சையது பாய் அவர்கள், ஊழியர்கள் மற்றும் பத்திரிக்கையாளர்கள் கலந்து கொண்டனர்.

## தஞ்சாவூரில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் பெண்கள் கிளையின் அண்டை வீட்டார் உரிமைகள் அறிமுக கூட்டம்.

அண்டை வீட்டாரின் உரிமைகள் பரப்புரையை முன்னிட்டு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தஞ்சாவூர் பெண்கள் கிளை பெண்கள் வட்ட பொறுப்பாளர் பாத்திமா ஜான் அவர்கள் தலைமையில் இன்று 20.11.2025 அறிமுக கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சியை மைமூன் ரோஜா வழிநடத்தினர். கிராத் ஆலிமா சலீமா அவர்கள் ஓதினார்கள்.



வரவேற்புரையை ஆலிமா தன்ஜிலா பானு அவர்கள் வழங்கினர். “அழகிய அண்டை வீட்டார்” என்ற தலைப்பில் முஸ்லிம் லீக் மாவட்டச் செயலாளர் ஜைனுல் ஆபிதீன் உரையாற்றினார். முஸ்லிம் லீக் துணைச் செயலாளர் அபுசாலிக் கலந்து கொண்டார். சிறப்புரையை திருச்சி மண்டல அமைப்பாளர் சையது பாய் அவர்கள் வழங்கினார். நன்றியுரையை சபீனா அவர்கள் ஆற்றினார். இக்கூட்டத்தில் 35 நபர்கள் கலந்து கொண்டனர்.

## புதுச்சேரியில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பில் ஜமாஅத்துல் உலமா தலைவருடன் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை தொடர்பான கலந்துரையாடல்.



அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையின் ஒரு பகுதியாக புதுச்சேரி வட்டார ஜமாஅத்துல் உலமா தலைவர் மௌலவி பிலால் ஹஜ்ரத் அவர்களை சந்தித்து கலந்துரையாடல் நடத்தப்பட்டது. இச்சந்திப்பில் சகோ. அப்சல் பாஷா அவர்கள் பரப்புரையின் தேவை மற்றும் நோக்கம் குறித்து எடுத்துரைத்ததோடு, தற்போது நடைபெற்று வரும் SIR எனப்படும் வாக்காளர் படிவம் பூர்த்தி செய்தல் தொடர்பாகவும் ஜும்மாவில் முஹல்லா வாசிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு கேட்டுக்கொண்டார். அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையின் ஜும்மா உரை தொகுப்பு மற்றும் சமரசம் சிறப்பிதழ் மௌலவி பிலால் ஹஜ்ரத் அவர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் புதுச்சேரி முழுவதும் உள்ள பள்ளி இமாம்களுக்கு இது குறித்து அறிவிப்பு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்த சந்திப்பில் சகோ. அப்சல் பாஷா மற்றும் சகோ. அன்வர் அலி கலந்து கொண்டனர்.

## தர்மபுரியில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை விளக்கக் கூட்டம்.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தர்மபுரி கிளையின் சார்பாக 05.11.2025 காலை 10.00 மணிக்கு “அண்டை வீட்டார் உரிமைகள் நாடு தழுவிய பரப்புரை” விளக்கக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு பரப்புரை கமிட்டி அமைப்பாளர் முகமது அஸ்வாக் அவர்கள் தலைமை தாங்கினார். நகர தலைவர் இம்ரான் ச. கிராத் ஓத நிகழ்ச்சி தொடங்கப்பட்டது. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மண்டல அமைப்பாளர் M. அப்துல் ஹமீத் அவர்கள் “பரப்புரை ஏன்? எதற்கு?” என்ற தலைப்பில் ஊழியர்களை உற்சாகப்படுத்தும் விதமாக உரையாற்றினார். ஜமாஅத் தனது குறிக்கோளை அடைவதற்காக பிரச்சாரம் மற்றும் பரப்புரையின் மூலம்



மக்கள் கருத்தை இஸ்லாத்திற்கு சார்பாக மாற்றி அமைத்து மறுமலர்ச்சி ஏற்படுத்த விரும்புவதை அவர் விளக்கினார். அதில் பரப்புரை என்பது மக்கள் சிந்தனையை மாற்றுவதில் மிக முக்கிய பங்காற்றுவதாகவும், இதனை மையக் கருத்தாகக் கொண்டு ஜமாஅத் பல்வேறு பரப்புரைகளை மேற்கொண்டு

மக்கள் சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். காலத்தின் தேவையாக சமூகத்தில் இணக்கம் நிலைநிறுத்தவும் அமைதியான சமூகத்தை உருவாக்கவும் “அண்டை வீட்டார் உரிமைகள்” எனும் இந்த பரப்புரை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் அவர் கூறினார். தொடர்ந்து கேள்வி–பதில் நிகழ்ச்சி மற்றும் பரப்புரை செயல் திட்டம் வடிவமைக்கப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ். உறுப்பினர்கள், ஊழியர்கள், தன்னார்வலர்கள் மற்றும் மகளிர் அணியினர் அனைவரும் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரியில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை விளக்கக் கூட்டம்.




ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கிருஷ்ணகிரி கிளையின் சார்பாக 06.11.2025 மாலை 6.30 மணிக்கு “அண்டை வீட்டார் உரிமைகள் நாடு தழுவிய பரப்புரை” விளக்கக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு நகரத் தலைவர் சிபகத்துல்லாஹ் அவர்கள் தலைமை தாங்கினர். Dr. மொய்தீன் அவர்கள் கிராத் ஓத நிகழ்ச்சி தொடங்கியதும், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்



மண்டல அமைப்பாளர் M. அப்துல் ஹமீத் அவர்கள் “பரப்புரை ஏன்? எதற்கு?” என்ற தலைப்பில் ஊழியர்களை உற்சாகப்படுத்தும் வகையில் உரையாற்றினார். ஜமாஅத் தனது குறிக்கோளை அடைவதற்காக பிரச்சாரம் மற்றும் பரப்புரையின் மூலம் மக்கள் கருத்தை இஸ்லாத்திற்கு சார்பாக மாற்றி மறுமலர்ச்சியை ஏற்படுத்த விரும்புவதை அவர் விளக்கினார். மக்கள் சிந்தனையை மாற்றுவதில் பரப்புரை வகிக்கும் முக்கிய பங்கு தொடர்பாகவும், இதை மையக்கருத்தாகக் கொண்டு ஜமாஅத் பல்வேறு பரப்புரைகளை செய்து மாற்றத்தை ஏற்படுத்தி வருவதையும் அவர் குறிப்பிட்டார். சமூகத்தில் இணக்கம் நிலைநிறுத்தவும் அமைதியான சமூகத்தை உருவாக்கவும் “அண்டை வீட்டார் உரிமைகள்” பரப்புரை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் விளக்கினார். தொடர்ந்து கேள்வி–பதில் நிகழ்ச்சி நடைபெற்றதுடன் பரப்புரைக்கான செயல் திட்டமும் வடிவமைக்கப்பட்டது. எல்லா புகழும் இறைவனுக்கே. உறுப்பினர்கள், ஊழியர்கள், தன்னார்வலர்கள் மற்றும் மகளிர் அணியினர் கலந்து கொண்டனர். செயலாளர் முஆஸ் அவர்கள் நிகழ்ச்சியை வழிநடத்தினர்.

## கொத்தூரில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை விளக்கக் கூட்டம்.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கொத்தூர் கிளையின் சார்பாக 03.11.2025, திங்கள்கிழமை மாலை 6.30 மணிக்கு அண்டை வீட்டார் உரிமைகள் நாடு தழுவிய பரப்புரை விளக்கக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு நகரத் தலைவர் முகமது பாருக் அவர்கள் தலைமை தாங்கினார். செயலாளர் முகமது சாலியா அவர்கள் கிராத் ஓத நிகழ்ச்சி தொடங்கப்பட்டது. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மண்டல அமைப்பாளர்



M. அப்துல் ஹமீத் அவர்கள் "பரப்புரை ஏன்? எதற்கு?" என்ற தலைப்பில் ஊழியர்களை உற்சாகப்படுத்தும் வகையில் உரையாற்றினார். தொடர்ந்து கேள்வி–பதில் நிகழ்ச்சி நடைபெற்றதுடன் பரப்புரைக்கான செயல் திட்டமும் வடிவமைக்கப்பட்டது. எல்லா புகழும் இறைவனுக்கே. உறுப்பினர்கள், ஊழியர்கள், மகளிர் அணியினர் மற்றும் GIO உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## விருதுநகரில் ரோஜா நகர பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கு JIH சார்பில் அண்டை வீட்டார் பரப்புரை அழைப்பிதழ் வழங்கல்.



JIH விருதுநகர் கிளையின் சார்பாக ரோஜா நகர பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கு அண்டை வீட்டார் பரப்புரைக்கான அழைப்பிதழ் வழங்கப்பட்டது. JIH ஊழியர் சகோ அப்துல் சமத் மற்றும் கன்வீனர் செய்யது உசேன் அவர்கள் நிர்வாகிகளிடம் மடக்கோலை, சமரசம் சிறப்பிதழ் மற்றும் அண்டை வீட்டார் புத்தகத்தை வழங்கினர். ஜும்மா உரைக்கு இதனை ஆவணமாகச் செய்ய வேண்டுமெனவும், இளையவர்களுக்கான சிறப்பு கூட்டத்தை ஞாயிற்றுக்கிழமையில் ஏற்பாடு செய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

## பெண் உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களுக்கான அண்டை வீட்டார் பரப்புரை சிறப்புக்கூட்டம்.



JIH பெண் உறுப்பினர்களுக்கும் ஊழியர்களுக்கும் அண்டை வீட்டார் பரப்புரையின் முக்கியத்துவம் மற்றும் அதன் அவசியத்தைப் பற்றிய சிறப்புக்கூட்டம் அமீரே மகாமி சாகுல் ஹமீது அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மருத்துவர் சகோ அப்துல்லாஹ் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மேலும் நாஜிமா அனிசா ஹுசைனா அவர்கள் பெண் ஊழியர்களுக்கான பணிகள் குறித்து உரையாற்றினார்.

## விருதுநகர் HSHB பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் அண்டை வீட்டார் உறவு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி.

21.11.2025 அன்று அல்லாஹ்வின் கருணையால் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நடத்தும் நாடு தழுவிய அண்டை வீட்டார் பரப்புரை நிகழ்வின் ஒரு பகுதியாக, விருதுநகர் சீதக்காதி தெருவில் உள்ள அரசு உதவிபெறும் HSHB பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் அண்டை



வீட்டாருடன் நல்லுறவை பேணுவதன் முக்கியத்துவம் குறித்து உரை நிகழ்த்தப்பட்டது. மேலும் மாணவிகளிடையே உறுதிமொழி எடுக்கப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ். இந்நிகழ்வை விருதுநகர் பெண்கள் வட்ட பொறுப்பாளர் சகோதரி அனிசா ஹுசைனா அவர்கள் தலைமை தாங்கினர். சகோதரி பவுசியா அவர்கள் உரையாற்றினார்; மெஹர் பானு அவர்கள் உறுதிமொழியை வாசித்தார். செய்யதலி காதர் மற்றும் பெண் ஊழியர்கள் மாணவிகளுக்கு இனிப்புகளையும் மடக்கோலைகளையும் வழங்கினர். மேலும் பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் மற்ற ஆசிரியர்களுக்கும் சமரசம் மடக்கோலை மற்றும் அண்டை வீட்டார் உரிமைகள் புத்தகம் வழங்கப்பட்டது.

## IFT-யில் நக்கீரன் கோபால் வருகை: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரைக்கு பாராட்டு.



கண்ணியத்திற்குரிய நக்கீரன் கோபால் அவர்கள் இன்று மதியம் IFT-க்கு மரியாதை நிமித்தமாக வருகை புரிந்தார். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்திய அளவில் நடத்தும் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. இவ்வாறான பரப்புரை இக்காலத்தில் வித்தியாசமானதும் யாரும் செய்யாத ஒரு நல்ல முயற்சியானதும் என அவர் தனது மகிழ்ச்சியையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார். நக்கீரன் கோபால் அவர்களுக்கு மாநில கன்வீனர் S. சாகுல் ஹமீது அவர்கள் சமரசம் சிறப்பிதழ், அழகிய அண்டை வீடு மற்றும் மடக்கோலை வழங்கினார். அவருடன் வருகை புரிந்த நண்பர்களுக்கும் ஜமாஅத் பொறுப்பாளர்கள் பரப்புரையின் இதழ்களை வழங்கினர். இந்நிகழ்வில் ஜமாஅத் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். மேலும் VIP Visitors Diary-யில் அவர் “சமரசத்தின் வாசகன் நான்; ‘அழகிய அண்டை வீடு’ பரப்புரை நாட்டு ஒற்றுமைக்கு வலுசேர்க்கும் முயற்சி; உறவுப் பேணல் இந்திய ஒற்றுமைக்கு சிறந்த கைகோர்ப்பு; இந்த புதுமையான நட்பு முயற்சி தழைத்து ஒலிக்கட்டும்; எதிர்கால சாதி–மத சதிகளை ஒழிக்கக் கூடிய முயற்சியாக இது அமைவது திண்ணம்; இந்த சீரிய முயற்சிக்கு நக்கீரன் கை கோர்க்கிறது” என்று தனது வாழ்த்துக்களையும் கருத்தையும் பதிவு செய்தார்.

## நரிமேடு வட்டத்தில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை மற்றும் சமூக தொடர்பு நடவடிக்கைகள் தொடக்கம்.

நரிமேடு வட்டம் சார்பில் அண்டை வீட்டாரின் உரிமைகள் பரப்புரை நேற்றைய தினம் முதலே தொடங்கப்பட்டது. அபிமானி வட்டத்தில் பரப்புரை தொடர்பான நினைவூட்டல் வழங்கப்பட்டு, வந்திருந்த 22 அபிமானிகளும் அண்டை வீட்டார் உரிமைகளை பேணி அதை பிறருக்கும் எடுத்துக்கூறி பரப்புரை பணிகளை முன்னெடுக்க அறிவுறுத்தப்பட்டனர். நரிமேடு பகுதியில் உள்ள உறவினர்கள், நண்பர்கள், குடும்பங்களைச் சந்தித்து பரப்புரை செய்யப்பட்டதுடன், GIO வகுப்பு சேர்த்தலுக்கான பணியும் மேற்கொள்ளப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ், அடுத்த வாரம்



இஸ்லாமிய பெண் பிள்ளைகளுக்கான GIO வகுப்பு தொடங்க உள்ளது. பொதுமக்களுக்கான பரப்புரை சந்திப்புகள் நடாத்தப்பட்டு, சந்தித்தவர்களுக்கு மடக்கோலை வழங்கப்பட்டது. வாக்குச்சாவடிகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் பரப்புரையின் நோக்கம் விளக்கப்பட்டு, அதன் அவசியம் உணர்த்தப்பட்டு அவர்களிடமிருந்து கருத்துகளும் பெறப்பட்டன; அவர்கள் இதை வரவேற்றனர். VIP பட்டியலில் உள்ள மருத்துவர்களையும் சந்தித்து பரப்புரை செய்தி தெரிவிக்கப்பட்டு, சமரசம் மடக்கோலை மற்றும் டாக்டர் KVS எழுதிய அழகிய அண்டை வீட்டார் புத்தகம் வழங்கி கருத்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அடுத்ததாக பகுதியில் உள்ள கவுன்சிலரைச் சந்தித்து உள்ளூர் குறைகளை மனுவாக வழங்கி சரிசெய்யுமாறு கோருவதோடு பரப்புரை செய்தியையும் தெரிவிக்கும் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. பொதுக்கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மீதமுள்ள நாட்களிலும் திட்டமிட்டபடி பணிகளைச் செய்ய முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

## புதுச்சேரி லாஸ்பேட்டை காவல் நிலைய இன்ஸ்பெக்டருடன் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை தொடர்பான கலந்துரையாடல்.



அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையின் ஒரு பகுதியாக புதுச்சேரி லாஸ்பேட்டை காவல் நிலைய அதிகாரி இன்ஸ்பெக்டர் இனியன் அவர்களை சந்தித்து கலந்துரையாடல் நடைபெற்றது. சந்திப்பில் பரப்புரையின் நோக்கம் மற்றும் தேவைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. இந்நிகழ்வை இன்ஸ்பெக்டர் இனியன் அவர்கள் வரவேற்று, தற்போதைய காலத்தில் இத்தகைய முயற்சிகள் மிகவும் அவசியமானவை என பாராட்டுகளும் வாழ்த்துகளும் தெரிவித்தார். சந்திப்பின்போது அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையின் புத்தகமும் சமரசம் சிறப்பிதழும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சகோ. அப்சல் பாஷா, சகோ. அஜ்மல், சகோ. குத்புதீன், சகோ. ரசாக் (Optical), சகோ. அன்வர் அலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மணப்பாறையில் மகளிர் அணியினர் நடத்திய அண்டை வீட்டார் உரிமைகள் உள்ளரங்கு கூட்டம்.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மணப்பாறை கிளை மகளிர் அணியின் சார்பாக, அண்டை வீட்டார் உரிமைகள் என்ற அகில இந்திய பரப்புரையை முன்னிட்டு இன்று 20.11.2025 காலை மஸ்தான் தெருவில் வசிக்கும் பெண்களுக்காக உள்ளரங்கு கூட்டம் சகோதரி பரிதா அவர்களின் இல்லத்தில் நடத்தப்பட்டது. “இஸ்லாத்தில் அண்டை வீட்டாரின் உரிமைகள்” என்ற தலைப்பில் சகோதரி ஜெனிபர் அவர்கள் சிறப்புரையாற்றினர். இதில் 29 பெண்கள் கலந்து கொண்டனர்.




# உப்பிலியரம் வட்டத்தில் நூறு நாள் வேலைத் திட்டப் பெண்களிடம் ‘அழகிய அண்டை வீடு’ புத்தகத்தின் மூலம் பரப்புரை.



உப்பிலியரம் வட்டம் பெண்கள் சார்பில் சோபனபுரத்தில் நூறு நாள் வேலைத் திட்டத்தில் பணிபுரியும் பெண்களிடம் அழகிய அண்டை வீடு புத்தகத்தில் உள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பரப்புரை செய்யப்பட்டது. இந்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அண்டை வீட்டார் உரிமைகள் என்ன, இஸ்லாம் கூறும் உரிமைகள் என்ன என்பன குறித்து விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது. இந்த விளக்கத்தை நமது ஊழியர்களான சகோதரி ரிமோஸா மற்றும் சகோதரி தையிபா வழங்கினர். இதில் முஸ்லிம் சகோதரிகள் 10 நபர்களும் முஸ்லிம் அல்லாத சகோதரிகள் 24 நபர்களும் கலந்து கொண்டு செய்திகளை கேட்டு பயனடைந்தனர். அனைவருக்கும் பரப்புரையின் மடக்கோலையும் வழங்கப்பட்டது.

# மதுரை முஸ்லிம் லீக் நிர்வாகிகளிடம் அண்டை வீட்டார் பரப்புரை குறித்து விளக்கவுரை.



அண்டை வீட்டார் பரப்புரை தினத்தை முன்னிட்டு மதுரை முஸ்லிம் லீக் மாவட்ட தலைவர் இக்பால், பொறுளாளர் ஜாகீர் உசேன் மற்றும் ஜாக் மாவட்டத் தலைவர் (பங்காளி) அப்துர் சுக்கூர் அவர்களின் தம்பி அமானுல்லாஹ் ஆகியோருக்கு பரப்புரையின் நோக்கம் மற்றும் அதன் தேவைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

# ஸ்ரீ ஹரி மருத்துவமனையில் பரப்புரையின் நோக்கத்தை விளக்கி நூல்கள் வழங்கியது.



மகளிர் அணியின் சார்பில் ஸ்ரீ ஹரி மருத்துவமனைக்கு சென்று டாக்டர் G. ஹரி பாலமுருகன் (MBBS) மற்றும் டாக்டர் பாரதி ஹரி பாலமுருகன் (MBBS, DNB-OG) அவர்களையும் சந்தித்து பரப்புரையின் நோக்கத்தை எடுத்துரைத்தோம். மருத்துவமனையில் பணிபுரியும் செவிலியர்களுக்கும் புத்தகம் மற்றும் மடக்கோலை வழங்கி விளக்கினோம். மேலும், மருத்துவரைச் சந்திக்க வந்திருந்த நோயாளிகளையும் சந்தித்து பரப்புரையின் நோக்கத்தை எடுத்துரைத்தோம்.



# அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை: அறந்தாங்கி வட்டத்தில் வீடு வீடாக சென்று விளக்கக் கூட்டம்.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அறந்தாங்கி வட்டத்தின் சார்பாக, அண்டை வீட்டார் உரிமைகள் என்ற அகில இந்திய பரப்புரையை முன்னிட்டு ஒவ்வொரு பகுதியிலும் சென்று

அண்டை வீட்டாரின் உரிமைகள் குறித்தும் அவர்களுடனான தொடர்பை எவ்வாறு வலுப்படுத்த வேண்டும் என்பது குறித்தும் முஸ்லிம் மற்றும் சகோதர சமுதாய மக்களுடன் கலந்துரையாடப்பட்டது. பின்னர் அவர்களுக்கு சமரசம், உதயதாரகை ஆகிய நூல்கள் மற்றும் மடக்கோலை வழங்கப்பட்டது.



## கிருஷ்ணகிரியில் அண்டை வீட்டார் பரப்புரை: அதிமுக MLA அசோக்குமாரை சந்தித்து நூல்கள் வழங்கல்.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கிருஷ்ணகிரி கிளையின் சார்பாக நாடு தழுவிய அண்டை வீட்டார் பரப்புரை இன்று 21-11-25 வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் நகர முக்கிய விஐபியான அதிமுக மாவட்ட செயலாளர் மற்றும் சட்ட மன்ற உறுப்பினர் திரு அசோக்குமார் MLA அவர்களைச் சந்தித்து சமரசம் பத்திரிகை, அண்டை வீட்டார் புத்தகம் மற்றும் மடக்கோலை வழங்கப்பட்டது. பரப்புரையின் நோக்கம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. பரப்புரையின் முக்கியத்துவத்தை அவர் பாராட்டியும் சிலாகித்தும் தெரிவித்தார். நிகழ்ச்சியில் ஜமாத் உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## கரூர் பெண்கள் வட்டம்: அண்டை வீட்டார் பரப்புரையில் 100 குடும்பங்கள் சந்திப்பு.





கரூர் கிளை பெண்கள் வட்டம் சார்பாக அண்டை வீட்டார் பரப்புரை நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. குழு ரீதியான பொதுமக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் ஏறத்தாழ 100 குடும்பங்கள் சந்திக்கப்பட்டு folders, சமரசம் மற்றும் புத்தகம் வழங்கப்பட்டது. மேலும் ஸ்டிக்கர்களும் ஒட்டப்பட்டது.

## பாலக்கரையில் ‘முன்மாதிரி அண்டைவீட்டார் – முன்மாதிரி சமூகம்’ கலந்துரையாடல் நிகழ்வு.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் பாலக்கரை வட்டம் சார்பில் 22.11.2025 (சனிக்கிழமை) அன்று மாலை முன்மாதிரி அண்டைவீட்டார், முன்மாதிரி சமூகம் என்ற தலைப்பில் கலந்துரையாடல் நிகழ்வு நடைபெற்றது. முனைவர் அ. ஹஜ் மொய்தீன் சிறப்புரை நிகழ்த்தி, அண்டைவீட்டார்களுடன்

இணைந்து வாழ்வதன் அவசியம், இன்றைய சமூக நிலை, அண்டைவீட்டார் உரிமைகள் குறித்த இஸ்லாமிய வழிமுறைகள் ஆகியவற்றை தெளிவாக எடுத்துரைத்தார். கலந்து கொண்ட சகோதர சமுதாய நண்பர்களும் தங்களது கருத்துகளை ஆர்வமாக பகிர்ந்து கொண்டனர். அனைவருக்கும் மடக்கோலைகள், நூல்கள் மற்றும் சமரசம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சி தயக்கத்தை நீக்கி மனங்களை இணைக்கும் நிகழ்வாக அமைந்தது. நிகழ்வை பாலக்கரை ஊழியர்கள் சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.





## VIP சந்திப்பு:-

*22-11-25:* அண்டை வீட்டார் பரப்புரையின் ஒரு பகுதியாக புதுச்சேரி அனைத்து பள்ளிவாசல் முத்தவல்லிகள் கூட்டமைப்பு பொறுப்பாளர்களை சந்தித்து பரப்புரையின் நோக்கம் மற்றும் தேவை குறித்து கலந்துரையாடப்பட்டது. பரப்புரையின் புத்தகம் மற்றும் சமரசம் இதழ் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

## காலடிப்பேட்டையில் பெண்கள் வட்டம் சார்பில் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்து சிறப்பு நிகழ்ச்சி.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் காலடிப்பேட்டை கிளையின் சார்பாக அண்டை வீட்டாரின் உரிமைகள் பரப்புரை குறித்து மகளிர் வட்டம் சார்பில் 23.11.25 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி முதல் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. தொடக்கமாக திருக்குர்ஆன் வசனம் (4:36) மற்றும் அதன் மொழிபெயர்ப்பை ஷப்ரின் (GIO) வாசித்தார். பரப்புரை தொடர்பான அறிமுக உரையை சகோதரர் சையத் இப்ராஹிம் வழங்கினார். தொடர்ந்து சகோதர சமுதாயப் பெண்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட சகோதரி ஷாயின், பேராசிரியர் (SIET), அவர்களுக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது. இறுதியில் மிஸ்பா (GIO) நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அப்பகுதி சகோதர சமயத்தவர் உள்பட பெண்கள் சுமார் 70 பேர் கலந்து கொண்டனர்.



## அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையின் முன்னிட்டு மேலத்தெரு வட்டத்தில் 'ஸ்ட்ரீட் ஃபெஸ்டிவல்' சிறப்பாக நடைபெற்றது.

அண்டை வீட்டார் உரிமைகள் நாடு தழுவிய பரப்புரையை முன்னிட்டு மேலத்தெரு வட்டத்தில் ஸ்ட்ரீட் ஃபெஸ்டிவல் நடைபெற்றது. நிகழ்ச்சியில் குர்ஆன் தர்ஸ் (4:36–37) சகோதரி ஆஷா ஆலிமா வழங்கினார். மேலத்தெரு வட்டம் GIO மற்றும் CLO மாணவ, மாணவிகள் ஓவியங்களை வரைந்து கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர். மாணவ–மாணவிகள் விளையாட்டு போட்டிகள்



நடத்தப்பட்டு அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. பின்னர் ஊர்வலமும் நடைபெற்றது. சுமார் 50 பேர் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினர்களாக கவுன்சிலர் ரம்ஜான் பேகம் மற்றும் ஜாஹிர் உசேன் கலந்து கொண்டு நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து ஊர்வலத்தை நடத்திச் சென்றனர். தொடர்ந்து சகோதரர் அக்பர் ஹீசைன் பாய் மற்றும் சகோதரர் ராஜ்கபூர் பாய் நிகழ்ச்சியை வழிநடத்தி சிறப்பித்தனர்.

## திருப்பூரில் உலமாக்கள் சந்திப்பு: அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை அறிமுகம் மற்றும் ஜும்மா கடிதம் வழங்கல்.



அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையின் ஒரு பகுதியாக, திருப்பூர் கிளையின் சார்பில் உலமாக்கள் மற்றும் பேராசிரியர்கள் சந்திப்பு நடைபெற்று வருகிறது. அதன் தொடர்ச்சியாக, திருப்பூரில் புகழ்பெற்ற அஸ்ஸுூராஜில் முனீர் அரபிக் கல்லூரியின் பேராசிரியர் மௌலானா அபூபக்கர் ஹஜ்ரத் அவர்களைச் சந்தித்து பரப்புரையின் அறிமுகம் வழங்கப்பட்டது. ஆலிம்களுக்காக பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட ஜும்மா கடிதமும் வழங்கப்பட்டது. அவர் அதை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தார். சந்திப்பு இனிமையாக நடைபெற்றது. எல்லா புகழும் இறைவனுக்கே.

## கிருஷ்ணகிரி JIH மகளிர் அணி: அண்டை வீட்டார் உரிமைகள் குறித்து நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சி.





அண்டை வீட்டாரின் உரிமைகள் – முன்மாதிரி அண்டை வீட்டார், முன்மாதிரி சமூகம் என்ற பரப்புரையை முன்னிட்டு JIH மகளிர் அணி கிருஷ்ணகிரி கிளையின் சார்பாக 22.11.25 சனிக்கிழமை மாலை யூசுப் தெருவில் பெண்களுக்காக சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தர்ஸை சகோதரி அர்ஷியா வழங்கி, இறை கடமைகளுடன் மனிதனுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் மற்றும் உரிமைகள் குறித்த இஸ்லாமிய வழிமுறைகளை விளக்கினார். பின்னர் அண்டை வீட்டாரின் உரிமைகள் என்ற தலைப்பில் சகோதரி தாசின் சிறப்புரை நிகழ்த்தி, மனிதர்கள் தனித்தனியாக வாழும் நிலை ஏற்படுத்தும் விளைவுகள், அண்டை வீட்டார் ஒருவரை ஒருவர் நேசிக்கவும் நலம் நாடவும் குறைகளைத் தீர்க்கவும் வேண்டிய அவசியம், இதன் மூலம் முன்மாதிரி சமூகத்தை உருவாக்க வேண்டிய தேவை ஆகியவற்றை எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 40 பேர் கலந்து கொண்டனர். துவாவுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

## சூரங்குடி அத்திக்கடை ஜும்மா மசூதியில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை துவக்க நிகழ்ச்சி.



செவிக்குணவீந்த மாலைப்பொழுது ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் பேரியக்கம் சார்பில் நாடு



முழுவதும் அண்டை வீட்டார் உரிமைகள் எனும் மையப்பொருளில் நவம்பர் 21–30 வரை மேற்கொள்ளப்படும் பரப்புரையின் துவக்க நிகழ்ச்சி இன்று அஸர் தொழுகைக்குப் பின் நாகர்கோவில் அருகே சூரங்குடி அத்திக்கடை ஜும்மா மசூதியில் நடைபெற்றது. ஜமாஅத் தலைவர் ஜனாப் சாகுல் ஹமீது, செயலாளர் ஜனாப் நயினார் பிள்ளை உள்ளிட்ட நிர்வாகிகள் முன்னிலையில், ஜமாஅத் இமாம் கிராஅத்துடன் நிகழ்ச்சி தொடங்கப்பட்டது. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மண்டல அமைப்பாளர் மௌலவி அஹ்மத் முஹயித்தீன் ஃபைஜி துவக்கவுரை நிகழ்த்தினார். திருச்சி அஸ்-ஸலாம் அரபிக் கல்லூரி பேராசிரியர் மௌலவி நூஹ் மஹ்லரி சிறப்புரை வழங்கினார். சூரங்குடி மண்ணின் மைந்தரும் உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற பேராசிரியர் முனைவர் அப்துல் சமது உரை நிகழ்த்தினார். ஜிஐஓ மாநில தலைவி ஆயிஷா இஸ்மாயில் தொகுத்து வழங்கிய இந்நிகழ்ச்சியில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நாகர்கோவில் கிளை பொறுப்பாளர் ஹபீப் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முன்மாதிரி அண்டைவீட்டார் – முன்மாதிரி சமூகம்.

## உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் வசிக்கும் தெருக்களில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை அமர்வுகள் தொடக்கம்.

அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையை முன்னிட்டு கிளையில் உள்ள உறுப்பினர்கள், ஊழியர்கள், அபிமானிகள் இல்லங்களில் பரப்புரை அமர்வுகள் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. அதன் படி இன்று மாலை 7 மணிக்கு உறுப்பினர்கள் சகோ அப்துல் ரகுமான, சகோ சஹானாஸ் மற்றும் ஊழியர் சகோ சாகுல் ஹமீது ஆகியோரது தெருவில் முஸ்லிம் அண்டை வீட்டார்களுக்கான அமர்வு நடைபெற்றது. கடுமையான கனமழையையும் பொருட்படுத்தாமல் 11 அண்டை வீட்டார் கலந்து கொண்டனர்.



## கிருஷ்ணகிரி JIH மகளிர் அணி: மாணவ–மாணவிகளுக்கான அண்டை வீட்டார் உரிமைகள் போட்டிகள் வேகமாக நடைபெற்றது.

அண்டை வீட்டார் உரிமைகள் – முன்மாதிரி அண்டை வீட்டார், முன்மாதிரி சமூகம் என்ற பரப்புரையை முன்னிட்டு JIH மகளிர் அணி கிருஷ்ணகிரி கிளையின் சார்பாக நேற்று (23.11.25) ஞாயிற்றுக்கிழமை மதியம் 2 மணி முதல் 5 மணி வரை அஞ்சுமன் மதரசாவில் மாணவ, மாணவிகளுக்கான என் அண்டை வீட்டார் – எனது நண்பர் என்ற தலைப்பின் அடிப்படையில் பேச்சுப்போட்டி, கதை கூறுதல் போட்டி மற்றும் ஓவியப் போட்டி நடைபெற்றது. இந்நிகழ்ச்சி JIH கிருஷ்ணகிரி மகளிர் அணி தலைவி சகோதரி தாசின் தலைமையில் நடைபெற்றது. தொடக்கமாக கிராத் மாணவி ஜுனைரா அம்பர் ஓதினார். சிறப்பு விருந்தினர்களாக JIH கிருஷ்ணகிரி செயலாளர் ஜனாப் மாஸ் சாஹேப், JIH ஊழியர் ஜனாப் முஸ்தாக் சாஹேப், உறுப்பினர் ஜனாப் பயாஸ் சாஹேப் ஆகியோர் கலந்து கொண்டனர். கிருஷ்ணகிரி ராபத்துல் உலமா பொறுப்பாளர் மௌலவி இஸ்மாயீல் பலாஹி அவர்கள் மாணவ, மாணவிகளுக்குச் சிறப்புரையாற்றி அண்டை வீட்டாரின்

உரிமைகள் குறித்தும், போட்டிகளில் மாணவர்கள் வெளிப்படுத்திய திறமைகளைப் பாராட்டியும், எதிர்காலத்தில் மேலும் வளர்ச்சி பெற ஊக்குவித்தும் பேசினார். நிகழ்ச்சியை சகோதரி அர்ஷியா சிறப்பாக வழிநடத்தினார். 60-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். துவாவுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது.

## நாகர்கோவில் வட்டத்தில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை: இரட்சண்ய சேனை கமாண்டரை சந்தித்து நூல்கள் வழங்கல்.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நாகர்கோவில் வட்டம் சார்பில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையை முன்னிட்டு இரட்சண்ய சேனை அமைப்பின் நாகர்கோவில் டிவிஷன் கமாண்டர் மேஜர் மனோ அவர்களைச் சந்தித்து சமரசம் சிறப்பிதழ் மற்றும் டாக்டர் கே.வி.எஸ் எழுதிய புத்தகம் வழங்கி உரையாடப்பட்டது. இச்சந்திப்பில் ஜமாஅத்தின் மண்டல பொறுப்பாளர் மௌலவி அஹ்மத் முஹ்யித்தீன் ஃபைஜி, நாகர்கோவில் பரப்புரை கன்வீனர் அமீர் அப்பாஸ், டாக்டர் அப்துல்லா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அறந்தாங்கி வட்டத்தில் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்து நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சி.




அண்டை வீட்டாரின் உரிமைகள் – முன்மாதிரி அண்டை வீட்டார், முன்மாதிரி சமூகம் என்ற பரப்புரையை முன்னிட்டு, நேற்று (23.11.2025) அறந்தாங்கி வட்டம் சார்பாக சனிக்கிழமை மாலை சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தர்ஸை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் அபிமானி ரியாஸ்மீன் வழங்கினார். ஏன் அண்டை வீட்டாரின் உரிமைகள் பற்றிய பரப்புரை மற்றும் அதன் முக்கியத்துவம் என்ற தலைப்பில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் அபிமானி சகோதரி சாஜிதா பேகம் துவக்க உரையாற்றினர். தொடர்ந்து அண்டை வீட்டாரின் உரிமைகள் என்ற தலைப்பில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் ஊழியரும் அறந்தாங்கி வட்டப் பொறுப்பாளருமான சகோதரி நூருல் ஜெஸிமா உரையாற்றினார். நிகழ்ச்சியை GIO மாணவி ஆஃப்ரிதா பர்வீன் வழிநடத்தினார். கனமழையிலும் பெண்கள், CIO மற்றும் GIO மாணவ-மாணவிகள் என 20 பேர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சி மனநிறைவாக இருந்ததோடு, இதுவரை இருந்த மனக்கசப்புகள் நீங்கியதாகவும், அண்டை வீட்டினருடன் அமர்ந்து பேசிக்கொண்டு பரஸ்பர அன்பை வெளிப்படுத்த இது ஒரு வாய்ப்பாக அமைந்ததாகவும் மக்கள் தெரிவித்தனர். துவாவுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது.

## மதுரை ஜன்சேவா சேர்மன் அப்துல் ஜமான் உடன் அண்டை வீட்டார் பரப்புரை தொடர்பாக சந்திப்பு.



மதுரை எக்னாமிக் சேம்பர் தலைவரும் ஜன்சேவா மதுரையின் சேர்மனுமான மான் அப்துல் ஜமான் அவர்களுடன் சந்திப்பு நடத்தப்பட்டது. பரப்புரையின் நோக்கம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. 1970–80 காலக்கட்டத்தில்

ஜமாஅத்தில் நடைபெற்ற நிகழ்வுகளை அவர் நினைவுகூர்ந்தார். சந்திப்பு சிறப்பாக நடைபெற்றது.

## சாதிக் நகரில் அண்டை வீட்டார் பரப்புரைக்காக தேநீர் விருந்து நிகழ்ச்சி.



24.11.2025 நேற்று சாதிக் நகரில் ஊழியர் அல்தாஃப் அவர்களின் வீட்டில் அண்டை வீட்டார் பரப்புரைக்காக உறவுகளை இணைப்பதற்கான முயற்சியின் ஒரு பகுதியாக, அண்டை வீட்டாரை அழைத்து சிறிய தேநீர் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் 10 பேர் கலந்து கொண்டனர். பரப்புரை தொடர்பாக சில கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டன. மடக்கோலைவும் வழங்கப்பட்டது.

## கரூர் கிளையில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையின் பகுதியாக தேநீர் விருந்து நிகழ்ச்சி.



கரூர் கிளை சார்பாக நேற்று (23.11.2025) அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையின் ஒரு பகுதியாக சகோதர சமுதாயத்தைச் சேர்ந்த அன்பர்களுக்காக வெங்கமேடு பகுதியில் தேநீர் விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆண்கள், பெண்கள் என 16 சகோதரர்கள் கலந்து கொண்டனர்.

## செல்லூரில் மாணவர்களுக்கிடையில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை: ஃபோல்டர்கள் வழங்கல்.



அண்டை வீட்டாரின் உரிமைகள் பரப்புரையை முன்னிட்டு செல்லூர் பகுதியில் வாழும், எனது மஹல்லாவைச் சேர்ந்த மற்றும் மத சகோதரர்களான மாணவர்களுக்கிடையில் செல்லூர் வட்டப் பொறுப்பாளர் டாக்டர் அ. ஆவல் பீர் அவர்கள் அண்டை வீட்டாரின் உரிமைகளைப் பற்றிய செய்தியை தெளிவாக எடுத்துரைத்தார். மாணவர்கள் அனைவருக்கும் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையின் ஃபோல்டர்கள் வழங்கப்பட்டன.

## மஹபூப்பாளையம் பெண்கள் வட்டத்தில் அண்டை வீட்டார்களுடன் கலந்துரையாடல் மற்றும் விளையாட்டுப் போட்டிகள்.



மஹபூப்பாளையம் பெண்கள் வட்டம் சார்பாக சனிக்கிழமை மாலை (22.11.2025) அன்சாரி நகர் 4வது தெருவில் அண்டை வீட்டார்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. அல்ஹம்துலில்லாஹ், 35 பெண்கள் மற்றும் 10 GIO மாணவிகள் கலந்து கொண்டனர்.

## பொறியாளர் நகர் ஊழியர் வட்டத்தில் அண்டை வீட்டார்களுக்கான தேநீர் விருந்து மற்றும் கலந்துரையாடல்.



இன்று (23.11.25) மாலை 4 மணிக்கு பொறியாளர் நகர் ஊழியர் வட்டம் சார்பாக சகோதர சமுதாயத்தைச் சேர்ந்த சகோதரிகளுக்கும் அண்டை வீட்டார்களுக்கும் சகோதரி நஜ்மா இல்லத்தில் தேநீர் விருந்து வழங்கப்பட்டது. சகோதரி ஹுசைனா பானு திருமறை வசனங்களை ஓதி நிகழ்வைத் தொடங்கி வைத்தார். சகோதரி பசீரா அண்டை வீட்டாரின் உரிமைகள் குறித்து உரையாற்றினார். பின்னர் சகோதரிகளுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. குழந்தைகளுக்காக விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் சகோதர சமுதாய சகோதரிகள் 10 பேர், பொறியாளர் நகர் ஜமாஅத்தைச் சேர்ந்த பெண்கள் 4 பேர், ஊழியர்கள் 3 பேர் மற்றும் 26 குழந்தைகள் கலந்து கொண்டனர்.

## முனிச்சாலை வட்டத்தில் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்து பொதுக்கூட்டம்.



முனிச்சாலை வட்டம் சார்பாக 22.11.25 சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் புதூர் வட்ட ஊழியர் ஆலிமா மர்ஜான் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். நிகழ்வில் 10 சகோதர சமுதாய சகோதரிகள், முஹல்லா இஸ்லாமிய சகோதரர்கள் 70 பேர் மற்றும் 20 குழந்தைகள் கலந்து கொண்டனர்.



## காலடிப்பேட்டை தாங்கல் பகுதியில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரைக்காக மடக்கோலை விநியோகம்.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் காலடிப்பேட்டை கிளை தாங்கல் பகுதி மகளிர் சார்பாக, அண்டை வீட்டாரின் உரிமைகள் பரப்புரையை ஒட்டி சந்தை பகுதியில் மடக்கோலைகள் விநியோகிக்கப்பட்டன.

## சேலம் வட்டத்தில் இமாம்கள் மற்றும் முக்கிய நபர்களுக்கு அண்டை வீட்டார் உரிமைகள் தொடர்பான நூல்கள் வழங்கல்.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சேலம் வட்டம் சார்பில் 24.11.2025 திங்கட்கிழமை ஜனாப் ஹபீப் ரஹ்மான் அவர்கள் தலைமையில், அண்டை வீட்டாரின் உரிமைகள் நாடு தழுவிய பரப்புரையின் ஒரு பகுதிப்பணியாக, ஜனாப் அஸ்லம் மற்றும் ஜனாப் ஆஷிக் தாவூத் அவர்கள் இமாம்களுக்கும் முக்கிய

நபர்களுக்கும் அண்டை வீடு புத்தகம், சமரசம் மாத இதழ் மற்றும் பரப்புரை ஃபோல்டர் வழங்கினர்.

## தூத்துக்குடி வட்டத்தில் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற்றது.



தூத்துக்குடி வட்டம் சார்பாக "அண்டை வீட்டார் உரிமைகள்" பரப்புரையை முன்னிட்டு 21.11.25 மாலை நான்கு மணிக்கு தேநீர் விருந்து நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சகோதரி ஷமீனா அண்டை வீட்டாரின் உரிமைகள் பற்றி சிறிது நேரம் உரையாற்றினார். பின்னர் வந்திருந்த சகோதரிகளிடம் கருத்துகள் கேட்டு, அவர்களின் அண்டை வீட்டினருடன் தொடர்புடைய அனுபவங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது. இதில் சகோதர சார்ந்த நான்கு சகோதரிகள் கலந்து கொண்டனர்.



தொடர்ந்து 24.11.25 மாலை நான்கு மணிக்கும் தேநீர் விருந்து நடைபெற்றது. இதில் சகோதரி செய்தலி மற்றும் சகோதரி ஷமீனா அண்டை வீட்டாரின் உரிமைகள் பற்றி உரையாற்றினர்; இந்நிகழ்வில் 20 இஸ்லாமிய சகோதரிகள் கலந்து கொண்டனர். மேலும் இரண்டு இடங்களில் உள்ள கவுன்சிலர்களை சந்தித்து அவர்களுக்கு சமரசம், உதயதாரகை, அண்டை வீட்டார் உரிமைகள் பற்றிய மடக்கோலைகள் வழங்கப்பட்டன. அதேபோல் சகோதர சமுதாயத்தைச் சேர்ந்த சகோதரிகளுக்கும் மடக்கோலைகள் வழங்கப்பட்டன.

## பெரம்பூர் யூனிடில் அண்டை வீட்டார் பரப்புரை முன்னிட்டு தேநீர் விருந்து நடைபெற்றது.



24.11.2025 அன்று பெரம்பூர் யூனிட் சார்பாக ஜமாலியாவில் அண்டை வீட்டார் பரப்புரைக்காக மக்களை அழைத்து ஒரு சிறிய தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. இதில் 16 பேர் கலந்து கொண்டனர். பரப்புரை தொடர்பாக அவர்களிடம் சில கருத்துகள் எடுத்துரைக்கப்பட்டதுடன், மடக்கோலைகளும் விநியோகம் செய்யப்பட்டது.

## சேலம் ஜங்ஷன் பெண்கள் வட்டம் வீட்டுக்கு வீடு சென்று அண்டை வீட்டார் உரிமைகள் பற்றிய பொருட்கள் வழங்கியது.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சேலம் ஜங்ஷன் பெண்கள் வட்டம் சார்பாக அண்டை வீட்டார் உரிமைகள் குறித்த நாடு தழுவிய பரப்புரையின் ஒரு பகுதியாக "முன்மாதிரி அண்டை வீட்டார் – முன்மாதிரி சமூகம்" என்ற தலைப்பில், வீடு வீடாக சென்று அண்டை வீடு புத்தகம், சமரசம் மாத இதழ் மற்றும் பரப்புரை போல்டர்கள் வழங்கப்பட்டன.



## புதுச்சேரியில் Nowfar Dental Clinic மருத்துவரை சந்தித்து அண்டை வீட்டார் பரப்புரை விளக்கப்பட்டது.

அண்டை வீட்டார் பரப்புரையின் ஒரு பகுதியாக புதுச்சேரியில் செயல்பட்டு

வரும் “Nowfar Dental Clinic” சார்ந்த Dr. Nowfar அவர்களை சந்தித்து பரப்புரையின் நோக்கம் மற்றும் தேவைகள் குறித்து கருத்து பரிமாறப்பட்டது. மேலும் பரப்புரையின் புத்தகமும் சமரசம் இதழும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

## புதுச்சேரி பொதுப்பணித்துறை அமைச்சரை சந்தித்து அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை குறித்து விளக்கப்பட்டது.



அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையின் ஒரு பகுதியாக புதுச்சேரி பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு ஸ்ரீ. கே. லக்ஷ்மிநாராயணன் அவர்கள் சந்திக்கப்பட்டு, பரப்புரையின் நோக்கமும் தேவையும் எடுத்துரைக்கப்பட்டது. அமைச்சர் அவர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்று பாராட்டுகள் மற்றும் வாழ்த்துகளையும் தெரிவித்ததுடன், சமீபகாலமாக புதுச்சேரியில் நடைபெறும் அரசியல் நிகழ்வுகள் மற்றும் SIR எனப்படும் வாக்காளர் படிவம் பூர்த்தி செய்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. சந்திப்பின்போது அண்டை வீட்டார் உரிமைகள் தொடர்பான பரப்புரை புத்தகமும் சமரசம் சிறப்பிதழும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் சகோ. அப்சல் பாஷா, சகோ. அஜ்மல், பரப்புரையின் கன்வீனர் சகோ. ஜப்ருதீன் மற்றும் சகோ. அன்வர் அலி ஆகியோர் கலந்து கொண்டனர்.



## மதுரை JIH சார்பில் திரு. பழ. சின்ன கருப்பையா அவர்களை சந்தித்து அண்டை வீட்டார் பரப்புரை விளக்கப்பட்டது.

மதுரை JIH அண்டை வீட்டார் பரப்புரையின் ஒரு பகுதியாக இன்று இயக்குநர் “தமிழா தமிழா” நிகழ்ச்சி தொகுப்பாளர் கரு. பழனியப்பன் அவர்களின் தந்தை திரு. பழ. சின்ன கருப்பையா அவர்கள் சந்திக்கப்பட்டனர். பரப்புரையின் கருத்துகள் எடுத்துரைக்கப்பட்ட போது அவர் ஆர்வத்துடன் கேட்டதுடன், தனது வெளியீடான திருக்குறள் நாவலர் உரை புத்தகத்தை நினைவுப்பரிசாக வழங்கினார். வாய்ப்பிருந்தால் தங்களது பகுதியில் பரப்புரை செய்யும்படியும் கேட்டுக் கொண்டார். மேலும், மனிதகுல சமத்துவத்தை ஸலாம் முகமுன் வாயிலாக இஸ்லாம் பேணுவது உயரிய நற்பண்பு எனும் தனது ஆழ்ந்த கருத்தையும் பதிவு செய்தார்.

## செல்லூர் வட்டத்தில் மாநில தலைவர் மதுக்கூர் இராமலிங்கத்திற்கு அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை விளக்கப்பட்டது.

அண்டை வீட்டாரின் உரிமைகள் பரப்புரை சார்பாக தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க மாநில தலைவர் சகோ. மதுக்கூர் இராமலிங்கம் அவர்களை செல்லூர் வட்ட பொறுப்பாளர் டாக்டர் அ. ஆவல் பீர் சந்தித்து, அண்டை வீட்டாரின் உரிமைகள் பரப்புரையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். சந்திப்பு நிறைவில் அவருடன் எடுத்துக்கொள்ளப்பட்ட அந்த இனிமையான தருணம் நினைவாக பதிவு செய்யப்பட்டது.



# புதுக்கோட்டை வட்டத்தில் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்த சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் புதுக்கோட்டை வட்டத்தில் 23.11.2025 அன்று அண்டை வீட்டார் உரிமைகள் குறித்த சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சி கிராத் மூலம் (சகோதரி சஜலி – நாசிமா) தொடங்கப்பட்டு, அஃப்ரா அவர்கள் வழிநடத்தினார். வரவேற்புரையில் GIO பொறுப்பாளர் பரியா அவர்கள் ஜமாத் குறித்தும் நிகழ்ச்சியின் நோக்கம் குறித்தும் பேசினார். தொடர்ந்து மணப்பாறை கிளை மகளிர் அணி மண்டல பொறுப்பாளர் சகோதரி ஜன்னத் D.O அவர்கள் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்து சிறப்புரையாற்றினர். சகோதரி நிஷா (Nisha Organic Farms) அவர்கள் யார் அண்டை வீட்டார் என்பது பற்றி கூறினார். துவரங்குறிச்சியைச் சேர்ந்த GIO உறுப்பினர் ஜஸ்ரா அவர்கள் "உண்மையான மாணவன்" என்ற தலைப்பில் உரையாற்றினர்.



GIO மாணவிகள் நாடகம் நிகழ்த்தியதுடன், CIO குழந்தைகள் நபி (ஸல்) அவர்கள் கூறிய அண்டை வீட்டார் தொடர்பான ஹதீஸ்களை பகிர்ந்தனர். GIO மாணவி நூர் ஃபாத்திமா அண்டை வீட்டார் குறித்து சிந்தனைத் தூண்டும் உரை ஆற்றினார்; நூர் ரிஸ்வானா அவர்கள் சமரசம் புத்தகத்தில் இடம்பெற்ற உண்மை சம்பவம் குறித்து உரையாற்றினார். GIO மாணவிகள் தாஹிரா மற்றும் அப்சானா கவிதை பாடினர். நன்றியுரையை துணை நாசிமா வஹிதா வழங்கினார். நிகழ்ச்சியில் ஊழியர்கள், அபிமானிகள், CIO மற்றும் GIO மாணவிகள், சகோதர சமுதாயத்தினர் ஆகிய மொத்தம் 54 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# திண்டுக்கல் மாவட்ட தலைமைக் காஜியைச் சந்தித்து அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை அறிமுகப்படுத்தப்பட்டது.



திண்டுக்கல் மாவட்ட தலைமைக் காஜி, ஜமாஅத்துல் உலமா சபை மாவட்ட தலைவர் மற்றும் யூசுஃப்பிய்யா அரபிக் கல்லூரியின் முதல்வருமான மௌலானா மௌலவி அலி அன்வாரி ஹஸ்ரத் அவர்களை சந்தித்து, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நடத்தி வரும் "அண்டை வீட்டார் உரிமைகள்" பரப்புரை குறித்து அறிமுகப்படுத்திய இனிய தருணம் நடைபெற்றது.

# திண்டுக்கல் பகுதியில் பள்ளிவாசல் இமாம்களைச் சந்தித்து அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை உரைகள் வழங்கப்பட்டது.



இந்திய அளவில் JIH நடத்தும் நாடு தழுவிய "அண்டை வீட்டார் உரிமைகள்" பரப்புரை இன்று நம் சமூகத்திற்கு முக்கியத்துவமும் தேவையும் உடையதாக உள்ளது. இச்செய்தியை மக்கள் அனைவரும், குறிப்பாக

இஸ்லாமியர்கள் உணர்ந்து செயல்பட வேண்டும் என்ற நோக்கில் திண்டுக்கல் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள பள்ளிவாசல் இமாம்களைச் சந்தித்து, ஜமாஅத் பிரத்யேகமாக தயாரித்த ஜும்மா உரைகள் வழங்கப்பட்டன.




## தஞ்சாவூர் ஆண்கள் வட்டம் சார்பில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டது.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அண்டை வீட்டாரின் உரிமைகள் பரப்புரையை முன்னிட்டு 25.11.2025 அன்று தஞ்சாவூர் ஆண்கள் வட்டம் சார்பாக 10 ஆட்டோ ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டது.



## தொழுதூர் பள்ளிவாசலில் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்த பெண்கள் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிர் அணி தொழுதூர் வட்டம் சார்பாக, அண்டை வீட்டார் உரிமைகள் என்ற அகிலஇந்திய பரப்புரையை முன்னிட்டு 25.11.25 அன்று மதியம் 3 முதல் 4 மணி வரை தொழுதூர் பள்ளிவாசலில் பெண்கள் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. “அண்டை வீட்டாரின் உரிமைகள்” என்ற தலைப்பில் நடைபெற்ற உள்ளரங்கு கூட்டத்தில் திருச்சி மண்டல அமைப்பாளர் ஜி. சையது முகமது மற்றும் அஸ்லாம் இஸ்லாமிய கல்லூரியின் இயக்குநர் அமானுல்லா ஆகியோர் சிறப்புரையாற்றினர். சகோதரி பௌஜி கிராத் ஓதியதுடன், நிகழ்ச்சி சகோதரி சபிரா அவர்களால் வழிநடத்தப்பட்டது. இதில் 40 பெண்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

## இளங்காகுறிச்சி வட்டத்தில் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்த சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.




ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் இளங்காகுறிச்சி வட்டத்தில் “அண்டை வீட்டார் உரிமைகள்” என்ற அகிலஇந்திய பரப்புரையை முன்னிட்டு புதுவட்டத்தில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சகோதரி தௌலத் அவர்கள் சிறப்புரையாற்றினர். மொத்தம் 15 நபர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியில் தேநீர் மற்றும் இனிப்பு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் மாதந்தோறும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டும் என கருத்து தெரிவித்தனர். மேலும் இளங்காகுறிச்சி வட்டத்தில் வீடு வீடாக சென்று மடக்கோலை, சமரசம் இதழ் மற்றும் அண்டைவீடு பற்றிய புத்தகம் வழங்கப்பட்டது.

# கிருஷ்ணன்கோவில் பெண்கள் வட்டத்தில் அண்டை வீட்டார் பரப்புரை சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.



25.11.2025 செவ்வாய்க்கிழமை மதியம் 2 மணி முதல் 4 மணி வரை கிருஷ்ணன்கோவில் பெண்கள் வட்டம் சார்பாக அண்டை வீட்டார் பரப்புரை சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் சகோதர சமுதாய பெண்கள் 3 பேர் உட்பட சுமார் 40 பெண்கள் கலந்து கொண்டனர். திருக்குர்ஆன் வசனம் ஓதி நிகழ்ச்சி தொடங்கப்பட்டு, சகோதரி ஆசியா சிறப்புரையாற்றினார். அண்டை வீட்டாரின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் சிறிய நாடகக் காட்சிகளும் அரங்கேறின. பங்கேற்றவர்கள் தங்கள் அண்டை வீட்டாரை பற்றிய அனுபவங்களையும் அவர்களின் நற்பண்புகளையும் பரிமாறிக் கொண்டனர். நிகழ்ச்சி ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நாகர்கோயில் வட்ட பெண்கள் பொறுப்பாளர் சகோதரி அஹமது மீறாள் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பங்கேற்ற பெண்கள் அனைவரும் அண்டை வீட்டாரின் முக்கியத்துவத்தை உணர்ந்து பயனடைந்தனர்.



# குமரி மாவட்ட அரசு காஜிக்கு அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை பொருட்கள் வழங்கப்பட்டது.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் பேரியக்கத்தின் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையை முன்னிட்டு குமரி மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபை தலைவர், மாவட்ட அரசு காஜி மற்றும் தக்கலை ஸமதானியா அரபிக் கல்லூரி முதல்வர் மௌலவி அல்ஹாஜ் R. N. K. அபூசாலிஹ் ஃபாழில் பாகவி ஹழ்ரத் அவர்களுக்கு Dr. K. V. S. ஹபீப் முஹம்மத் எழுதிய அழகிய அண்டை வீடு புத்தகம், அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை கையேடுகள் மற்றும் சமரசம் சிறப்பிதழ் ஆகியவை வடசேரி பள்ளியில் வைத்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நாகர்கோயில் கிளை பொறுப்பாளர் சகோதரர் ஹபீப் அவர்களால் வழங்கப்பட்டது.

# தென்காசியில் முக்கியஸ்தர்கள் மற்றும் ஆலிம்களைச் சந்தித்து அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை ஆவணங்கள் வழங்கப்பட்டது.





25.11.2025 (03/06/1447 ஹிஜ்ரி) செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணி 9.00 மணி வரை தென்காசியில் முக்கியஸ்தர்கள் மற்றும் ஆலிம்கள் சந்திக்கப்பட்டு, அண்டை வீட்டாரின் உரிமைகள் பரப்புரையுடன் தொடர்புடைய ஜும்மா உரைகள், மடக்கோலைகள், டாக்டர் K. V. S. அவர்களின் அழகிய அண்டை வீட்டார் புத்தகம் மற்றும் சமரசம் இதழ் ஆகிய ஆவணங்கள் வழங்கப்பட்டன.

## கடலூரில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை துவக்கப்பட்டது.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிர் அணி கடலூர் சார்பாக இன்று அண்டை வீட்டார் உரிமைகள் நாடு தழுவிய பரப்புரையைப் பற்றி புது மரைக்காயர் தெருவில் வசிக்கும் மக்களுக்கு போல்டர்கள் வழங்கி பரப்புரை துவக்கப்பட்டது.

## துவரங்குறிச்சி கிளையில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை தோராயமான தேநீர் விருந்துடன் நடைபெற்றது.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் துவரங்குறிச்சி கிளை சார்பாக 25.11.2025 அன்று அண்டை வீட்டார் உரிமைகள் அகில இந்திய பரப்புரையை முன்னிட்டு சகோதரி ஊழியர் நஜ்மா அவர்களின் இல்லத்தில் தேநீர் விருந்து நடைபெற்றது. இதில் அனீஸ் பாத்திமா அவர்கள் (அத்தியாயம் 3:12) குர்ஆன் கிராத் ஓதியதுடன், பரப்புரையின் நோக்கும் அண்டை வீட்டாரின் முக்கியத்துவமும் குறித்து உரையாடல் நடைபெற்றது. அண்டை வீட்டாரின் நன்மைகள் மற்றும் சவால்கள் பற்றிய கலந்துரையாடலும் நடந்தது. கலந்து கொண்ட அண்டை வீட்டார் அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது.

## புதுச்சேரியில் கலைமாமணி Dr. தமிழ்வாணனைச் சந்தித்து அண்டை வீட்டார் பரப்புரை விளக்கப்பட்டது.

அண்டை வீட்டார் பரப்புரையின் ஒரு பகுதியாக புதுச்சேரியில் செயல்பட்டு வரும் “EACH” அமைப்பைச் சேர்ந்த கலைமாமணி Dr. தமிழ்வாணன் அவர்கள் சந்திக்கப்பட்டு, பரப்புரையின் நோக்கமும் தேவையும் குறித்து கருத்து பரிமாறப்பட்டது. சந்திப்பு நிறைவில் பரப்புரையின் புத்தகமும் சமரசம் இதழும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

## அறந்தாங்கி வட்டத்தில் சட்டப் பொறுப்பாளர் சந்தித்து அண்டை வீட்டார் பரப்புரை அறிமுகப்படுத்தப்பட்டது.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அறந்தாங்கி வட்டத்தின் சார்பாக முக்கியஸ்தர்கள் சந்திப்பு நடைபெற்று வரும் நிலையில், அதன் ஒரு பகுதியாக 25.11.2025 அன்று Adv. முகமது அனஸ் (SDPI புதுக்கோட்டை கிழக்கு மாவட்ட சட்டப் பொறுப்பாளர்) அவர்கள் சந்திக்கப்பட்டனர். பரப்புரையின் நோக்கம் விரிவாக எடுத்துரைக்கப்பட்டதுடன், அழகிய அண்டை வீடு புத்தகமும் மடக்கோலையும் வழங்கப்பட்டது. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அமைப்பைப் பற்றிய விவரங்களையும் அவர் அறிந்து கொண்டார். புத்தகமும் மடக்கோலையும் மகிழ்ச்சியுடன் பெற்ற அவர் பாராட்டுகளையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்தார்.



# அறந்தாங்கி CNC மருத்துவமனையில் மருத்துவரைச் சந்தித்து அண்டை வீட்டார் பரப்புரை விளக்கப்பட்டது.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அறந்தாங்கி வட்டத்தின் சார்பாக முக்கியஸ்தர்கள் சந்திப்பு நடைபெற்று வரும் நிலையில், அதன் ஒரு பகுதியாக 25.11.2025 அன்று அறந்தாங்கி CNC மருத்துவமனைக்கு சென்று Dr. சஸ்னா தாஸ் (MS, OG) அவர்கள் சந்திக்கப்பட்டார். பரப்புரையின் நோக்கம் எடுத்துரைக்கப்பட்டதுடன், அழகிய அண்டை வீடு புத்தகமும் மடக்கோலையும் வழங்கப்பட்டது. அவர் அவற்றை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டு நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

# அறந்தாங்கி வட்டத்தில் வழக்கறிஞர் அலுவலகத்தில் அண்டை வீட்டார் பரப்புரை அறிமுகப்படுத்தப்பட்டது.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அறந்தாங்கி வட்டத்தின் சார்பாக முக்கியஸ்தர்கள் சந்திப்பு நடைபெற்று வரும் நிலையில், அதன் ஒரு பகுதியாக 25.11.2025 அன்று வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்று Adv. சாத்தையா (Advocate Clerk) அவர்கள் சந்திக்கப்பட்டனர். பரப்புரையின் நோக்கும் அதன் முக்கியத்துவமும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டதுடன், டாக்டர் K. V. S. ஹபீப் முஹம்மத் அவர்களின் அழகிய அண்டை வீடு புத்தகமும் மடக்கோலையும் வழங்கப்பட்டது. அலுவலகப் பணிகளுக்கிடையிலும் அவர் நேரம் ஒதுக்கி விவரங்களை பொறுமையாகக் கேட்டறிந்தார். பின்னர் மடக்கோலையும் புத்தகத்தையும் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டு பாராட்டுகளையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

# கிருஷ்ணகிரி கிளையில் வீடு வீடாகச் சென்று அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை மேற்கொள்ளப்பட்டது.

JIH மகளிர் அணி கிருஷ்ணகிரி கிளை சார்பாக இன்று அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையை முன்னிட்டு வீடு வீடாகச் சென்று மக்களை சந்தித்து பிரசுரங்கள் வழங்கி பரப்புரையின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கப்பட்டது. மேலும் கோட்டையில் உள்ள உருது பள்ளிக்கு சென்று அங்குள்ள ஆசிரியர்கள் மற்றும் மாணவிகளையும் சந்தித்து அண்டை வீட்டாரின் உரிமைகளின் முக்கியத்துவம் விளக்கப்பட்டது. இதனுடன் கோட்டை, விஸ்டம் பள்ளி பின்பக்கம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள மக்களும் சந்திக்கப்பட்டனர்.



# மன்னார்குடி ஜமாஅத் அலுவலகத்தில் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்த உரைகள் நடைபெற்றது.




இன்று (26.11.25) மன்னார்குடி கிளை ஜமாஅத் அலுவலகத்தில் அண்டை வீட்டாருக்கான உரிமைகள் பற்றி உரைகள் நிகழ்த்தப்பட்டன. இதில் பெண்கள் மேம்பாட்டு மையம் தையற்பயிற்சி ஆசிரியர் மற்றும் மாணவியர் உட்பட 25 சகோதர சமுதாயத்தை சேர்ந்த சகோதரிகளும், இல்லாமிய 15 பெண்களும் கலந்து கொண்டனர். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிர் அணி பொறுப்பாளர் சஹானாஸ் மற்றும் எஸ்.ஐ.ஓ. பொறுப்பாளர் அப்துல் முக்சித் ஸலாமி ஆகியோர் அண்டை வீட்டார் பரப்புரை தொடர்பான உரைகளை நிகழ்த்தினர்.



# திருப்பத்தூரில் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்த அரங்கக் கூட்டம் மற்றும் கண்காட்சி நடைபெற்றது.



அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையை முன்னிட்டு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் திருப்பத்தூர் கிளை சார்பாக 22.11.25 அன்று A.J.B. கல்யாண மண்டபத்தில், கோட்டை தெரு மற்றும் ஆறிப் நகர் மக்களுக்காக அரங்கக் கூட்டமும் கண்காட்சியும் நடைபெற்றது. இதில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். கலந்து கொண்ட அனைவருக்கும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் திருப்பத்தூர் மகளிர் கிளை சார்பாக நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது.

# அரங்கக் கூட்டம் மற்றும் கண்காட்சி.

அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையை முன்னிட்டு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் திருப்பத்தூர் கிளை சார்பாக 23.11.25 அன்று S.N. கல்யாண மண்டபத்தில் புதுப்பேட்டை ரோடு, T.P. Burhan Street மற்றும் Qazi Masjid Street பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்காக அரங்கக் கூட்டமும் கண்காட்சியும் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக ஜாமியா தருஸ் சலாம் உமராபாத் கல்லூரி பேராசிரியர் ஜமாலுதீன் சாஹிப் உமரி அவர்கள் கலந்து கொண்டு கண்காட்சியைத் தொடங்கி சிறப்புரையாற்றினர். இதில் 175 பெண்களும் 25 குழந்தைகளும் கலந்து கொண்டு பயனடைந்தனர். குறிப்பாக 35 சகோதர சமுதாயத்தைச் சேர்ந்த சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் கலந்து கொண்டு கண்காட்சியை ரசித்தனர். கலந்து கொண்ட அனைவருக்கும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் திருப்பத்தூர் மகளிர் கிளை சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.



## செல்லூர் பகுதியில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை விளக்கப்பட்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது.



அண்டை வீட்டாரின் உரிமைகள் பரப்புரையை முன்னிட்டு செல்லூர் பகுதியில் வசிக்கும் மஹல்லாக்கள் சார்ந்தோர், சகோதரசமுதாய சகோதரர்கள் மற்றும் முஸ்லிம் சகோதரர்கள் மத்தியில் செல்லூர் வட்டப் பொறுப்பாளர் டாக்டர் அ. ஆவல் பீர் மற்றும் JIH ஊழியர்கள் அண்டை வீட்டாரின் உரிமைகள் குறித்து தெளிவாக எடுத்துரைத்தனர். அவர்களுக்கெல்லாம் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையின் போல்டர்கள் வழங்கப்பட்டன.

## கம்பம் நகர இமாம்களுக்கு அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை விளக்கப்பட்டது.





கம்பம் கிளையின் சார்பாக அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையை முன்னிட்டு கம்பம் நகரில் ஜும்ஆ பயான் செய்யும் அனைத்து இமாம்களையும் சந்தித்து விளக்கம் அளிக்கப்பட்டது. ஜும்ஆ உரைகளில் இதுகுறித்து வலியுறுத்தி பேசுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. நடைபெற்ற சந்திப்புகள் மனநிறைவையும் உற்சாகத்தையும் அளித்தன.

## விருதுநகரில் முக்கியஸ்தரைச் சந்தித்து அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை விளக்கப்பட்டது.



நாடு தழுவிய அண்டை வீட்டார் பரப்புரையின் ஒரு நிகழ்வாக விருதுநகர் பகுதியில் முக்கியஸ்தர்கள் சந்திப்பு நடைபெற்றது. விருதுநகர் மாவட்ட நூலகத்தின் தலைமை நூலகர் மதிப்பிற்குரிய செந்தில் குமார் (M.Sc., M.Phil., M.Lisc.) அவர்களை Dr. அப்துல்லாஹ் மற்றும் கன்வீனர் செய்யது உசேன் சந்தித்து, பரப்புரையின் நோக்கும் அவசியமும் குறித்து எடுத்துரைத்தனர். அன்புடன் கேட்ட நூலகர், தாம் சங்கரன்கோவில் பகுதியைச் சேர்ந்தவர் என்றும், கடையநல்லூரில் பெற்ற 12 ஆண்டு பணிப்பரிணாமத்தை சுவாரசியமாக பகிர்ந்து கொண்டதுடன், தன்னுக்கும் முஸ்லிம் நண்பர்களுக்கும் உள்ள நல்லுறவைப் பற்றியும் குறிப்பிட்டார். சந்திப்பின் முடிவில் Dr. அப்துல்லாஹ் அவர்கள் செந்தில் குமார் அவர்களுக்கு சமரசம் இதழ், மடக்கோலைகள் மற்றும் அழகிய அண்டை வீடு புத்தகத்தை வழங்கினார்.

## கடையநல்லூர் மஸ்ஜிதுத் தைக்கா நர்சரி பள்ளியில் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்து விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

கடையநல்லூர் கிளை சார்பாக அண்டை வீட்டாரின் உரிமைகள் பற்றிய பரப்புரையின் ஒரு பகுதியாக இன்று மஸ்ஜிதுத் தைக்கா நர்சரி பள்ளியில் இஸ்லாம் கூறும் அண்டை வீட்டார் உரிமைகள் பற்றி மாணவர்களுக்கும் ஆசிரியைகளுக்கும் எடுத்துரைக்கப்பட்டு ஃபோல்டர்கள் வழங்கப்பட்ட இப்பரப்புரை


இக்காலத்திற்கு மிகவும் தேவையானது என்றும் அதை சரிவர நிறைவேற்றுவோம் என அவர்கள் உறுதியளித்தனர். இதில் 15 ஆசிரியைகளும் மாணவர்களும் கலந்து கொண்டனர். ஸ்டிக்கர்களும் வழங்கப்பட்டன. தலைமை ஆசிரியை ரசூல் பீவி அவர்கள், “சரியான நேரத்தில் செய்யவேண்டிய பணி இதுதான்” என கருத்து தெரிவித்துப் பெரும் மகிழ்ச்சி அடைந்ததாக கூறினார்.



## இலங்காகுறிச்சி வட்டத்தில் அண்டை வீட்டார் உரிமைகள் தொடர்பான சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் இலங்காகுறிச்சி வட்டத்தில் அண்டை வீட்டார் உரிமைகள் என்ற அகிலஇந்திய பரப்புரையை முன்னிட்டு இரண்டாவது வட்டத்தில் இன்று சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சகோதரி தௌலத் அவர்கள் குர்ஆன் கிராத் ஓதியதுடன், சகோதரி நஸ்ரின் அவர்கள் சிறப்புரையாற்றினர். மொத்தம் 20 நபர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியில் தேநீரும் இனிப்பும் வழங்கப்பட்டது. கலந்து கொண்டவர்கள் அனைவரும் முதலில் நாங்கள் முன்மாதிரியாக விளங்குவோம் என உறுதியளித்தனர். அபிமானிகளுக்கு சமரசம் இதழ், அண்டை வீட்டார் புத்தகம் மற்றும் மடக்கோலை வழங்கப்பட்டது. அய்யலூர் வட்டத்தில் சகோதர சமுதாயத்தைச் சேர்ந்த சகோதரிகள் சந்திக்கப்பட்டு, அண்டை வீட்டார் உரிமைகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டு, அவர்களுக்கு மடக்கோலை வழங்கப்பட்டது.




## செல்லூர் பகுதியில் இமாம் சந்தித்து அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை ஜும்ஆ உரைகள் வழங்கப்பட்டது.

செல்லூர் பகுதியில் கோபுதூர் D.R.O பள்ளிவாசல் இமாம் அஹமத் ஹினாயத்துல்லாஹ் மன்பஈ அவர்களை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மதுரை கிளை செல்லூர் வட்டப் பொறுப்பாளர் சகோதரர் டாக்டர் ஆவல் பீர் மற்றும் JIH ஊழியர்கள் சந்தித்து, நடைபெற்று வரும் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையை முன்னிட்டு வரவிருக்கும் ஜும்ஆகளில் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்து உரைகள் வழங்கிடத்தக்க வகையில் ஜும்ஆ உரைகள் அவர்களுக்கு வழங்கினர்.

## கோரிப்பாளையம் அபிமானி வட்டத்தில் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்து சிறப்புரை நடைபெற்றது.



இன்று மதுரை கிளை கோரிப்பாளையம் அபிமானி வட்டம் சார்பாக அண்டை வீட்டாரின் உரிமைகள் பற்றிய பரப்புரையில் JIH ஊழியர் சகோதரி சபினா ஆலிமா அவர்கள் சிறப்புரையாற்றினார். அதைத் தொடர்ந்து கேள்வி–பதில் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் 20 பெண்கள் கலந்து கொண்டனர்.



## தஞ்சாவூர் மகளிர் கிளையில் அண்டை வீட்டார் உரிமைகள் பற்றி பயான் நடைபெற்றது.

அண்டை வீட்டாரின் உரிமைகள் பரப்புரையை முன்னிட்டு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தஞ்சாவூர் மகளிர் கிளை சார்பாக இன்று 26.11.25 S.N.M. காசிம் நகர் பேகம் அவர்கள் இல்லத்தில் பயான் நடைபெற்றது. இதில் 23 நபர்கள் கலந்து கொண்டனர்.

## பெரம்பூர் பகுதியில் பள்ளி தலைமை ஆசிரியர்களைச் சந்தித்து அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை விளக்கப்பட்டது.



பெரம்பூர் கிளை மகளிர் அணி சார்பாக நான்கு பள்ளிகள் மற்றும் பெண்கள் மதரசா தலைமை ஆசிரியர்கள் சந்திக்கப்பட்டு, அண்டை வீட்டாரின் உரிமைகள் பரப்புரையின் நோக்கமும் அதன் முக்கியத்துவமும் எடுத்துரைக்கப்பட்டதுடன், அதை குழந்தைகளிடம் வலியுறுத்திக் கூறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும் சமரசம், உதயதாரகை மற்றும் அழகிய அண்டை வீடு புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

## திருப்பத்தூர் கிளையில் முதவல்லிகள், உலமாக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் சந்திப்பு நடைபெற்றது.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்திய பரப்புரையை முன்னிட்டு, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் திருப்பத்தூர் கிளை சார்பாக முதவல்லிகள், உலமாக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் சந்திப்பு நிகழ்ச்சி அமீரே முகமி ஜனாப் மவுலானா ஹாபிஸ் சமிவுல்லா உமரி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் 50-க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டனர். புகழ் அனைத்தும் இறைவனுக்கே; இரவு விருந்தோம்பலுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.



## புளியங்குடியில் முக்கியஸ்தர்கள் மற்றும் ஆலிம்களைச் சந்தித்து அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை பொருட்கள் வழங்கப்பட்டது.


*26.11.2025 (05/06/1447 ஹிஜ்ரி) புதன்கிழமை மாலை 5.30 மணி முதல் 9.00 மணி வரை புளியங்குடியில் முக்கியஸ்தர்கள் மற்றும் ஆலிம்கள் சந்திக்கப்பட்டு, அண்டை வீட்டாரின் உரிமைகள் பரப்புரையைச் சார்ந்த ஜும்மா உரைகள், மடக்கோலைகள், டாக்டர் K. V. S. அவர்களின் அழகிய அண்டை வீட்டார் புத்தகம் மற்றும் சமரசம் இதழ் வழங்கப்பட்டன.*

## குடியாத்தம் கிளையில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை முன்னிட்டு ஊடகவியலாளர் சந்திப்பு நடைபெற்றது.



*ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் குடியாத்தம் கிளை சார்பாக “அண்டை வீட்டார் உரிமைகள்” நாடு தழுவிய பரப்புரையை முன்னிட்டு 26.11.2025 புதன்கிழமை மாலை ஜமாஅத் அலுவலகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பு நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கிளைத் தலைவர் S.N. இக்பால் அஹமத் தலைமையாற்றினார். ஆசிரியர் அப்துல் காதர் உமரி இறைமறை வசனங்கள் வாசித்து தொடங்கினார்; ஆசிரியர் முஹம்மத் நூருல்லாஹ் வரவேற்புரை வழங்கினார். பேராசிரியர் ஜமாலுதீன் உமரி சிறப்புரையாற்றினார். சிறப்பு விருந்தினராக கல்வியாளர் மகாராஜன் வாழ்த்துரை வழங்கினார். ஊடகவியலாளர்கள் சார்பாக தந்தி டிவி நிருபர் உமாசங்கர் கருத்துரை வழங்கினார். இறுதியில் கலந்து கொண்ட அனைவருக்கும் அழகிய அண்டை வீட்டார் புத்தகமும் சமரசம் சிறப்பிதழும் வழங்கப்பட்டது. தமிழகத்தின் முக்கிய ஊடக நிருபர்கள் இதில் கலந்து கொண்டனர். தி.மு.க. சார்ந்த திரு ஜம்பு, திரு. அமானுல்லா மற்றும் ஜமாஅத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அப்துல்லா நாசிர் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர். இயக்க ஊழியர்கள் M. G. யாசர் அராபாத், அப்துல் காதர் பாபு, சாதிக் பாஷா ஆகியோரின் ஒத்துழைப்புடன் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.*

## குன்னூர் வட்டத்தில் அண்டை வீட்டார் உரிமைகள் அகில இந்திய பரப்புரை பணிகள் சிறப்பாக நடைபெறுகின்றன.



*ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்திய பரப்புரையை முன்னிட்டு குன்னூர் வட்டம், அல்லாஹ்வின் கிருபையால், குழந்தைகள், பெண்கள் வட்டம் மற்றும் இயக்க ஊழியர்கள் அனைவரின் ஒத்துழைப்புடன் பல்வேறு பணிகளைச் சிறப்பாக மேற்கொண்டுள்ளது.*



பள்ளிவாசல் பொறுப்பாளர்கள் மற்றும் ஆலிம்களுக்கு கடிதங்கள், புத்தகங்கள், ஜும்ஆ உரை குறித்த கடிதங்கள் வழங்கப்பட்டதுடன், பள்ளிவாசல்களில் பேனர்கள் நிறுவப்பட்டன. மசூராவின் அடிப்படையில் VIP சந்திப்பு, பள்ளிவாசல்களில் மடக்கோலை மற்றும் சமரசம் இதழ் விநியோகம், டாக்டர் K. V. S. அவர்களின் புத்தகங்கள் வழங்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் செய்யப்பட்டன. பெண்கள் முஹல்லாவில் பரப்புரைக்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு, 60-க்கும் மேற்பட்ட வீடுகளில் நேரடியாகச் சந்தித்து பரப்புரை செய்யப்பட்டது. தனிநபர் சந்திப்பில் ஒவ்வொருவருக்கும் தமதுச்சூழலிலுள்ள பத்து வீடுகளுக்கு செய்தி எடுத்துச் செல்லும் இலக்கு வழங்கப்பட்டு, பலர் 10-க்கும் மேற்பட்ட வீடுகளில் பரப்புரையைச் சிறப்பாக நிறைவேற்றினர். குழந்தைகள் GIO, தங்களது நண்பர்களின் வீடுகளுக்கு சென்று பரப்புரையில் ஈடுபட்டனர். செல்ஃபி கார்னர் அமைக்கப்பட்டு, அதன் முக்கியத்துவமும் விளக்கப்பட்டது. வரவிருக்கும் நாட்களில் இன்ஷா அல்லாஹ் SIO குழந்தைகளுக்கான கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள், திறந்த வெளி அரங்கு நிகழ்ச்சி உள்ளிட்டவை நடைபெற உள்ளன.

## தருமபுரி CIO யூனிட்டில் அண்டை வீட்டார் பரப்புரை சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

CIO தருமபுரி யூனிட்டின் சார்பாக அண்டை வீட்டார் பரப்புரை சிறப்பு நிகழ்ச்சி 23.11.25 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணி முதல் 5 மணி வரை நடைபெற்றது. அமீரே முகாமி ஜனாப் இம்ரான், ஜனாப் அஸ்வக், தருமபுரி அயிஷா மஸ்ஜித் முத்தவல்லி ஜனாப் M. A. சிக்கந்தர், ஜனாப் கபீர் ஆகியோர் சிறப்புரையாற்றினர். ஆண், பெண் உறுப்பினர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியில் 40 குழந்தைகள் பங்கேற்றனர். பேச்சுப்போட்டியில் 11, கட்டுரை போட்டியில் 7, கதை சொல்லும் போட்டியில் 9 மாணவர்கள் கலந்து கொண்டனர். அண்டை வீட்டார் உரிமைகள் பற்றிய நாடகம் 5 குழந்தைகளால் அரங்கேற்றப்பட்டது. ஸ்நாக்ஸ் வழங்கப்பட்டு, துவாவுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது; மாற்று மதத்தைச் சேர்ந்த 14 குழந்தைகளும் இதில் கலந்து கொண்டனர்.

## சூளைமேடு பகுதியில் காவல் நிலையம், கவுன்சிலர் அலுவலகம் மற்றும் மஸ்ஜித் இமாம்களுக்கு அண்டை வீட்டார் பரப்புரை கையேடுகள் வழங்கப்பட்டது.




"முன்மாதிரி அண்டை வீட்டார் — முன்மாதிரி சமூகம்" பரப்புரையை முன்னிட்டு சூளைமேடு காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் கவுன்சிலர் அலுவலகத்திற்கு சென்று சமரசம் இதழ் மற்றும் பரப்புரை கையேடுகள் வழங்கப்பட்டது. நேற்று மாலை சூளைமேடு பாஷா தெரு, சௌராஷ்ட்ரா நகர், கோடம்பாக்கம் புலியூர் பள்ளிவாசல் ஆகிய மஸ்ஜித்களின் இமாம்களையும் சந்தித்து சமரசம் மற்றும் பரப்புரை கையேடுகள் வழங்கப்பட்டது. தொழுகைக்கு வந்திருந்த சகோதரர்களுக்கும் பரப்புரை தொடர்பான கையேடுகள் விநியோகிக்கப்பட்டன.

# சூளைமேடு MMDA அண்ணாநகர் கிளையின் முன்மாதிரி சமூகம் தொடர்பான சிறப்பு கூட்டம்.



சூளைமேடு MMDA அண்ணாநகர் கிளை சார்பாக 23.11.2025 ஞாயிற்றுக்கிழமை காலை ‘முன்மாதிரி அண்டை வீட்டார், முன்மாதிரி சமூகம்’ என்ற தலைப்பில் ஆசாத் நகர் பள்ளிவாசல் மண்டபத்தில் சிறப்பு கூட்டம் நடைபெற்றது. சகோதரர் வி. எஸ். முஹமது அமீன் அவர்கள் சிறப்புரையாற்றினர். மேல்சுட்டப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த சகோதரரும் சகோதரிகளும் திரளாக கலந்து கொண்டனர்.

# மணப்பாறை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் சார்பில் முக்கியஸ்தர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுடன் தொடர்ச்சியான பரப்புரை அறிமுகச் சந்திப்புகள்.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மணப்பாறை வட்டத்தின் சார்பில் முக்கியஸ்தர்கள் மற்றும் கல்வி நிறுவன பிரதிநிதர்களுடன் தொடர்ச்சியாக சந்திப்புகள் நடைபெற்று வருகின்றன. அதன் ஒரு பகுதியாக 25.11.2025 அன்று Dr. ஷோபனா அவர்கள் சந்திக்கப்படுத்தினர். பரப்புரை அறிமுகப்படுத்தப்பட்டதுடன், டாக்டர் கே.வி.எஸ். ஹபீப் முஹம்மத் அவர்களின் அழகிய அண்டை வீடு புத்தகமும் மடக்கோலையும் வழங்கப்பட்டது. பரப்புரையின் நோக்கம் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து விரிவாக விளக்கப்பட்டபோது, தனது பணிப்பிரச்சாரத்துக்கு நடுவிலும் நேரம் ஒதுக்கிய அவர் விவரங்களை கவனத்துடன் கேட்டறிந்து, புத்தகத்தையும் மடக்கோலையும் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டு பாராட்டுகளையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்தார்.



அதேபோல், 26.11.2025 அன்று ஸ்ரீ குரு வித்யாலயா பள்ளியின் தாளாளர் மற்றும் தலைமை ஆசிரியை, மேலும் சேலஞ்சர்ஸ் வித்யாலயா பள்ளியின் தாளாளர் ஆகியோரும் சந்திக்கப்படினர். இரு பள்ளிகளிலும் பரப்புரை அறிமுகப்படுத்தப்பட்டதுடன், மேற்கண்ட புத்தகமும் மடக்கோலையும் வழங்கப்பட்டன. பள்ளி பணிகளுக்கிடையில் நேரம் ஒதுக்கிய அவர்கள் பரப்புரையின் நோக்கத்தை பொறுமையுடன் கேட்டறிந்து, புத்தகத்தையும் மடக்கோலையும் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டு பாராட்டுகளையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்தனர். அனைத்து சந்திப்புகளும் இனிதாக நிறைவுற்றன.



இதற்கிடையில், வட்டத்தின் சார்பில் மதரஸாக்கள் சந்திப்பும் நடைபெற்று வருகிறது. அகில இந்திய அண்டை வீட்டார்



உரிமைகள் பரப்புரையை முன்னிட்டு, 25.11.2025 அன்று ராஜீவ் நகரில் அமைந்துள்ள ஃபுர்கானியா மதரஸாவில் மார்க்கக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அண்டை வீட்டாரின் உரிமைகள் மற்றும் அவர்களிடம் நாம் கடைப்பிடிக்க வேண்டிய நடத்தை முறைகள் குறித்து வகுப்புகள் நடத்தப்பட்டன. 30க்கும் மேற்பட்ட மாணவ–மாணவியர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் சகோதரி ஜெனிஃபர் நிஷா அவர்கள் உரையாற்றினர். சந்திப்பு சிறப்பாக நடைபெற்றது.

## கம்பம் அதாயி அரபிக் கல்லூரி முதல்வருடன் அண்டைவீட்டார் உரிமைகள் தொடர்பான சந்திப்பு.




கம்பம் அதாயி அரபிக் கல்லூரி முதல்வர் மௌலவி தாரிக் அகமது பிலாலி அவர்களை சந்தித்து, அண்டைவீட்டார் உரிமைகள் பரப்புரை பற்றி விளக்கமளித்து பல்வேறு விஷயங்களை கலந்தாலோசித்தோம். நிறைவான சந்திப்பாக அமைந்தது.

## ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மதுரை கிளை சார்பில் எழுத்தாளர் மதுக்கூர் ராமலிங்கம் சந்திப்பு.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மதுரை கிளை சார்பாக அண்டை வீட்டார் பரப்புரையின் ஒரு பகுதியாக தமிழ்நாடு எழுத்தாளர் சங்க மாநில தலைவர் **மதுக்கூர் ராமலிங்கம்** அவர்களை மதுரை கிளை தலைவர் மௌலவி முஹைய்த்தீன் குட்டி உமரி அவர்களும் முன்னாள் தலைவர் Er. பஷிர் அஹமது சாஹிப் அவர்களும் சந்தித்து பேசினர். இயக்கம் மேற்கொள்ளும் பரப்புரைகள் மற்றும் இயக்கத்தின் சிந்தனைகள் குறித்து விவாதித்தனர். சந்திப்பின் போது மதுரை கிளை முன்னாள் தலைவர் Er. பஷீர் அஹமது அவர்கள் எழுத்தாளர் மதுக்கூர் ராமலிங்கம் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கவுரவித்தார். மேலும், மதுரை கிளை தலைவர் மௌலவி முஹைய்த்தீன் குட்டி உமரி அவர்கள் பொது கூட்டத்திற்கான அழைப்பிதழ் வழங்கி அழைப்பு விடுத்தார்.



## விருதுநகர் S.F.S. மெட்ரிகுலேஷன் பள்ளி முதல்வருடன் அண்டைவீட்டார் உரிமைகள் தொடர்பான சந்திப்பு.

விருதுநகர் S.F.S. Matriculation School Principal Rev. Fr. A. Arockiam MSFS அவர்களை சந்தித்து அண்டைவீட்டார் உரிமைகள் பரப்புரை குறித்து விளக்கமளித்து பல்வேறு

விஷயங்களை கலந்தாலோசித்தோம். நிறைவான சந்திப்பாக அமைந்தது.



## ஜாமியா பெரிய பள்ளிவாசல் முத்தவல்லிக்கு பரப்புரை சிற்றேடுகள் மற்றும் அரங்கக் கூட்ட அழைப்பிதழ் வழங்கல்.

*ஜாமியா பெரிய பள்ளிவாசல் முத்தவல்லி Dr. நிஜாம்பாபு அவர்களுக்கு பரப்புரையின் சிற்றேடுகள் மற்றும் அரங்கக் கூட்டம் தொடர்பான அழைப்பிதழ் வழங்கப்பட்டது.*

## திண்டுக்கல் வணிக வளாக உரிமையாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினருக்கு பரப்புரை நூல்கள் வழங்கல்.



*திண்டுக்கல் Fashion Silks மற்றும் Sha Ready-mades உரிமையாளர்களுக்கு பரப்புரையின் அவசியமும் நோக்கமும் தெரிவித்து அவர்களுக்கு புத்தகங்கள் வழங்கப்பட்டது. 38-ஆம் வார்டு திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் அவர்களுக்கு புத்தகம் வழங்கப்பட்டது.*

## பெரிய கடைவீதி மகளிரணி ஆதரவாளர் வட்டத்தில் அண்டை வீட்டார் கலந்துரையாடல் மற்றும் உணவு பரிமாற்ற நிகழ்ச்சி.




*27-11-25 வியாழக்கிழமை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் பெரிய கடைவீதி மகளிரணி ஆதரவாளர் வட்டம் சார்பில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையை முன்னிட்டு அண்டை வீட்டார் கலந்துரையாடல் மற்றும் உணவு பரிமாற்றம் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. குர்ஆன் தஸ்கீர் சகோதரி சம்சியா பானு (பெரிய கடைவீதி ஆதரவாளர் வட்ட பொறுப்பாளர்) சிற்றுரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து மகளிரணி நாஜிமா சகோதரி ஹம்ஸா அவர்கள் வந்திருந்த சகோதரிகளுடன் கலந்துரையாடினார். அல்ஹம்துலில்லாஹ், இந்நிகழ்வில் 50 பெண்கள் கலந்து கொண்டு தங்களை அறிமுகப்படுத்தினர். பின்னர் உணவு பரிமாறப்பட்டது. தகவல்: பெரிய கடைவீதி ஆதரவாளர் வட்டம்.*

# மதுரை JIH சார்பில் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்து விழிப்புணர்வு.



மதுரை JIH சார்பில் அண்டை வீட்டார் பரப்புரையின் ஒரு பகுதியாக போக்குவரத்து உதவும் நண்பர்களை சந்தித்து, சகபயணியின் உரிமை, பக்கத்துவீட்டார் மற்றும் பக்கத்தில் வரும் வாகன பயணிகள் ஆகியோருக்கு தேவையாயின் உதவுவதும் வாகன ஒட்டிகளின் மரபாக இருந்தாலும், இஸ்லாம் அதை 1500 வருடங்களுக்கு முன்பே ஒரு உரிமையாக போதித்துள்ளது என்பதை எடுத்துக்கூறினோம். அவர்கள் அழகிய நட்பை பேணினர்.

# முக்கிய பிரமுகர்களிடம் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை மற்றும் நூல்கள் வழங்கல்.



அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக 20.11.2025 அன்று முக்கிய பிரமுகர்களை சந்தித்து, அண்டை வீட்டார் உரிமைகள் குறித்து விளக்கி அவர்களுக்கு மடக்கோலும் சமரசம், அண்டை வீட்டார் உரிமைகள் பற்றிய புத்தகங்களும் வழங்கினோம். இந்நிகழ்ச்சி குறித்து கருத்து கேட்ட போது, இக்காலத்திற்கு இது முக்கியமான பரப்புரை எனக் கூறி மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

# மன்னார்குடி உள்ளிக்கோட்டை கிராமத்தில் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி.



27.11.25 அன்று ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மன்னார்குடி கிளை சார்பில் அண்டை வீட்டாருக்கான உரிமைகள் பற்றி மன்னார்குடி அருகிலுள்ள உள்ளிக்கோட்டை கிராமத்தில் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் 5 சகோதர சமுதாயத்தை சேர்ந்த சகோதரிகளும், மேலதிருப்பாளக்குடி அரசுப் பள்ளி தலைமையாசிரியர் திரு. செந்தமிழன் அவர்களும், இல்லாமிய சகோதரிகள் 20 நபர்களும் இஸ்லாமிய சகோதரர்கள் 5 நபர்களும் கலந்து கொண்டனர். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மன்னார்குடி பொறுப்பாளர் மன்சூர் மற்றும் SIO பொறுப்பாளர் அப்துல் முக்சித் ஸலாமி அவர்கள் அண்டை வீட்டார் பரப்புரை தொடர்பாக உரையாற்றினர். கலந்துரையாடலில் தலைமையாசிரியர் திரு. செந்தமிழன் அவர்களும் மிகச் சிறப்பாக உரையாற்றினர்.

# முனிச்சாலை வட்டத்தில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை: இரண்டு நாள் வீடு வீடாக சந்திப்பு.



அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையை முன்னிட்டு முனிச்சாலை



வட்ட ஊழியர்கள் மற்றும் அபிமானிகள் 25, 26 ஆகிய இரண்டு நாட்களிலும் ஒவ்வொரு தெருவாக 100 வீடுகள் வரை சந்தித்து, அண்டை வீட்டார் தொடர்பின் அவசியம் மற்றும் சிறந்த அண்டை வீட்டார்களாக நாம் திகழ வேண்டும் என்பதற்கான குர்ஆன், நபிமொழியின் அறிவுரைகளைப் பகிர்ந்தனர். இதில் முனிச்சாலை அரசின் பொது மகப்பேறு மருத்துவமனை மருத்துவர் ரிஜ்வானா அவர்களைச் சந்தித்து பரப்புரை குறித்து கூறினோம். மருத்துவர் ரிஜ்வானா, "இந்த சந்திப்பு எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது; இனிவரும் காலங்களில் உங்களுடன் சேர்ந்து பயணிக்க விரும்புகிறேன்" என்று தெரிவித்தார். மேலும் ஆசிரியர்கள், ஆலிமாக்களைச் சந்தித்து அண்டை வீட்டார் பரப்புரை புத்தகம், மடக்கோலை மற்றும் பொது கூட்டத்திற்கான அழைப்பிதழ் வழங்கப்பட்டது. அனைத்து வீடுகளுக்கும் மடக்கோலை மற்றும் அழைப்பிதழ் வழங்கி, அனுமதி அளிக்கப்பட்ட இடங்களில் ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டது.

## விருதுநகர் பகுதியில் முக்கியஸ்தர்களுடன் அண்டைவீட்டார் உரிமைகள் பரப்புரை தொடர்பான சந்திப்புகள்.



நாடு தழுவிய அண்டைவீட்டார் உரிமைகள் பரப்புரையின் ஒரு நிகழ்வாக விருதுநகர் பகுதியில் முக்கியஸ்தர்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. விருதுநகர் Sri Vidya Educational Institutions Principal Dr. Raja அவர்களை சந்தித்து பரப்புரையின் நோக்கும் அவசியமும் குறித்து Dr. Abdhullah மற்றும் கன்வீனர் செய்யது உசேன் அவர்கள் எடுத்துக்கூறினர். பேராசிரியர் Dr. Raja அவர்களுக்கு சமரசம், மடக்கோலைகள் மற்றும் அழகிய அண்டைவீடு புத்தகம் வழங்கப்பட்டது. அதேபோல், Virudhunagar HPSM அரசு உதவிபெறும் பள்ளியின் தலைமையாசிரியர் அவர்களையும் சந்தித்து பரப்புரையை முன்னிட்டு கலந்துரையாடல் நடைபெற்றது. சக ஆசிரியர்களுக்கும் இறைவணக்க நிகழ்விலும் அண்டைவீட்டார் உரிமைகள் பற்றிய செய்தியை பகிர்வதாக அவர்கள் தெரிவித்தனர்.



## சேலம் ஆண்கள் வட்டம் சார்பில் இமாம்கள் மற்றும் முக்கியஸ்தர்களுடன் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை சந்திப்பு.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சேலம் ஆண்கள் வட்டம் சார்பில் அண்டை வீட்டாரின் உரிமைகள் நாடு தழுவிய பரப்புரையின் ஒரு பகுதியாக 26-11-2025 புதன்கிழமை அன்று ஜனாப் S.A.K. ஜெய்லானி அவர்கள் சேலம் வருகையால் அவர்களின் தலைமையில் இமாம்கள் சந்திக்கப்பட்டனர். ஜும்மா பயான் தலைமை அனுப்பிய சர்குலர் நகல், அண்டை வீடு புத்தகம் மற்றும் சமரசம் மடக்கோலை ஆகியவை இரண்டு இமாம்களுக்கும் வழங்கப்பட்டது. ஜும்மா உரை நிகழ்த்துவோம் என்று அவர்கள் வாக்குறுதி அளித்தனர். அல்ஹம்துலில்லாஹ்.



முக்கியஸ்தர்களையும் சந்தித்து, அண்டை வீடு புத்தகம் மற்றும் சமரசம் மடக்கோலை வழங்கி பரப்புரையின் பணிகளைப் பற்றி எடுத்துக்கூறினோம்.

## கடையநல்லூரில் முக்கியஸ்தர்கள், ஆலிம்கள் மற்றும் ஆட்டோ ஓட்டுநர்களுடன் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை.




27/11/2025 (06/06/1447 ஹிஜ்ரி) வியாழக்கிழமை கடையநல்லூர் முக்கியஸ்தர்கள் மற்றும் ஆலிம்களை சந்தித்து, அண்டை வீட்டாரின் உரிமைகள் பரப்புரை தொடர்பான ஜும்மா உரைகள், மடக்கோலைகள், அழகிய அண்டை வீடு என்ற டாக்டர் கே.வி.எஸ். அவர்களின் புத்தகம் மற்றும் சமரசம் வழங்கப்பட்டது. கடையநல்லூர் ஆட்டோ ஸ்டாண்டுகளில் அண்டை வீட்டார் பரப்புரை ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டு, டிரைவர்களுக்கும் மடக்கோலை, சமரசம் மற்றும் புத்தகங்கள் வழங்கப்பட்டது.



## காவல் ஆய்வாளரை சந்தித்து அண்டை வீட்டார் உரிமைகள் பற்றிய பரப்புரை.

இன்றைய பரப்புரையாக காவல் நிலையம் சென்று காவல் ஆய்வாளரை சந்தித்து ஃபோல்டர்கள் மற்றும் அழகிய அண்டை வீடு புத்தகம் வழங்கி, அண்டை வீட்டாரின் உரிமைகள் பற்றி எடுத்துரைத்தோம்.

## புதூர் மற்றும் நெல்பேட்டை வட்டங்களில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை மற்றும் பொது பயான்.



இன்று (27.11.25) எங்களது தெருவில் வசிக்கும் முஸ்லிம் சகோதரிகளுக்கும் முஸ்லிம் அல்லாத சகோதர சகோதரிகளுக்கும் அண்டை வீட்டார் உரிமைகள் பற்றிய பரப்புரை எடுத்துச் சொல்லி மடக்கோலையும் இனிப்பும் வழங்கப்பட்டது. புதூர் வட்டம் சார்பாக ஊழியர் ஹலிமா இதனை மேற்கொண்டார்.

அதேபோல், நெல் பேட்டை வட்டம் சார்பாக அபிமானி ஜன்னத் எங்களது தெருவில் வசிக்கும் முஸ்லிம் அல்லாத சகோதரிகளுக்கும், ஊழியர் சபீனா அண்டை வீட்டாருக்கும் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை எடுத்துச் சொல்லி மடக்கோலை வழங்கினர்.



அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையை முன்னிட்டு நெல் பேட்டை ஊழியர் வட்டம் சார்பாக பொது பயான் நடைபெற்றது. சகோ. பாத்திமா தாஹிரா கிராத் ஓதி நிகழ்ச்சியை ஆரம்பித்தார். மதுரை மகளிரணி பொறுப்பாளர் சகோ. நஜ்மா ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் பற்றிய சிறு உரை நிகழ்த்தினார். அண்டை வீட்டார் உரிமைகள் குறித்து மாநில மகளிரணி செயலாளர் சகோ. பாத்திமா ஜலால் சிறப்புரை ஆற்றினார். இதில் 60 பெண்கள் கலந்து கொண்டனர்.

# உடுமலை கிளை மகளிரணி சார்பில் ஆசிரியைகள் சந்திப்பு மற்றும் அண்டை வீட்டார் உரிமைகள் விழிப்புணர்வு.




27.11.2025 அன்று அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை இயக்கத்தின் ஒரு பகுதியாக உடுமலை கிளை மகளிரணி சார்பில் நான்கு அரசுப் பள்ளி ஆசிரியைகள் சந்திக்கப்பட்டனர். தலைமை ஆசிரியர் சாந்தி மற்றும் கனிமொழி, ஒன்பது ஆசிரியைகள், சத்துணவு ஆய்வாளர் தேவதி, உதவி ஆய்வாளர் சொர்ணம் ஆகியோரைச் சந்தித்து, அண்டை வீட்டின் உரிமைகள் மற்றும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் நம்முடன் பயணிக்கும் அனைவரிடமும் அண்டை வீட்டின் உரிமைகளைப் பேண வேண்டிய அவசியம் குறித்து கலந்துரையாடப்பட்டது. ஆசிரியைகள், “இந்த காலத்தில் யாரும் இப்படி வாழ்வதில்லை; நீங்கள் போன்றவர்கள் விழிப்புணர்வு



ஏற்படுத்தினால் மாற்றம் உருவாகட்டும்” என்று தங்களுடைய கருத்தை வெளிப்படுத்தினர். பால்வாடி குழந்தைகளின் எட்டு தாய்மார்களுக்கும் நோட்டீஸ் வழங்கி, அண்டை வீட்டின் உரிமைகள் மற்றும் இப்பரப்புரையின் நோக்கம் குறித்து உரையாடப்பட்டது. பள்ளி மாணவன்–மாணவிகளுக்கும் பக்கத்து நண்பர்களுடன் நன்றாக நடந்து கொள்ள வேண்டும் என்ற அறிவுரை கூறப்பட்டது. சமரசம், உதயதாரர் மற்றும் அழகிய அண்டை வீடு ஆகிய நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

# மணப்பாறை ஜும்மா பெரிய பள்ளிவாசலில் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்த ஜும்மா உரை.



அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையை முன்னிட்டு 28.11.2025 அன்று JIH மணப்பாறை கிளை சார்பாக மணப்பாறை ஜும்மா பெரிய பள்ளிவாசலில் அண்டை வீட்டார் உரிமைகள் தொடர்பான ஜும்மா உரை நிகழ்த்தப்பட்டது. பரப்புரை செயல் திட்டத்தின் ஒரு பகுதியாக வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த உரையில் JIH மண்டல பொறுப்பாளர் ஜனாப் சையத் முஹமத் அவர்கள் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்து நபிகள் நாயகம் காட்டிய வழிமுறைகளையும், இஸ்லாத்தின் அழகிய நெறிமுறைகளையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தார். பள்ளிவாசலில் குழுமியிருந்த ஜமாத்தார்கள் ஜும்மா உரையை ஆர்வத்துடன் கேட்டனர்.

# மணப்பாறை பெண்கள் வட்டம் மற்றும் மதரஸாக்களில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை நிகழ்வுகள்.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மணப்பாறை பெண்கள் வட்டத்தில், அண்டை வீட்டார் உரிமைகள் என்ற அகில இந்திய பரப்புரையை முன்னிட்டு சகோதரி நஜீமா அவர்களின் இல்லத்தில் 25/11/2025



அன்று அண்டை வீட்டார் தேநீர் உபசரிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சகோதரி ஃபர்சானா மற்றும் சகோதரி நஜீமா அவர்கள் சிறப்பு உரையாற்றினர். மொத்தம் 16 நபர்கள் கலந்து கொண்டனர். தேநீர் மற்றும் இனிப்பு வழங்கப்பட்டது. கலந்து கொண்டவர்கள் மாதந்தோறும் நிகழ்ச்சி நடக்க வேண்டும் என்பதை கருத்தாக வெளிப்படுத்தினர். வந்திருந்த அனைவருக்கும் மடக்கோலை, சமரசம் மற்றும் அண்டை வீடு பற்றிய புத்தகம் வழங்கப்பட்டது.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மணப்பாறை வட்டத்தின் சார்பாக மதரஸாக்களில் சந்திப்புகள் நடைபெற்று வருகின்றன. மஸ்தான் நகரில் அமைந்துள்ள YMJ மதரஸாவில் 25/11/2025 அன்று மார்க்கக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கும் பெற்றோருக்கும் அண்டை வீட்டாரின் உரிமைகள் மற்றும் அவர்களிடம் நடந்து கொள்ளும் முறைகள் குறித்து வகுப்புகள் நடைபெற்றன. இதில் 50-க்கும் மேற்பட்ட மாணவிகள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டனர். சகோதரி நஜீமா மற்றும் GIO மாணவிகள் தலைவி ஆஷிகா அவர்கள் உரையாற்றினர்.

காந்தி நகரில் அமைந்துள்ள மதரஸாவில் 26/11/2025 அன்று 37 மாணவ–மாணவிகள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்ட வகுப்பில் அண்டை வீட்டாரின் உரிமைகள், அவர்களிடம் பழகும் விதம் மற்றும் கண்ணியம் செலுத்துவது குறித்து கற்றுத் தரப்பட்டது. இதில் சகோதரி ஜெனிஃபர் நிஷா மற்றும் CIO பொறுப்பாளர் நிசானா அவர்கள் உரையாற்றினர். சந்திப்பு இனிமையாக அமைந்தது.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மணப்பாறை வட்டத்தின் சார்பில் முக்கியஸ்தர்கள் சந்திப்பும் நடைபெற்று வருகிறது. அதன் ஒரு பகுதியாக 26/11/2025 அன்று அரசு மேல்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியரைச் சந்தித்து பரப்புரையை அறிமுகப்படுத்தி, டாக்டர் கே.வி.எஸ். ஹபீப் முஹம்மத் அவர்களின் அழகிய அண்டை வீடு புத்தகமும் மடக்கோலையும் வழங்கப்பட்டது. பின்னர் மாணவ–மாணவிகளுக்கு அண்டை வீட்டாரின் முக்கியத்துவம் மற்றும் பழகும் விதம் குறித்து சகோதரி ஃபர்சானா அவர்கள் உரையாற்றினர். பரப்புரையின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. பள்ளி பணிகளின் நடுவிலும் நேரம் ஒதுக்கி விவரங்களை பொறுமையுடன் கேட்டு அறிந்த தலைமை ஆசிரியர் மடக்கோலையும் புத்தகத்தையும் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டு பாராட்டுகளையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

## தளவாப்பாளையம் நேஷனல் மாண்டிசோரி பள்ளியில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை நிகழ்ச்சி.



கரூர் கிளை சார்பில் நேற்று (27-11-2025) காலை கரூர் மாவட்டம் தளவாப்பாளையம் நேஷனல் மாண்டிசோரி பள்ளியில் அண்டை வீட்டார் பரப்புரை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கிளைத்தலைவர் மாணவர்கள் மத்தியில் உரையாற்றினார். பள்ளியின் சார்பில் செல்ஃபி குடில் அமைக்கப்பட்டு மாணவர்களுடன் படம் எடுக்கப்பட்டது. மேலும் மாணவர்கள் அனைவருக்கும் ஃபோல்டர் வழங்கப்பட்டது. சிறப்பாக பேசிய ஐந்து மாணவர்களுக்கு நல்ல அண்டை வீடு புத்தகம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் ஃபோல்டர் வழங்கப்பட்டு, 03-12-2025 அன்று நடைபெறும் அரங்கக் கூட்டத்திற்கான அழைப்பிதழ் கொடுக்கப்பட்டது. பள்ளியின் நிர்வாகிகள் மற்றும் ஆசிரியர்கள் நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை மிகச் சிறப்பாக செய்திருந்தனர். கரூர் கிளை பெண்கள் வட்டம் சார்பில் நிகழ்வு நடைபெற்றது.

## அரவாக்குறிச்சி நேஷனல் மாண்டிசோரி பள்ளியில் பெற்றோருக்கான அண்டை வீட்டார் பரப்புரை நிகழ்ச்சி.



அண்டை வீட்டார் பரப்புரையின் ஒரு நிகழ்வாக நேற்று (27-11-2025) மாலை அரவாக்குறிச்சி நேஷனல் மாண்டிசோரி பள்ளியில் பெற்றோர்களுக்கான பரப்புரை நிகழ்ச்சி திட்டமிட்டு நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் 25-ம் மேற்பட்ட பெற்றோர்கள் கலந்து கொண்டனர். சகோதரி தாரா மற்றும் ஜைனப் அவர்கள் உரையாற்றி, பெற்றோரின் சந்தேகங்களுக்கு பதிலளித்தனர். கருத்துப்பகிர்வு நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை பள்ளி நிர்வாகிகள் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். கரூர் கிளை பெண்கள் வட்டம் சார்பாக இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

## விருதுநகர் Sri Vidya கல்லூரியில் அண்டை வீட்டார் உரிமைகள் சிறப்புக்கூட்டம்.



JIH விருதுநகர் கிளை சார்பில் அண்டை வீட்டார் பரப்புரையின் ஒரு பகுதியாக Virudhunagar Sri Vidya Group of Institutions B.Ed கல்வியியல் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சி மாணவிகளுக்கான அண்டை வீட்டார் பரப்புரை சிறப்புக்கூட்டம் நடத்தப்பட்டது. நிகழ்வின் முத்தாய்ப்பான கருத்துகளை விருதுநகர் கிளை ருக்குன் மற்றும் CIO பொறுப்பாளர் சவுதா கனி அவர்கள் பரப்புரையின் அவசியம் குறித்து உரையாற்றி விளக்கினார்.



கல்லூரி பேராசிரியர்களுக்கு அழகிய அண்டை வீடு புத்தகமும் சமரசம் நூலும் வழங்கப்பட்டன. ஆசிரியர் பயிற்சி மாணவிகளுக்கு மடக்கோலைகள் வழங்கப்பட்டன. கல்லூரி நிர்வாகத்தினர் சவுதா கனி அவர்களை பொன்னாடை போர்த்தி கவுரவித்தனர். நிகழ்ச்சியின் இறுதியில் அண்டை வீட்டார் உரிமைகளை பேணும் வகையில் உறுதிமொழி எடுக்கப்பட்டது. நிகழ்வில் விருதுநகர் கிளை தலைவர், பரப்புரையின் கன்வீனர், நாஜிமா, டாக்டர் அப்துல்லாஹ், சகோ அப்துல் சமத் மற்றும் சகோதரி செய்யதலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வேலூரில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையின் ஒரு பகுதியாக நூல்கள் வழங்கல்.





ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் பேரியக்கம் நடத்தி வரும் நாடு தழுவிய “அழகிய அண்டை வீட்டார்கள், அழகிய சமூகம்” என்ற பரப்புரையின் ஒரு அம்சமாக, வேலூர் மாநகரில் கடந்த 26 ஆம் தேதி சகோதர சமுதாய நண்பர்களை சந்தித்து சமரசம் இதழும் அழகிய அண்டை வீட்டார்கள் நூலும் வழங்கப்பட்டது. அதேபோல், 25 ஆம் தேதி மக்களை சந்தித்து சமரசம் இதழும் அழகிய அண்டை வீட்டார்கள் நூலும் வழங்கப்பட்டது.

## வேலூர் ICV நர்சரி பள்ளியில் மாணவர்களுக்கு அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை.



வேலூர் யூனிட் சார்பாக அண்டை வீட்டாரின் உரிமைகள் பற்றிய பரப்புரையாக 27/11/25 வியாழக்கிழமை ICV Nursery School இல் 3 ஆம் முதல் 5 ஆம் வகுப்பு வரை மாணவ-மாணவிகளுக்கு Campaign Convenor உறுப்பினரான ஜுவேரியா SBA அவர்கள் பரப்புரையின் நோக்கத்தை எடுத்துரைத்து, யார் யாரெல்லாம் அண்டை வீட்டார் என்பதை மிகத் தெளிவாக விளக்கினார். நாஜிமா மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் பெண் ஆசிரியர்களை சந்தித்து அழகிய அண்டை வீடு புத்தகமும் சமரசம் இதழும் வழங்கினர்.

## வேலூர் IQRA மெட்ரிகுலேஷன் பள்ளியில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை.



வேலூர் யூனிட் சார்பாக அண்டை வீட்டாரின் உரிமைகள் பற்றிய பரப்புரையாக 27/11/25 வியாழக்கிழமை IQRA Matriculation School இல் 5 ஆம் முதல் 10 ஆம் வகுப்பு வரை மாணவ-மாணவிகளுக்கு

பரப்புரையின் நோக்கத்தை அமீரே மகாமி தாஹா அவர்கள் எடுத்துரைத்தார். பின்னர் Campaign Convenor உறுப்பினரான மௌலவி முஸ்தாக் உமரி அவர்கள் பரப்புரையின் அவசியத்தை விளக்கினார். தொடர்ந்து நாஜிமா நஜீம் அக்தர் அவர்கள் யார் யாரெல்லாம் அண்டை வீட்டார் என்பதை பிள்ளைகளுக்கு தெளிவாக எடுத்துரைத்தார். மடக்கோலைகள் விநியோகிக்கப்பட்டன. பெண் உறுப்பினர்கள் அனைத்து ஆசிரியர்களையும் சந்தித்து அழகிய அண்டை வீடு புத்தகமும் சமரசம் இதழும் வழங்கினர்.

## எண்ணூர் கிளையில் முன்மாதிரி அண்டை வீட்டார் பரப்புரை மற்றும் குடும்ப சங்கம நிகழ்ச்சி.




எண்ணூர் கிளை சார்பாக முன்மாதிரி அண்டை வீட்டார் பரப்புரையை முன்னிட்டு நூஹ் மஹ்ளரி அவர்கள் பயான் நிகழ்த்தினார். மேலும் CIO அமைப்பு எதற்காக என்பது குறித்த ஒரு சிறு விளக்கமும் வழங்கப்பட்டது. முன்மாதிரி அண்டை வீட்டார் என்ற தலைப்பில் CIO சிறுமிகள் ஒரு நாடகம் நடத்தி பாடலும் பாடினர். தொடர்ந்து குடும்பங்களின் சங்கமம் என்ற தலைப்பில் இயக்க உறுப்பினர்கள், ஊழியர்களின் பரஸ்பர அறிமுகம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சென்னை மெட்ரோ மற்றும் எண்ணூர் கிளையின் உறுப்பினர்கள், ஊழியர்கள், முத்தபிக்குகள் என மொத்தம் 200 பேர் கலந்து கொண்டனர் அதன்பின் கடற்கரைக்கு சென்று முஸ்லிம் அல்லாத ஆண்களிடம் அண்டை வீட்டார் பரப்புரை குறித்து எடுத்துரைக்கப்பட்டது.




## நாகர்கோவில் கிளை சார்பில் அமைச்சர் மனோ தங்கராஜ் அவர்களுடன் அண்டை வீட்டார் பரப்புரை சந்திப்பு.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நாகர்கோவில் கிளை சார்பில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையின் ஒரு பகுதியாக தமிழ்நாடு அரசின் பால்வளத்துறை அமைச்சர் மாண்புமிகு மனோ தங்கராஜ் அவர்களை நாகர்கோவில் கிளை பொறுப்பாளர் ஹபீப் மற்றும் பரப்புரை கன்வீனர் அமீர் அப்பாஸ் ஆகியோர் சந்தித்து சமரசம் சிறப்பிதழ், டாக்டர் கே.வி.எஸ். அவர்களின் புத்தகம் மற்றும் பரப்புரை மடக்கோலை வழங்கினர்.



## நாகர்கோவில் கிளை சார்பில் இசைமுரசு FM இயக்குனருடன் அண்டை வீட்டார் பரப்புரை சந்திப்பு.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நாகர்கோவில் கிளை சார்பில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையின் ஒரு பகுதியாக இசைமுரசு FM இணைய வானொலி இயக்குனர் பேராசிரியர் முஹம்மது அஸ்கர் அவர்களை நாகர்கோவில் கிளை பொறுப்பாளர் ஹபீப் மற்றும் பரப்புரை கன்வீனர் அமீர் அப்பாஸ் ஆகியோர் சந்தித்து சமரசம் சிறப்பிதழ், டாக்டர் கே.வி.எஸ். அவர்களின் புத்தகம் மற்றும் பரப்புரை மடக்கோலை வழங்கினர்.

## சேலம் கரீம் காம்பவுண்டில் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்து முஹல்லா கூட்டம்.



அண்டை வீட்டார் உரிமைகள் நாடு தழுவிய பரப்புரை “முன்மாதிரி அண்டை வீட்டார், முன்மாதிரி சமூகம்” எனும் கருத்தின் ஒரு பகுதியாக ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சேலம் பச்சப்பட்டி பெண்கள் வட்டம் சார்பாக 30/11/2025 ஞாயிற்றுக்கிழமை ஜனாபா முனீரா பேகம் அவர்கள் தலைமையில் சேலம் கரீம் காம்பவுண்டில் முஹல்லா கூட்டம் நடத்தப்பட்டது. இதில் அண்டை வீட்டாரின் உரிமைகள் குறித்து சிறப்புரையாற்றப்பட்டது. 25 பெண்களும் ஜமாஅத் ஊழியர்களும் கலந்து கொண்டனர்.



## சங்கராப்புறத்தில் முஸ்லிம் அல்லாத சகோதரிகளுடன் அண்டை வீட்டார் பரப்புரை நிறைவு நிகழ்ச்சி.

அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையின் நிறைவு நிகழ்ச்சியாக இன்று (30.11.25) கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராப்புறத்தில் முஸ்லிம் அல்லாத சகோதரிகளுக்கான சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. ஒருவருக்கொருவர் பரஸ்பர அறிமுகங்கள் செய்யப்பட்டு, அண்டை வீட்டாருடன் நன்றாக நடந்து கொள்ள உறுதி எடுக்கப்பட்டது. அவர்களுக்கு தேநீர் விருந்து வழங்கப்பட்டு, வயது பாராமல் விளையாட்டு போட்டிகள், பொது அறிவு கேள்விகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. மிக்க மகிழ்ச்சியுடன்



அனைவரும் இதில் கலந்து கொண்டனர். சுமார் 30 பெண்கள் பங்கேற்றனர். சிறப்பு விருந்தினராக வார்டு கவுன்சிலர் திருமதி பரிதா அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை நிகழ்த்தினர்.

## கடலூர் ND மகளிரணி சார்பில் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்த சிறப்பு கூட்டம்.



அண்டை வீட்டார் உரிமைகள் நாடு தழுவிய பரப்புரை "முன்மாதிரி அண்டை வீட்டார், முன்மாதிரி சமூகம்" என்ற கருத்தின் ஒரு பகுதியாக ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கடலூர் ND மகளிர் அணி சார்பில் 29.11.25 சனிக்கிழமை சிறப்பு கூட்டம் நடைபெற்றது. நாசிமா ஜூலைகா அவர்கள் தலைமையில் CIO பொறுப்பாளர் ஷபானா ஜாஸ்மின் அவர்கள் வரவேற்புரை வழங்கி நிகழ்ச்சியைத் தொடங்கினார்.

சகோதரிகள் நஜுபுநிஷா, ஜீனத், அப்ரின், நூர்ஜகான் மற்றும் ஜெனீரா ஆகியோர் அண்டை வீட்டார் உரிமைகள் பற்றிய ஒரு சிறு நாடகம் நடத்தி அதன் மூலம் கருத்தை மக்களிடம் எளிமையாக விளக்கினர்.

சிறப்புரையாக மண்டல அமைப்பாளர் M. அப்துல் ஹமீத் அவர்கள் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்து சிறப்பாக எடுத்துக்கூறினார். இறுதியில் கடலூர் CIO பிள்ளைகளுக்கான ஓவியப்போட்டி, ஹதீஸ் மனனம் மற்றும் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இதில் 60 பேர் கலந்து கொண்டனர்.




## கம்பம் புனித ஆரோக்கிய அன்னை ஆலய ஒருங்கிணைப்பாளருக்கு அண்டை வீட்டார் பரப்புரை நிகழ்ச்சி அழைப்பிதழ் வழங்கல்.



கம்பம் புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு. ஆரோக்கியராஜ் அவர்களை சந்தித்து பரப்புரையின் நோக்கத்தை விளக்கி, ஏழாம் தேதி கம்பம் கிளையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சிக்கு வருகை தரவும் வாழ்த்துரை வழங்கவும் வேண்டுகோள் விடுத்தோம். நமது அழைப்பை அவர்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்.

## திருவள்ளூர் மாவட்ட மஹல்லா மாநாட்டில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை நிறைவு நிகழ்வு.



அண்டை வீட்டாரின் உரிமைகள் பரப்புரை “முன்மாதிரி அண்டை வீட்டார் – முன்மாதிரி சமூகம்” என்ற நாடு தழுவிய பரப்புரையின் இறுதி நிகழ்வாக, திருவள்ளூர் மாவட்டத்திற்கான மஹல்லா மாநாடு மஸ்ஜித் தய்யிபாவில் (கோனிமேடு கிளை) நேற்று (30-11-2025) காலை 10 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது. இம்மாநாட்டிற்கு திருவள்ளூர் மண்டல பொறுப்பாளர் ஜனாப் M.S. சர்புதீன் அவர்கள் தலைமை தாங்கினார்.



சிறப்பு பேச்சாளராக ஜனாப் K. ஜலாலுதீன் (அமைப்பு செயலாளர், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், தமிழ்நாடு) அவர்கள் “ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் ஒரு அறிமுகம்” என்ற தலைப்பிலும், மௌலவி நூஹ் மஹ்ழரி அவர்கள் “இஸ்லாம் கூறும் அண்டை வீட்டாரின் உரிமைகள்” என்ற தலைப்பிலும் உரையாற்றினர். சிறப்பு அழைப்பாளராக திமுக சிறுபான்மை பிரிவு அமைப்புச் செயலாளர் ஜனாப் அபுல் ஹசன் அவர்கள் கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள பூந்தமல்லி, அண்ணனூர், கோனிமேடு கிளைகள் மற்றும் பட்டாபிராம் வட்டம் இணைந்து மொத்தம் 170 நபர்கள் கலந்து கொண்டனர்.

## இனாம் குளத்தூர் வட்டத்தில் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்து தொடர் வகுப்புகள், சந்திப்புகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் இனாம் குளத்தூர் வட்டம் சார்பில் அண்டை வீட்டார் பரப்புரையை முன்னிட்டு பல இடங்களில் நேரடி வகுப்புகள், சந்திப்புகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. 07.11.2025 அன்று நடைபெற்ற வகுப்பில் முப்தியா பேகம் கிராஅத் ஓதிச் சிறப்பித்தார்; நூர்ஜஹான் அவர்கள் அண்டை வீட்டாருக்கு வழங்க வேண்டிய உரிமைகள் குறித்து உரையாற்றினார். இதில் 20 பெண்கள் கலந்து கொண்டனர். 13.11.2025 அன்று நேரு நகர் பகுதியில் நடைபெற்ற வகுப்பில் சிஸ்தியா பேகம் கிராஅத் ஓதினார்; நூர்ஜஹான் அவர்கள் உரையாற்றினர். இதில் 16 பெண்கள் பங்கேற்றனர்.



08.11.2025 அன்று ஷா இமாம் நகர் பகுதியில் நடைபெற்ற நேரடி வகுப்பில் செகனாஷ் பானு கிராஅத் ஓதி, பெனாசிர் பானு உரையாற்றினர். இதில் 26 பெண்கள் கலந்து கொண்டனர். மாற்று மத சகோதரிகள்

சந்திப்பு நடத்தப்பட்டு, தெருக்களில் மடக்கோலைகள் மற்றும் சமரசம் வழங்கி பரப்புரை செய்யப்பட்டது. இதில் ஜமாஅத் உறுப்பினர்கள் 4 பேர் பணியாற்றினர்.



22.11.2025 அன்று மதரஸா சந்திப்பு நடைபெற்றது. மடக்கோலை மற்றும் புத்தகம் வழங்கப்பட்டன. இதில் ஜமாஅத் உறுப்பினர்கள் 5 பேர் மற்றும் 14 பெண் குழந்தைகள் பங்கேற்றனர். 25.11.2025 அன்று இனாம் குளத்தூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி மற்றும் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களைச் சந்தித்து புத்தகம், சமரசம் மற்றும் மடக்கோலை வழங்கப்பட்டது. இதில் 5 உறுப்பினர்கள் மற்றும் 10 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

26.11.2025 அன்று இனாம் குளத்தூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி மாணவிகளுக்கு அண்டை வீட்டார் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதில் 5 உறுப்பினர்கள் பணியாற்றி 150 மாணவிகள் கலந்து கொண்டனர்.

21.11.2025 அன்று நடைபெற்ற நேரடி பொது நிகழ்ச்சியில் திருச்சி மண்டல பொறுப்பாளர் சையத் ஜீ அவர்கள் உரையாற்றினர். இதில் 30 பெண்கள் கலந்து கொண்டனர்.

## துவரங்குறிச்சி கிறிஸ்தவத் தெருவில் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்து மகளிர் அணி விழிப்புணர்வு நிகழ்ச்சி.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் துவரங்குறிச்சி கிளை மகளிர் அணி சார்பில், அண்டை வீட்டார் உரிமைகள் அகில இந்திய பரப்புரையை முன்னிட்டு கிறிஸ்தவத் தெருவில் ஜன்னத் அவர்கள் இல்லத்தில் நிகழ்ச்சி நடைபெற்றது. அண்டை வீட்டாரின் முக்கியத்துவம், உரிமைகள் மற்றும் நம்முடைய கடமைகள் என்ற தலைப்பில் சகோதரி ஜன்னத் அவர்கள் உரையாற்றினார்.

நிகழ்ச்சியை துவரங்குறிச்சி கிளை ஊழியரும் வட்டத்தின் பொறுப்பாளருமான சகோதரி வாஜிதா அவர்கள் வழிநடத்தியார். மொத்தம் 10 நபர்கள் கலந்து கொண்டனர். கலந்து கொண்டவர்களுக்கு இனிப்பும் தேநீரும் வழங்கப்பட்டது.

# சேலம் பச்சப்பட்டி பெண்கள் வட்டம் சார்பில் கல்வி நிறுவனங்கள் மற்றும் மகளிர் காவல் நிலையத்தில் அண்டை வீட்டார் பரப்புரை.



அண்டை வீட்டார் உரிமைகள் நாடு தழுவிய பரப்புரை “முன்மாதிரி அண்டை வீட்டார், முன்மாதிரி சமூகம்” என்ற கருத்தின் ஒரு பகுதியாக ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சேலம் பச்சப்பட்டி பெண்கள் வட்டம் சார்பில் இன்று (2/12/2025) செவ்வாய்க்கிழமை ஜனாபா முனீரா பேகம் அவர்கள் தலைமையில் சேலம் கோட்டை பகுதியில் உள்ள கிரஸ்சன்ட் ஸ்கூல், ஜலால் புறாவில் உள்ள குட்வில் ஸ்கூல் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களைச் சந்தித்து அழகிய அண்டை வீடு புத்தகம், சமரசம் மற்றும் பரப்புரை மடக்கோலை வழங்கினோம். மேலும் டவுன் மகளிர் காவல் நிலையத்திற்குச் சென்று நிர்வாகிகளைச் சந்தித்து பரப்புரையின் நோக்கத்தை சிறிது நேரம் உரையாடி, தொடர்புடைய புத்தகங்களையும் மடக்கோலையும் வழங்கினோம்.



# வேலூர் சத்துவாச்சாரி பகுதியில் பெண்களுக்கான அண்டை வீட்டு உரிமைகள் சிறப்பு நிகழ்ச்சி.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நடத்தி வரும் “முன்மாதிரி அண்டை வீட்டார் முன்மாதிரி சமூகம்” எனும் நாடு தழுவிய பரப்புரையின் ஒரு அங்கமாக நேற்று வேலூர் சத்துவாச்சாரி பகுதியில் உள்ள ஜமாஅத் உறுப்பினர் ஜனாப் உமர் சாஹிப் அவர்களின் இல்லத்தில் பெண்களுக்கான சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த நேரத்தில் உமர் சாஹிப் அவர்களின் துணைவியரும் ஜமாஅத் உறுப்பினருமான சாஜிதா தபஸ்ஸும் சாஹிபா அவர்கள் அண்டை வீட்டாரின் உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து விளக்கினார். இதில் 95 பெண்கள் கலந்து கொண்டு ஆர்வத்துடன் கேட்டறிந்தனர். அண்டை வீட்டார் பற்றிய இஸ்லாத்தின் ஆழமான கருத்துகள் மற்றும் வழிகாட்டுதல்கள் தங்களை மிக்கமாக கவர்ந்தன என அவர்கள் கருத்து தெரிவித்தனர்.



நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் அழகிய அண்டை வீடு புத்தகம், சமரசம் இதழ், துண்டு பிரசுரங்கள் மற்றும் இஸ்லாமிய நூல்கள் வழங்கப்பட்டன. இறுதியில் ஏற்பாடு செய்யப்பட்ட விருந்தில் கலந்து கொண்டு மனநிறைவுடன் சென்றனர்.

## தஞ்சாவூர் வல்லத்தில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை நிகழ்ச்சி.



அண்டை வீட்டார் உரிமைகள் "முன்மாதிரி அண்டை வீட்டார் – முன்மாதிரி சமூகம்" பரப்புரையின் ஒரு பகுதியாக, நவம்பர் 21 முதல் 30 வரை தஞ்சாவூர் வட்டம் சார்பாக வல்லம் ஊரில் பரப்புரை நடத்தப்பட்டது. கிராஅத் சகோதரி பாத்திமா அவர்கள் ஓதினார். சகோதரி பைரோஸ் அவர்கள் நோட்டீஸ் வாசித்தார். முன்னுரையை தில்சாத் பேகம் வழங்கினார். சிறப்புரையாக ஆலிமா தன்சிலா பானு உரையாற்றினார். நிறைவுரையை பாத்திமா அவர்கள் நிகழ்த்தினார். அல்ஹம்துலில்லாஹ், 30 நபர்கள் கலந்து கொண்டனர்.



## வேலூர் மாவட்ட காஜிகளை சந்தித்து அண்டை வீட்டார் பரப்புரை நூல்கள் வழங்கல்.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் பேரியக்கம் நடத்தி வரும் "முன்மாதிரி அண்டை வீட்டார், முன்மாதிரி சமூகம்" என்னும் நாடு தழுவிய பரப்புரையின் ஒரு அங்கமாக நேற்று மாலை வேலூர் மாவட்ட காஜி மௌலானா சயீத் அஹ்மத் பாகவி அவர்களையும் மௌலானா அப்பாஸ் சிராஜி ஹஜ்ரத் அவர்களையும் சந்தித்து பரப்புரையின் நோக்கமும் அவசியமும் விளக்கப்பட்டது. அவர்களுக்கு சமரசம் இதழ், அழகிய அண்டை வீடு நூல் மற்றும் அண்டை வீட்டார் உரிமைகள்–கடமைகள் பற்றிய துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன. இச் சந்திப்பில் பரப்புரை கன்வீனர் மௌலவி முஷ்தாக் உமரி மற்றும் ஜமாஅத் ஊழியர் ஜனாப் சபியுல்லா சாஹிப் கலந்து கொண்டனர்.

## கரூரில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையின் நிறைவு அரங்கக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

(03-12-2025) மாலை 6.45 மணி முதல் 8.45 மணிவரை கரூர் கிளை சார்பாக "அண்டை வீட்டார் உரிமைகள்" பரப்புரையின் இறுதி நிகழ்ச்சியாக மாபெரும் அரங்கக் கூட்டம் கரூர் CSI சர்ச் கார்னர் துதி மண்டபத்தில் நடைபெற்றது. இந்த அரங்கக் கூட்டத்தில் பன்னூலாசிரியர் மௌலவி நூஹ் மஹ்ழரி அவர்கள் கலந்து கொண்டு பரப்புரையின் மையக்கருத்தில் சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சி சகோதரி தென்சினா அவர்கள் கிராஅத் ஓதுவதன் மூலம் தொடங்கியது. கிளைத்தலைவர் ஹாருன் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். கரூர் நகரத்தைச் சேர்ந்த 11 பள்ளிவாசல்களின்



முத்தவல்லிகள் மற்றும் செயலாளர்கள் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக அரசு கல்லூரி முனைவர் சரவணன் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். மேலும் மண்டல அமைப்பாளர் முஹம்மத் அப்பாஸ் அவர்கள் துவக்க உரையாற்றினார்.



மூன்று பள்ளிவாசல் நிர்வாகிகள் வாழ்த்துரையாற்றினர்.

நிகழ்ச்சியின் இறுதியில் பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கும் முனைவர் சரவணன் அவர்களுக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. சகோதரி தாரா அவர்கள் நன்றியுரை வழங்கினார். நிகழ்ச்சியை உறுப்பினர் ஜஃபருல்லாஹ் சிறப்பாக வழிநடத்தினார். இந்த அரங்கக் கூட்டத்திற்கு 250-க்கும் மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் திரளாக வந்து கலந்து கொண்டனர். இறுதியில் அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது. கரூர் JIH கிளையின் குடும்ப அங்கத்தினர்கள் நிகழ்ச்சியை மிக அழகாகவும் சிறப்பாகவும் ஏற்பாடு செய்திருந்தனர்.

## விருதுநகர் ஹாஜி பி. செய்யது முஹம்மது மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை.



4.12.25 வியாழக்கிழமை அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையின் தொடர்ச்சியாக இன்று விருதுநகர் ஹாஜி பி. செய்யது முஹம்மது மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கான பரப்புரை நடைபெற்றது. இதில் சுமார் 200 மாணவர்கள் கலந்து கொண்டனர். பள்ளியின் தலைமை ஆசிரியர் துவக்க உரையாற்றினார். டாக்டர் அப்துல்லாஹ் அவர்கள் சிறப்புரையாற்றினார். மௌலவி அப்துர் ரஹீம் சுஹைப் ஸலாமி அவர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடினர்.



பள்ளியின் தாளாளர், அமீரே மகாமி, உறுப்பினர், IIC பொறுப்பாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர். பள்ளியின் தாளாளர், தலைமை ஆசிரியர், உதவி தலைமை ஆசிரியர் ஆகியோருக்கு சமரசம், உதயதாரகை மற்றும் அண்டை வீட்டார் உரிமைகள் பற்றிய புத்தகம் வழங்கப்பட்டது.

## சின்னமனூர் பெண்கள் வட்டத்தின் சார்பில் மருத்துவ நிபுணர்களுடன் அண்டை வீட்டார் உரிமைகள் தொடர்பான VIP சந்திப்புகள்.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சின்னமனூர் பெண்கள் வட்டம் சார்பாக அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையை முன்னிட்டு பொதுநல மருத்துவர் மற்றும் தேனி மருத்துவக் கல்லூரி பேராசிரியர் Dr. சொப்ன ஜோதி அவர்களைச் சந்தித்து அண்டை வீட்டார் உரிமைகள் குறித்து சகோதரி பாத்திமா எடுத்துரைத்தார். அழகிய அண்டை வீடு மற்றும் சமரசம் புத்தகங்கள் வழங்கப்பட்டன.



அதேபோல், பல் மருத்துவர் Dr. பிரசன்னா அவர்களையும் சந்தித்து அண்டை வீட்டார் உரிமைகள் பற்றி சகோதரி ரஹீமா எடுத்துரைத்தார்.

அவர்களுக்கும் அழகிய அண்டை வீடு மற்றும் சமரசம் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

## வையம்பட்டியில் செவிலியர்கள் மற்றும் கடை பணியாளர்களுடன் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் இளங்காகுறிச்சி வட்டத்தில் அண்டை வீட்டார் உரிமைகள் என்ற அகில இந்திய பரப்புரையை முன்னிட்டு, வையம்பட்டியில் ராஜா மருத்துவமனையில் பணியாற்றும் செவிலியர்களைச் சந்தித்து அண்டை வீட்டார் பற்றி எடுத்துரைக்கப்பட்டு மடக்கோலைகள் வழங்கப்பட்டன. மேலும் அருகிலுள்ள ஜவுளி கடை பணியாளரையும் சந்தித்து அண்டை வீட்டார் குறித்து விளக்கி மடக்கோலை வழங்கப்பட்டது.

## கம்பத்தில் அண்டை வீட்டார் உரிமைகள் குறித்த அரங்கக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.




கம்பம் ஜமாஅத் கிளையின் சார்பாக அண்டை வீட்டார் பரப்புரையை முன்னிட்டு அரங்கக் கூட்டம் நடைபெற்றது. இதில் திமுக இலக்கியப் பேச்சாளர் பாண்டித்துரை அவர்களும், ஐந்து பள்ளிவாசல் தலைவர்களும், புனித ஆரோக்கிய ஆலய ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியராஜ் அவர்களும் கலந்து கொண்டனர். மண்டல அமைப்பாளர் முஹம்மது அப்பாஸ் அவர்கள் துவக்கவுரை ஆற்றினர். மௌலவி நூஹ் மஹ்ழரி அவர்கள் சிறப்புரையாற்றினார். 200க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டனர்.




## திருமங்கலத்தில் JIH & GIO இணைந்து ‘அண்டை வீட்டார் உரிமைகள்’ பரப்புரை பரிசளிப்பு விழா.

திருமங்கலத்தில் JIH மற்றும் GIO இணைந்து “அண்டை வீட்டார் உரிமைகள்” நாடு தழுவிய பரப்புரையின் பரிசளிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. தொடக்க நிகழ்ச்சியாக சகோதரி ராகிலா பானு திருமறை வசனம் 4:36-ஐ ஓதி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். தொடர்ந்து திருமங்கலம் GIO உதவி செயலாளர் சகோதரி அஸ்மா நிஷ்மத் வரவேற்புரை வழங்கினார். “அண்டை வீட்டாரின் நலம் பேணுதல்” என்ற தலைப்பில் CIO மாணவிகள் அர்த்தமுள்ள நாடகத்தை சிறப்பாக வழங்கினர். பின்னர் நடைபெற்ற சிறப்புரைகளில், சகோதரி அனிஷா “அண்டை வீட்டாரிடம் செய்யக்கூடிய கடமை”, சகோதரி ஆமினத்துல் ஆதிலா “அண்டை வீட்டாரிடம் செய்யக்கூடாத



விஷயங்கள்”, சகோதரி நூருல் அஹானா “அண்டை வீட்டார் – அன்றும் இன்றும்” என்ற தலைப்புகளில் உரையாற்றினர். அனைத்து சிறப்பு விருந்தினர்களுக்கும் திருமங்கலம் GIO 5 வட்ட பொறுப்பாளர் நினைவுப்பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் ஜனாப் யாசர் சையது இப்ராஹிம் (Managing Director, Cenmark Agronomics Pvt. Ltd.), உயர்திரு பரசுராமன் (HM, M. ஆலங்குளம் அரசு பள்ளி), ஜனாபா டாக்டர் ஆயிஷா சனோஃபர் (Government Hospital), ஜனாப் அப்துல் கலாம் ஆசாத் சேட் (தொழிலதிபர், DMK நகர அமைப்பு தலைவர்), ஜனாப் அக்பர் ஹுசைன் (அண்டை வீட்டார் பரப்புரை கன்வென்னர்), ஜனாப் ஹக்கீம் அலி (JIH திருமங்கலம் கிளை தலைவர்), ஜனாப் ஃபயாஸ் அஹமது (JIH திருமங்கலம் துணை தலைவர்) உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். Guest Talks பகுதியில் அக்பர் ஹுசைன் மற்றும் யாசர் சையது இப்ராஹிம் உரையாற்றினர். மேலும், திருமங்கலம் GIO தலைவர் பஷீர் நிஷா பேகம் நிகழ்ச்சியின் நோக்கத்தையும் JIH, GIO அமைப்புகளின் பணிகளையும் விளக்கினார். Campaign-ஐ முன்னிட்டு CIO மாணவர்களுக்கான Drawing Competition மற்றும் GIO மாணவிகளுக்கான Essay Competition நடத்தப்பட்டு, பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு Shield மற்றும் Certificate வழங்கப்பட்டது. இறுதியாக, திருமங்கலம் GIO உதவி தலைவர் சகோதரி வாஹிபா நன்றியுரை வழங்கினார். மாற்று மத சகோதரர்கள் மற்றும் இஸ்லாமிய சகோதரர்கள் உட்பட சுமார் 600 பேர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

## அறந்தாங்கி வட்டத்தில் ‘அண்டை வீட்டாரின் உரிமைகள்’ பரப்புரையை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி.



“அண்டை வீட்டாரின் உரிமைகள் – முன்மாதிரி அண்டை வீட்டார், முன்மாதிரி சமூகம்” என்ற பரப்புரையை முன்னிட்டு, நேற்று (11/12/2025) அறந்தாங்கி வட்டத்தின் சார்பாக வழக்கறிஞர் முஹம்மது அனஸ் (SDPI புதுக்கோட்டை கிழக்கு மாவட்ட Legal Incharge) அவர்களின் இல்லத்தில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தர்ஸை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் அபிமானி ஆமினா அவர்கள் வழங்கினார். தொடர்ந்து “அண்டை வீட்டாரின் உரிமைகள்” என்ற தலைப்பில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் ஊழியர் சகோதரி நூருல் ஜெஸிமா சிறப்புரையாற்றினார். இதில் கலந்து கொண்டவர்கள், அண்டை வீட்டாருடன் நல்ல முறையில் நடந்து கொள்வது இஸ்லாத்தில் இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அறிந்து கொண்டதாகவும், இதற்கு முன் தெரியாத பல விஷயங்களை தெரிந்து கொண்டதாகவும் கருத்து தெரிவித்தனர். இதுபோன்ற மார்க்க விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை வாரம் ஒருமுறை இவர்களது இல்லத்தில் நடத்த வேண்டும் எனவும் மக்கள் விருப்பம் தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில் மொத்தம் 15 பேர் கலந்து கொண்டனர். துவாவுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது.

## உடுமலை அருகே கடத்தூர் கிராமத்தில் பெண்களுக்கான சிறப்பு பயான் நிகழ்வு.

13.12.2025 அன்று உடுமலை அருகே உள்ள குக்கிராமமான கடத்தூர் கிராமத்தில், அங்குள்ள பள்ளிவாசல் நிர்வாகிகள் JIH உடுமலை கிளைத் தலைவரிடம் பெண்களுக்கான பயான் வகுப்பு நடத்த அழைத்ததன் அடிப்படையில், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் உடுமலை

கிளை சார்பாக பெண்களுக்கான சிறப்பு நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வின் மையக் கருத்தாக "அண்டை வீட்டாரின் உரிமைகள்" என்ற தலைப்பில் உடுமலை கிளை நாஜிமி மெஹராஜ் சிறப்புரை ஆற்றினார். அண்டை வீட்டாரின் உரிமைகள் வாழ்வியல் நடைமுறைகளோடு இணைத்து உரை



அமைந்திருந்தது. இந்நிகழ்வை ஊழியர் சபீனா வழிநடத்தினார். இதில் கலந்து கொண்ட பெண்கள், எங்கள் குடும்பத்திற்குள் அமர்ந்து பேசுவது போல உணர்வுபூர்வமாக நிகழ்ச்சி அமைந்ததாக மகிழ்வுடன் தெரிவித்தனர். பள்ளிவாசல் நிர்வாகிகளும் மாதம் ஒருமுறை பயான் வகுப்பு நடத்த வருமாறு கேட்டுக்கொண்டனர். இந்நிகழ்ச்சியில் 65-க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்.



## தொழுதூர் வட்டத்தில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பில் சிறப்பு நிகழ்ச்சி.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தொழுதூர் வட்டத்தில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் குர்ஆன் கிராஅத்தை சகோதரி பௌஜியா ஓதினார். நிகழ்ச்சியை சகோதரி சாஜாத்தி வழிநடத்தினார். தப்ஸீர் விளக்க உரையை பெரம்பலூர் வட்ட பொறுப்பாளர் சகோதரி ரீனா வழங்கினார். தொடர்ந்து மறுமை குறித்து சகோதரி ஷர்மிளா உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் சகோதர சமுதாயத்தைச் சார்ந்த சகோதரிகளும் கலந்து கொண்டனர். குறிப்பாக ஆசிரியர் பணியில் உள்ள சகோதரி சமரசம், உரையை கவனமாக கேட்டு அதில் உள்ள கருத்துகளை எடுத்துச் சொன்னார். சகோதர சமுதாயத்தைச் சேர்ந்த ஐந்து சகோதரிகள் உட்பட மொத்தம் 35 பேர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## மன்னார்குடியில் அண்டை வீட்டார் பரப்புரை தொடர்சந்திப்பு.

மன்னார்குடி கிளையின் சார்பாக அண்டை வீட்டார் பரப்புரை தொடர் சந்திப்பின் ஒரு பகுதியாக, இன்று மன்னார்குடி பிரபல மகப்பேறு மருத்துவர் டாக்டர் தூரிகா MBBS, DGO (NRK மருத்துவமனை) அவர்களை மகளிர் அணி பொறுப்பாளர் சஹானாஸ் சந்தித்து, "சமரம்" சிறப்பிதழ் மற்றும் "அழகிய அண்டைவீடு" புத்தகத்தை வழங்கினார்.



## ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சென்னை மெட்ரோ சார்பில் யூடியூப் ஊடகவியலாளர்கள் சந்திப்பு.



ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் சென்னை மெட்ரோ சார்பாக 03.12.2025 அன்று அண்டை வீட்டார் உரிமைகள் கடமைகள் என்ற தலைப்பில் நாடு தழுவிய பரப்புரையின் ஒரு அங்கமாக youtube ஊடகவியலாளர்கள் சந்திப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சென்னை மெட்ரோ தலைவர் அதாவுல்லா சாகிப் தலைமையில் டாக்டர் KVS ஹபீப் முஹம்மது அவர்களின் சிறப்புரையுடன் முகப்பேர் பொறுப்பாளர் ஷாஹுல் ஹமீது அவர்களின் அறிமுக உரையோடு சிறப்பாக நிகழ்ச்சி நடந்தது. யுடூ புருட்டஸ் - மைனர் & சத்தியா, பேரலை - மில்டன்& இந்திரகுமார், அரன்செய் -மகிழ்னன் ஃபஸ்ட் லைன் - உமாபதி, ஜீவா டுடே - ஜீவசகாப்தன் கலந்து கொண்டனர். அவர்களுக்கு பரப்புரையின் நோக்கத்தை விளக்கி மடக்கோலை, சமரசம் மற்றும் அழகிய அண்டைவீடு நூல் அன்பளிப்பாக கொடுத்து,அவர்களின் கேள்விகளுக்கு டாக்டர் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். பரப்புரையின் நோக்கமும் அதன் வீரியமும் மிகவும் ஆழமானது இந்த பரப்புரை ஒரு வடிவம் கொடுத்து களத்தில் இறங்கி செய்யவேண்டிய அவசியமான ஒரு நிகழ்வு. இதன் மூலம் இஸ்லாம் மீது உள்ள தவறான புரிதல்களை களைய அருமையான சந்தர்ப்பம் என்றார்கள். மிக ஆர்வமாக அவர்கள் பரப்புரையின் நோக்கத்தை அறிந்து கொண்டார்கள் இதுபோன்ற நிகழ்வுகள் அவசியம் நடக்க வேண்டும். என்று ஆர்வமுடன் கூறினார்கள். இந்த சந்திப்பின்போது ஜமாஅத் தே இஸ்லாமி சென்னை மெட்ரோவின் செயலாளர் அஷ்ரப் அலி அவர்களும் மீடியா பொறுப்பாளர் சகோதரர் அஜ்மல் அவர்களும் உடன் இருந்தார்கள்.



## அண்டை வீட்டார் சண்டை வீட்டாரல்லர்:

பள்ளியில் படிக்கும் போது நகரங்களில் அண்டை வீட்டுக்காரர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதை விளக்க தமிழாசிரியர் ஒரு நிகழ்வை கூறுவார். ஒரு வீட்டில் இருந்து அந்த வீட்டின் உரிமையாளரான பெண் வெளியே வந்து தனது வாசலை பெருக்கி அந்த குப்பைகளை தனது இரண்டு பக்கமும் உள்ள வீட்டின் பக்கம் தள்ளிவிட்டு உள்ளே போய்விடுவார். பின்னர் அடுத்த வீட்டு பெண்மணி வந்து அதேபோல செய்வார். முதலில் பெருக்கிய பெண்மணி மறுமுறை வெளியே வந்து பார்த்தால் தனது வாசலில் குப்பை கிடப்பதை கண்டு பக்கத்து வீட்டுக்கார பெண்மணியுடன் சண்டை பிடிப்பார் என்று நகைச் சுவையாக கூறுவார்.

அண்டை வீட்டார் என்றாலே சண்டை வீட்டார் என்பது எழுதப்படாத விதியோ என்று எண்ணுமளவுக்கு சில மனிதர்களின் செயல்பாடுகள் அமைந்துள்ளது. இதைக்காணும் போது நமக்கு வியப்பும், வேதனையும் ஏற்படுகிறது. இந்த இடத்தில் தான் இறைவனின் வழிகாட்டுதல் நமக்கு தெளிவான விளக்கத்தை தருகிறது. “உறவினரான அண்டை வீட்டார், அந்நியர் ஆன அண்டை வீட்டார், பக்கத்தில் இருக்கும் நண்பர், வழிப்போக்கர் உங்கள் கைவசத்தில் உள்ள அடிமைகள்



10 இஸ்லாம் தினத்தந்தி அருள்தரும் ஆன்மிகம் 9-12-2025

**அண்டை வீட்டார் சண்டை வீட்டாரல்லர்**

-பி.சையத் இப்ராஹீம், சென்னை-28.

(பணியாளர்கள்) ஆகியோருடன் நல்லவிதமாக நடந்து கொள்ளுங்கள். (திருக்குர்ஆன் 4:36) இவ்வாறு கூறிய இறைவன், எவர் இவ்வாறு செய்ய வில்லையோ அவர்களை பற்றி இந்த வசனத்தின் இறுதியில் எச்சரிக்கை செய்கின்றான்.

'திண்ணமாக அறிந்து கொள்ளுங்கள் வீண் பெருமையிலும் கர்வத்திலும் உழல்பவர்களை இறைவன் நேசிப்பதில்லை'. எனவே, இறைநேசத்தை பெற வேண்டும் என்றால் அண்டை வீட்டாருடனும், மற்றவர்களுடனும் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதை அறிய முடிகிறது. மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "அல்லாஹ்வின் மீது ஆணையாக அவன் இறை நம்பிக்கை இல்லாதவன்" என்று மூன்று முறை கூறினார்கள். "யாரைப் பற்றி கூறுகிறீர்கள் இறைத்தூதரே?" என்று வினவப்பட்ட போது, "எவருடைய தீங்குகளிலிருந்து அவருடைய அண்டை வீட்டார் பாதுகாப்பு பெறவில்லையோ அவர்" என்று கூறினார்கள். அதாவது, 'அண்டை வீட்டாருடன் நல்ல முறையில் நடந்து கொள்வது இறை நம்பிக்கையோடு தொடர்புடையது' என்று கூறுவதன் மூலம் அதன் முக்கியத்துவத்தை நாம் உணர முடிகிறது. "அண்டை வீட்டார் பசித்திருக்க தான் மட்டும் வயிறார உண்பவன் இறை நம்பிக்கையாளன் அல்லன்" என்று அண்ணலார் கூறினார்கள். "அண்டை வீட்டாருக்கு காற்று புகாதவாறு உங்கள் வீட்டு சுவரை உயர்த்தாதீர்கள்" என்று நபிகளார் கூறினார்கள். இவ்வாறு அண்டை வீட்டாருக்கான முக்கியத்துவம் உயர்ந்து கொண்டே போவதை காணலாம். அண்ணலார் அவர்கள் கூறினார்கள்: "இறைவனிடம் இருந்து, இறைவசனங்களை கொண்டு வரும் வானவர் ஜிப்ரீல் (அலை) அண்டை வீட்டாரின் உரிமைகள் பற்றி கூறிக் கொண்டே இருந்தார். எந்த அளவுக்கு என்றால், அண்டை வீட்டாருக்கு நமது சொத்தில் கூட பங்கு கொடுக்கச் சொல்வாரோ என்று நான் எண்ணலானேன்" என்று கூறினார்கள். சொத்தில் பங்கு என்பது உடன் பிறந்தவர்களுக்கும், ரத்த பந்தம் கொண்டவர்களுக்கும் மட்டுமே கொடுக்கப்படுவது. அந்த அளவுக்கு அண்டை வீட்டாருடன் நல்லவிதமாக நடந்து கொள்ள வேண்டியது நமது கடமை என்பது இதன் மூலம் தெரிகிறது. மேலும், அந்த இறை வசனத்தில் "உறவினரான அண்டை வீட்டார், அன்னியரான அண்டை வீட்டார்" என்று கூறப்பட்டுள்ளது. எனவே, அவர்கள் நமது உறவினராகவோ, உறவினர் அல்லாதவராகவோ, அறிமுகமே இல்லாத பிற சமுதாயத்தை சார்ந்தவராகவோ இருந்தாலும் அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்பது ஆண்டவன் கட்டளை. அதைத் தொடர்ந்து, "பக்கத்தில் உள்ள நண்பர்கள், வழிப்போக்கர்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பக்கத்தில் உள்ள நண்பர்கள் என்பது நாம் வேலை செய்யும் இடத்தில் அல்லது பயணத்தில் இருக்கும் போது உடன் பயணிப்பவர்கள் என சிறிது நேரம் நம்முடன் தொடர்பு இருப்பவர்களாயினும், அவர்களுடனும் நாம் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

சாலைகளில் நின்று கொண்டு வாகனங்களை பிறருக்கு தொல்லை தரும் அளவுக்கு நிறுத்திக்கொண்டு, பொழுது போக்கிக்கொண்டிருப்பவர்களும், ரெயில்களில் பயணம் செய்யும்போது சக பயணிகளின் தூக்கத்தை கெடுக்கும் அளவுக்கு கூச்சல் குழப்பம் செய்து கொண்டிருக்கும் இளைஞர்களும்

நிச்சயமாக அந்தப்பழக்கத்தை கைவிட வேண்டும். பொதுவாக, நமது நடவடிக்கைகள் எந்த வகையிலும் பிறருக்கு தொல்லை தரக் கூடியதாக அமைந்துவிடக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாய் இருப்போம். உண்மையான இறை நம்பிக்கையாளர்களாய் திகழ்ந்து இறை நேசத்தை பெறுவோம்.

## அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை குறித்து ஐஸ் ஹவுஸ் காவல் நிலைய இன்ஸ்பெக்டருடன் சந்திப்பு.

சென்னை, 21 நவம்பர் 2025: சென்னை ஐஸ் ஹவுஸ் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் முகமது சபியுல்லா அவர்களை இன்று நேரில் சந்தித்து, நவம்பர் 21 முதல் 30 வரை நடைபெற உள்ள "அண்டை வீட்டார் உரிமைகள்" பத்து நாட்கள் பரப்புரை குறித்து விரிவாக தெரிவிக்கப்பட்டது. இந்த சந்திப்பின்போது, சமரசம் இதழ், ரேடியன்ஸ் மற்றும் டாக்டர் கே.வி.எஸ். ஹபீப் முகமது அவர்கள் எழுதிய "அழகிய அண்டை வீடு" உள்ளிட்ட நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. அண்டை வீட்டார் உரிமைகள் சமூக நல்லிணக்கத்திற்கு தீர்மானமானவை என்பதை சுட்டிக்காட்டி, இப்பத்து நாட்கள் பரப்புரையின் போது மேற்கொள்ளப்பட உள்ள நடவடிக்கைகள், பகுதி மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கும் முறைகள், அண்டை வீட்டார் பாதுகாப்பு மற்றும் பரஸ்பர பொறுப்பு உள்ளிட்ட அம்சங்கள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது. இந்த முயற்சியை பாராட்டிய இன்ஸ்பெக்டர் முகமது சபியுல்லா அவர்கள், சமூக ஒற்றுமை மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்தும் இத்தகைய விழிப்புணர்வு நடவடிக்கைகள் மிகவும் தேவையானவை என தெரிவித்தார். சமூகத்தில் ஒவ்வொருவரும் தங்கள் அண்டை வீட்டாரின் நலனை உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதையும், அண்டை வீட்டார் உரிமைகள் குறித்த விழிப்புணர்வை பலப்படுத்துவதே இம்முயற்சியின் முக்கிய நோக்கம் என்பதையும் வலியுறுத்தப்பட்டது.






## ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சென்னை மெட்ரோ சார்பில் இளைஞர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சி.

23.11.2025 அன்று ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் சென்னை மெட்ரோ சார்பாக, "இளைஞர்களுக்கு முன்மாதிரி – அண்டை வீட்டார் முன்மாதிரி சமூகம்" என்ற தலைப்பில், அண்டை வீட்டார் உரிமைகள் நாடு தழுவிய பரப்புரையை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் டாக்டர் KVS ஹபீப் முஹம்மது அவர்கள் சிறப்புரை ஆற்றினார். மெட்ரோ நாஜிம்

அத்தாவுல்லா அவர்களும் உரையாற்றினார். நிகழ்ச்சியை சென்னை மெட்ரோ ஆலோசனை குழு உறுப்பினர் அஹமத் அலி அவர்கள் வழிநடத்தினார். இதில் மெட்ரோ செயலாளர் மற்றும் 100க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை குறித்து பா.சிவக்குமாருடன் சந்திப்பு.




ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சென்னை மெட்ரோ சார்பாக, 28.11.2025 அன்று "அண்டை வீட்டார் உரிமைகள் மற்றும் கடமைகள் – முன்மாதிரி அண்டை வீட்டார், முன்மாதிரி சமூகம்" என்ற தலைப்பிலான நாடு தழுவிய பரப்புரையின் ஒரு பகுதியாக, மரியாதைக்குரிய வழக்கறிஞர் பா.சிவக்குமார் (தாயகம் கவி), திரு.வி.கா.நகர் எம்.எல்.ஏ.வும் திராவிடக் கழகத்தின் மாநில துணை அமைப்புச் செயலாளருமான அவர்களை நேரில் சந்தித்து பரப்புரையின் விளக்கம் அளிக்கப்பட்டது. பரப்புரையின் நோக்கத்தை மிகுந்த ஆர்வத்துடன் கேட்டறிந்த அவர், இதுபோன்ற நிகழ்வுகள் அவசியம் நடைபெற வேண்டும் என்றும், பெரிய அளவிலான நிகழ்வுகள் இருந்தால் தெரிவிக்குமாறு கூறி, தானும் கலந்து கொள்வதாக உற்சாகத்துடன் தெரிவித்தார். இந்த சந்திப்பின்போது ஜமாஅத் தே இஸ்லாமி ஹிந்த் ஆலோசனை குழு உறுப்பினரும் சமரசம் இதழின் பொறுப்பாசிரியருமான சகோதரர் வி.எஸ். முஹம்மத் அமீன் அவர்களும், சென்னை மெட்ரோ ஆலோசனை குழு உறுப்பினர் ஜான் முஹம்மத் அவர்களும், சென்னை மெட்ரோ செயலாளர் அஷ்ரப் அலி அவர்களும் உடன் இருந்து, பல்வேறு விஷயங்கள் குறித்து கலந்துரையாடினர்.



## பாலவாக்கம் மஸ்ஜிதே ரஹ்மானில் அண்டை வீட்டார் பரப்புரை நிகழ்ச்சி.

30.11.2025 காலை 10.30 மணிக்கு, ECR பாலவாக்கம் ஹல்கா மஸ்ஜிதே ரஹ்மான் நீலாங்கரை பள்ளி வளாகத்தில் அண்டை வீட்டார் பரப்புரை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பெருமளவு இளைஞர்கள் மற்றும் பெண்கள் பங்கேற்று பயன் பெற்றனர். நிகழ்ச்சியின் இறுதியில் கேள்வி–பதில் அமர்வு நடைபெற்றதுடன், மதிய உணவும் பகிரப்பட்டு நிகழ்ச்சி நிறைவு பெற்றது. அஸர் தொழுகைக்கு பிறகு, பரப்புரை தலைப்பில் "No Parking" பலகைகள் வீடுகளின் கதவுகளில் பொருத்தப்பட்டதுடன், ஆட்டோக்களிலும் விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன.

# ஆலந்தூரில் அண்டை வீட்டார் பரப்புரை தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள்.




ஆலந்தூரில் அண்டை வீட்டார் பரப்புரை தொடர்பாக பொது பயான் ஒன்று நடத்தப்பட்டது. இதில் 35 நபர்கள் கலந்து கொண்டனர். கலந்து கொண்டவர்களுக்கு மடக்கோலை வழங்கப்பட்டதுடன், பயானுக்கு வந்தவர்கள் தங்கள் வீடுகளைச் சுற்றியுள்ள அண்டை வீட்டாரிடமும் பரப்புரை செய்திகளை எடுத்துரைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. மேலும், உயர் பதவிகளில் உள்ள நீதிபதி, பேராசிரியர், பள்ளித் தலைமை ஆசிரியர், வங்கி மேலாளர் உள்ளிட்டவர்களை நேரில் சந்தித்து பரப்புரையின் நோக்கங்கள் விளக்கப்பட்டு, புத்தகங்களும் வழங்கப்பட்டன. அண்டை வீட்டாரிடமும், பொதுத் தளங்களில் உள்ள மக்களிடமும் பரப்புரை செய்தி எடுத்துரைக்கப்பட்டது. இதற்கான புகைப்படங்கள் முன்பே பகிரப்பட்டுள்ளன. பாலவாக்கத்திலிருந்து பெறப்பட்ட அண்டை வீட்டார் பரப்புரை செய்தி, நீதிபதி, பேராசிரியர், வங்கி மேலாளர் உள்ளிட்ட பொறுப்பான பதவிகளில் உள்ளவர்களிடம் வழங்கப்பட்டது. மேலும், மேடவாக்கத்தில் சாவி கொத்து பெறப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

# குழந்தைகளுக்கான வண்ணம் தீட்டும் போட்டி மற்றும் பயிற்சி முகாம்.



குழந்தைகளுக்கான வண்ணம் தீட்டும் போட்டி நடத்தப்பட்டு, சிறப்பாக செயல்பட்டவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து, ஸ்காலர்ஸ் அகாடமி சார்பில் அண்டைவர்களுடன் நடத்தை குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது. இப்பயிற்சி முகாம் ஆண் மாணவர்கள் மற்றும் பெண் மாணவர்கள் என தனித்தனியாக இரண்டு அமர்வுகளாக நடத்தப்பட்டு, ஒவ்வொரு குழுவிலும் தலா 15 மாணவர்கள் பங்கேற்றனர்.

# அண்டைவர்களின் உரிமைகள் குறித்து விழிப்புணர்வு பிரச்சார அறிக்கை.

எம்.எம்.டி.ஏ பகுதியில் குர்ஆன் மற்றும் ஸுன்னாவின் ஒளியில் அண்டைவர்களின் உரிமைகள் குறித்து வாரந்தோறும் நான்கு கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதன் தொடர்ச்சியாக, அண்டைபுற பெண்கள் தேநீர் விருந்திற்கு அழைக்கப்பட்டு, எங்களது பிரச்சாரம் குறித்து அறிமுகப்படுத்தப்பட்டதுடன், அவர்களுடன் தனிப்பட்ட கலந்துரையாடலும் நடைபெற்றது. மேலும், எம்.எம்.டி.ஏ மற்றும் ஆசாத் நகர் பகுதிகளில் புத்தகங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. அதேபோல், எங்கள் பகுதியில் உள்ள இரண்டு மதரஸாக்களும் ஒரு பள்ளியும் பார்வையிடப்பட்டு, அண்டைவர்களின் உரிமைகள் குறித்த கருத்துகள் விளக்கப்பட்டு,

புத்தகங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன. பள்ளி மற்றும் மதரஸாக்களில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த போட்டிகள் மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டு, இன்ஷா அல்லாஹ் விரைவில் நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டது.

## உள்-சமூக உரையாடல்களிலிருந்து சமூகங்களுக்கு இடையிலான உரையாடலுக்கு முன்னேற வேண்டும்: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தலைவர் சையத் சஆதத்துல்லாஹ் ஹுசைனி.

*புது தில்லி, 02 டிசம்பர் 2025:* ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அமைப்பின் மத்திய ஊடகத் துறை ஏற்பாடு செய்திருந்த 2025 நவம்பர் 29, 30 ஆகிய இரு தினங்களில் நடைபெற்ற ‘*Qasas 2.0 – Media Mastery Boot Camp*’ நிகழ்ச்சி புது தில்லியில் நிறைவுற்றது. இதன் இறுதி அமர்வில் அவைத் தலைவரும் ஜமாஅத் தேசியத் தலைவருமான சையத் சஆதத்துல்லாஹ் ஹுசைனி அவர்கள் எழுச்சியூட்டும் உரையாற்றினார். ஊடகத் துறையில் பணியாற்றுபவர்கள் தங்கள் பார்வையையும் ஈடுபாட்டையும் விரிவுபடுத்த வேண்டும் என வலியுறுத்திய அவர், “ஊடக வல்லுநர்கள் உள்-சமூக உரையாடல்களைக் கடந்து, முஸ்லிம்களை பரந்த சமூகத்துடன் இணைக்கும் சமூகங்களுக்கு இடையிலான உரையாடலை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்” என்று தெரிவித்தார். இளைய தலைமுறையினரை வளர்த்தெடுப்பதும் வழிகாட்டுவதும் அவசியம் என சுட்டிக்காட்டிய அவர், தொழில்நுட்பத்தில் இயல்பாகவே திறமை வாய்ந்த Gen Z இளைஞர்கள் இன்றைய விஷயங்களில் முக்கிய பங்கு வகிப்பதாகவும், அவர்களை டிஜிட்டல் மற்றும் சமூக ஊடகத் தளங்களுக்கான பணிக்குத் தயார்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார். மேலும், பத்திரிகையாளர்கள், நிருபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரைத் தொடர்ந்து சந்தித்து தொழில்முறை உறவுகளை உருவாக்கி, பரஸ்பர புரிதலை ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார். இந்த இரண்டு நாள் பயிற்சி முகாமில் பத்திரிகையாளர்கள், அறிஞர்கள், மாணவர்கள், ஊடக வல்லுநர்கள் மற்றும் ஜமாஅத் மாநில அமைப்புகளின் ஊடகப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். சிறப்புரைகள், ஊடகப் பயிலரங்குகள், முன்னணி ஊடக நிறுவனங்களுக்கான பயணங்கள், பொது கருத்து, ஜனநாயகத்திற்கான அச்சுறுத்தல்கள், ஊடகம்–சமூக உறவுகள் குறித்த குழு விவாதங்கள் உள்ளிட்ட பல்வேறு அமர்வுகள் இடம்பெற்றன. மூத்த பத்திரிகையாளர்களான ரஷீத் கிட்வாய், ஜியா உஸ் ஸலாம், ஆதித்ய மேனன் உள்ளிட்டோர் திறன்வாய்ந்த ஊடகத் தொடர்பு, ஊடகமும் சமூக அமைப்புகளும் இடையிலான இடைவெளியைக் குறைத்தல், செய்தித் துறையின் இயக்கவியல் ஆகிய தலைப்புகளில் சிறப்பு அமர்வுகளை நடத்தினர்.






ஊடக உத்தி, நிறுவன வளர்ச்சி, செயற்கை நுண்ணறிவு உதவியுடனான உள்ளடக்க உருவாக்கம், சமூக ஊடக ஈடுபாடு உள்ளிட்ட அம்சங்களும் விவாதிக்கப்பட்டு, திறந்த அமர்வு மற்றும் குழு விவாதங்களுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது; பங்கேற்பாளர்கள் தங்கள் கருத்துகளையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர்.

## புதுச்சேரி சமூக நல்லிணக்க இயக்கம்



புதுச்சேரி சமூக நல்லிணக்க இயக்கம் சார்பாக நடைபெற்ற குழந்தைகள் வாசிப்பு திருவிழாவில், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் புதுச்சேரி சார்பாக கலந்து கொண்டு நிகழ்ச்சி சிறப்பிக்கப்பட்டது. இதில் குழந்தைகளின் வாசிப்பு திறனை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. குழந்தைகளுக்கு புத்தகம் படிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டதுடன், சிந்தனைத் திறனை வளர்க்கும் வகையில் சமூகம் சார்ந்த மனிதநேய மற்றும் சகோதரத்துவ சம்பவங்களை எடுத்துக்காட்டுகளாகக் கொண்டு



உரைகள் நிகழ்த்தப்பட்டன. கதைகள் வாசிப்பு, கற்றல் திறன் வளர்ப்பு, கதை சொல்லுதல் உள்ளிட்ட வாசிப்பை மையமாகக் கொண்ட பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. புதுச்சேரியின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த பலசமய குழந்தைகள் இதில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## புதுச்சேரியில் சிறப்பு குழந்தைகள் இல்லத்தில் ஜமாஅத் மக்கள் சேவை சந்திப்பு.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் புதுச்சேரி – மக்கள் சேவை சார்பாக, புதுச்சேரியில் இயங்கிவரும் RAINBOW FOUNDATION TRUST (Home for Special Children) அமைப்பைச் சந்திக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் அங்கு தங்கியிருக்கும் சிறப்பு தேவைகள் கொண்ட குழந்தைகள் மற்றும் பெரியவர்களுடன் நலம் விசாரித்து கலந்துரையாடல் செய்யப்பட்டது. தொடர்ந்து, அங்கு தங்கியிருக்கும் அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டதுடன், RAINBOW FOUNDATION TRUST பொறுப்பாளர்களுக்கு இஸ்லாமிய நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இச்சந்திப்பு நிகழ்வில் ஜமாஅத் சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் கலந்து கொண்டனர்.

## நெல்லித்தோப்பு மசூதியில் சமூக நல்லிணக்க நடைபயணக் குழுவுடன் கலந்துரையாடல்.

கடந்த 06.12.2025 சனிக்கிழமை நெல்லித்தோப்பு மசூதியைப் பார்வையிட வந்த

புதுச்சேரி சமூக நல்லிணக்க இயக்க நடைபயணக் குழுவை அன்புடன் வரவேற்று கலந்துரையாடல் நடைபெற்றது; இதன் போது பள்ளிவாசலில் நடைபெறும் நிகழ்வுகள் குறித்து கருத்துப் பரிமாற்றமும் இடம்பெற்றது. முன்னதாக, பள்ளிவாசல் முத்தவல்லி சகோ. சுப்ஹான் பாய் அனைவரையும் வரவேற்று, இன்றைய காலகட்டத்தில் இத்தகைய நல்லிணக்கப் பயணங்கள் அவசியம் என்றும், ஒருவர் மற்றொருவரை புரிந்துகொண்டு அனைவரும் நல்லிணக்கமாக வாழ வேண்டும் என்றும் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வாழ்த்துரை வழங்கினார். நிகழ்வில் புதுச்சேரி பகுதியைச் சேர்ந்த மத நல்லிணக்கத்தை விரும்பும் பல சமயங்களைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டனர். புதுச்சேரி வரலாற்று ஆசிரியரும் கவிஞருமான கலைமாமணி நா. இராசசெல்வம் பேசுகையில், தனது சமகால நிகழ்வுலக அனுபவங்களை முன்வைத்து, இஸ்லாம் வலியுறுத்தும் கோட்பாடுகளை இதர மத நண்பர்களுக்கு அழகிய முறையில் எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் சிற்றுரை ஆற்றிய சகோ. அன்வர் அலி, பள்ளிவாசலில் நடைபெறும் வணக்க வழிபாட்டு முறைகள், அனைவரும் ஒன்றிணைந்து இறைவனை வணக்கும் கூட்டு தொழுகையின் முக்கியத்துவம் மற்றும் பள்ளிவாசலில் நடைபெறும் பல்வேறு சமூக சேவைகள் குறித்து விளக்கினார். நிகழ்ச்சியின் இறுதியில் மக்ரிப் தொழுகை நிகழ்வை விருந்தினர்கள் அனைவரும் பள்ளிவாசலின் உள்ளே சென்று பார்வையிட்டனர்; நீண்ட நாட்களாக உள்ளே சென்று பார்வையிட வேண்டும் என்ற விருப்பம் இன்று நிறைவேறியதாக மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்தனர். இதன் தொடர்ச்சியாக, கலைமாமணி நா. இராசசெல்வம் அவர்களுக்கு 'சமரசம்' அறிமுகம் செய்யப்பட்டு, 'அண்டை வீட்டார்' பரப்புரை சிறப்பிதழ் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.



# திரு. வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலத் தலைமையகத்தில் சந்திப்பு



திரு. வி.க. நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. தாயகம் கவி அவர்கள் இன்று (06.12.2025) ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலத் தலைமையகத்திற்கு வருகை தந்து, ஜமாஅத்தின் அகில இந்திய துணைத் தலைவர் ஜனாப் மலிக் முதஸ்ஸிம் கான் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடினார். இச்சந்திப்பின் போது ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலத் தலைவர் மௌலவி ஹனீஃபா மன்பயீ, துணைத் தலைவர் K.M. சிராஜ் அஹ்மத் மற்றும் மாநில நிர்வாகிகள் உடனிருந்தனர்.



# காட்டுப்பாக்கம் பகுதியில் அனைவருக்குமான SIR படிவம் நிரப்பும் முகாம்.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மற்றும் காட்டுப்பாக்கம் முஹல்லா தன்னார்வலர்கள் இணைந்து அனைவருக்குமான SIR படிவம் நிரப்பும்



முகாம் நான்காவது நாளாக 16.11.2025 அன்று நடைபெற்றது. காலை 6.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை பூந்தமல்லி கன்டோன்மென்ட் பகுதியில் உள்ள மஸ்ஜிதே நூர் வளாகத்தில் நடைபெற்ற இந்த முகாமில் பொதுமக்கள் பலர் பயனடைந்தனர்.



# கோவையில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பில் SIR சிறப்பு முகாம்கள்.

கோவை மாநகரின் பல்வேறு பகுதிகளில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பாக இன்று காலை 10 மணி முதல் இரவு 9 மணி வரை SIR படிவங்களை பொதுமக்களுக்கு முழுமையாகவும் சரியான முறையிலும் பூர்த்தி செய்து வழங்கும் சிறப்பு முகாம்கள் நடைபெற்றன. படிவங்களை நிரப்புவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி பெற்ற ஜமாஅத் மற்றும் SIO ஊழியர்கள், பொதுமக்களின் SIR படிவங்களை பூர்த்தி செய்து வழங்கினர். காலை முதலே ஒவ்வொரு முகாம்களிலும் மக்கள் வரிசையாக நின்று, டோக்கன்கள் பெற்றுக் கொண்டு காத்திருந்து தங்களது SIR படிவங்களை பூர்த்தி செய்து சென்றனர். முகாம்கள் அனைத்திலும் மக்கள் பெருந்திரளாக வருகை தந்து, மிகுந்த ஒத்துழைப்புடன் செயல்பட்டனர். இன்று ஒரே நாளில் மட்டும் 1500-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் இந்தச் சேவையின் மூலம் நேரடியாக பயனடைந்துள்ளனர்.

# APCR தேசிய செயலாளர் சென்னை வருகை; தலைவர்கள் ஆலோசனை கூட்டம்.



Association for Protection of Civil Rights (APCR) அமைப்பின் தேசிய செயலாளர் ஜனாப் நதீம் கான் அவர்கள் சென்னை வருகை புரிந்ததை முன்னிட்டு, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பாக அனைத்து இயக்கங்கள் மற்றும் அரசியல்



கட்சி பிரமுகர்கள், தலைவர்களின் ஒன்றுகூடல் நிகழ்ச்சி 14.11.2025 மாலை சென்னையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாநிலத் தலைவர் மௌலவி A. முஹம்மது ஹனீபா மன்பயீ அவர்கள் துவக்க உரையாற்றினார். தொடர்ந்து, ஜனாப் நதீம் கான் அவர்கள் SIR தொடர்பான சவால்கள், அதன் ஆபத்துகள் மற்றும் ஏற்படும் குழப்பங்கள் குறித்து விரிவாக விளக்கி, அவற்றை எவ்வாறு சரி செய்ய வேண்டும் என்பதையும் எடுத்துரைத்தார். மேலும், தலைவர்கள் மற்றும் பிரமுகர்களின் பல்வேறு ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டு, எழுப்பப்பட்ட கேள்விகளுக்கும் பதிலளித்தார். இந்நிகழ்ச்சியை மாநிலச் செயலாளர் S.N. சிக்கந்தர் அவர்கள் வழிநடத்தினார்.

## குடியாத்தத்தில் அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரை; தொல். திருமாவளவன் எம்.பி.யை ஜமாஅத் நிர்வாகிகள் சந்திப்பு.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் குடியாத்தம் கிளை சார்பாக அண்டை வீட்டார் உரிமைகள் பரப்புரையின் ஒரு பகுதியாக, 30.11.2025 அன்று குடியாத்தம் வருகை தந்த வி.சி.க தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரான திரு. தொல். திருமாவளவன் அவர்களை கிளைத் தலைவர் இக்பால், மௌலவி அப்துல் காதிர் உமரி மற்றும் கிளை ஊழியர்கள் நேரில் சந்தித்தனர். இச்சந்திப்பின் போது ‘அழகிய அண்டை வீட்டார்’ புத்தகம், ‘சமரசம்’ இதழ் மற்றும் மடக்கோலை ஆகியவை அவருக்கு வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைத்து முக்கியஸ்தர்கள் மற்றும் சகோதர சமய நண்பர்களுக்கும் புத்தகங்கள் மற்றும் மடக்கோலைகள் விநியோகிக்கப்பட்டன. மேலும், மசூதி நிர்வாகத்தின் சார்பாக திருக்குர்ஆன் விளக்கவுரை அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்ட திரு. தொல். திருமாவளவன், வழங்கப்பட்ட நூல்களை ஆர்வத்துடன் பார்வையிட்டார்.



## சாலையோரம் உறங்கும் 750 ஆதரவற்றோருக்கு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பில் போர்வை வழங்கும் சேவை.

திருச்சி, டிசம்பர் 12: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் திருச்சி சார்பாக, சாலையோரத்தில் உறங்கும் ஆதரவற்றோருக்கு போர்வைகள் வழங்கும் சேவை கடந்த 15 ஆண்டுகளாக

தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தற்போதைய கடும் குளிர் நிலையை கருத்தில் கொண்டு, கடந்த இரண்டு நாட்களாக திருச்சி மாநகரம் முழுவதும் சாலையோரங்களில் உறங்கும் ஆதரவற்றோருக்கு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் பாலக்கரை, பீமநகர், கூனி பஜார், வரகனேரி, ஏர்போர்ட், அண்ணா நகர், ஆழ்வார்தோப்பு, பெல், மஹாலெட்சுமி நகர் கிளை நிர்வாகிகள் மற்றும் எஸ்.ஐ.ஓ., அஸ்ஸலாம் இஸ்லாமி கல்லூரி மாணவர்கள் பயனாளிகளின் இருப்பிடத்திற்கே நேரில் சென்று போர்வைகள் வழங்கினர். இதன் மூலம் சுமார் 750 ஆதரவற்றோர் பயனடைந்தனர். இந்தப் பணிகள் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநகர தலைவர் முனைவர் ஹஜ் மொய்தீன் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மக்கள் சேவை பொறுப்பாளர் ஐ. நவாஸ் கான் தலைமையில் மேற்கொள்ளப்பட்டன. இரவுநேர கடும் குளிரில் நடுங்கிய ஆதரவற்றோருக்கு போர்வைகள் வழங்கிய கல்லூரி மாணவர்களை பொதுமக்கள் பாராட்டினர்.


மாலை மலர்

இந்தியாவின் **No.1** மாலை நாளிதழ்

**MAALAI MALAR**

திருச்சி 12-12-2025 (வெள்ளிக்கிழமை) 12 பக்கம் ₹ 5 | மலர் 48 இதழ் 360

TRICHY 12-12-2025 (FRIDAY) 12 PAGES ₹ 5 | VOL: 48 ISSUE: 360



திருச்சியில்

**ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பில் சாலையோரம் தூங்கும் 750 ஆதரவற்றோருக்கு போர்வை**